உதயன்

சுடர்: 29 கதிர்: 212 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 12, வியாழன் 26.06.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

32°C
தெளிவான வானிலை



இலங்கையின் விமோசனம் ஆட்சியாளர்களின் கைகளில்
பக்கம் 12

# ஐ.நா. விசாரணை ஆலோசனைக்கு அனுபவம் கொண்ட மூவர் தெரிவு

## பெயர் விவரங்களை வெளியிட்டார் ஆணையாளர் நவிப்பிள்ளை



மார்ட்டி அத்திசாரி சில்வியா கார்ட்ரைட் அஸ்மா ஜெகாங்ஹீர்

நியூயோர்க், ஜூன் 26
இலங்கையில் நடைபெற்றது என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஐ.நா. குழுவுக்கு ஆலோசனைகளை வழங்கவுள்ள மூன்று வல்லுநர்களின் விவரங்களை அறிவித்துள்ளார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்நவநீதம்பிள்ளை.
சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்றுள்ளவரும், பின்லாந்து அரசின் முன்னாள் ஜனாதிபதியுமான மார்ட்டி அத்திசாரி, நியூஸிலாந்தின் முன்னாள் ஆளுநர் ஜெனரல் சில்வியா கார்ட்ரைட் மற்றும் பாகிஸ்தான் உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் அஸ்மா ஜெஹாங்கீர் ஆகியோரே இந்தப் பணிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த மார்ச் மாதம் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இலங்கை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்

20 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. விசாரணையை முறியடிக்க மாற்றுப் பொறிமுறை அவசியம்

### சகல கட்சிகளையும் கூட்டி ஆராயுங்கள் என்கிறார் தயான்



கொழும்பு, ஜூன் 26
ஐ.நா. விசாரணையை நிராகரித்துள்ள நிலையில் எதிர்காலத்தில் சர்வதேச மட்டத்தில் எழும் சவால்களை முறியடிப்பதற்குரிய மாற்று வழிமுறைகள் குறித்து அரசு ஆழமாக சிந்திக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அரசியல் விமர்சகரும் ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதியுமான பேராசிரியர் தயான் ஜயதிலக.
இது விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வட்டமேசை மாநாட்டை அவசரமாக ஏற்பாடுசெய்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட நாடாளுமன்

20 ஆம் பக்கம் பார்க்க



## விமானம் மீது துப்பாக்கிச் சூடு
பக்கம் 15

## விஜித தேரர் நேற்று கைது

கொழும்பு, ஜூன் 26
காயங்களுக்குள்ளாகிக் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த ஜாதிக பல சேனா இயக்கத்தின் தலைவர் வட்டரக்கே விஜித தேரர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொய் முறைப்பாட்டை வழங்கிய காரணத்தினால் அவரை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண கூறுகின்றார்.

20 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. விசாரணை மூலம் விமோசனம் வரக்கூடும்

### சுவிஸ் தூதுவருடனான சந்திப்பின் பின் வடமாகாண முதலமைச்சர் கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 26
"ஐ.நா. விசாரணகளின் பின்னர் வடக்கில் இராணுவத்தின் தலையீடுகள் தொடர்பில் நாம் தெரிவித்துவரும் கருத்துக்களை சர்வதேச சமூகம் கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று என்னிடம் தெரிவித்தார் சுவிஸ் தூதுவர் தோமஸ்ரன் லிப்ரன். சர்வதேச விசாரணையின் மூலம் எமக்கு விமோசனம் வரக்கூடும் எனும் நம்பிக்கை பிறந்துள்ளது"- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கும் இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் தோமஸ்ரன் லிப்ரனுடனான சந்திப்புத் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க

## வாக்காளராக பதிய காணிகள் பிடித்தோரும் விண்ணப்பமாம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மக்களும், தம்மை யாழ்.மாவட்ட வாக்காளர்களாகப் பதிவதற்கு பி.சி படிவம் ஊடாக விண்ணப்பித்துள்ளனர் என்று தெரியவருகின்றது. தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணி

20 ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கி இறந்த சிறுவனின் குடும்பத்துக்கு நட்டஈடு

யாழ்ப்பாணம், ஜூன் 26
மின்சார சபையின் கவனயீனம் காரணமாக, மின்சாரத் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்த நெடுந்தீவைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவனின் குடும்பத்துக்கு ரூபா 4 இலட்சம் நட்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது நீதிமன்றம்.
நெடுந்தீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மங்களதாஸ் யதுசன் என்ற சிறுவனே கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி இவ்வாறு உயிரிழந்தவராவார். குறித்த பகுதியில் அப்போது மின்சார திருத்தப் பணிகள் நடந்து கொண்டிருந்தன. மின்சாரக் கம்பம் ஒன்றைக் கம்பியால் கட்டி, அதனை பனைமரம் ஒன்றில் சுமார் ஒன்றரை அடி உயரத்தில் கட்டியிருந்தனர் மின்சார சபையினர். மக்கள் பயன்படுத்தும்

20 ஆம் பக்கம் பார்க்க



யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் தோமஸ்ரன் லிப்ரனை, தனது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

## இந்தியாவுக்கான இலங்கை தூதர் செனவிரட்ண

கொழும்பு, ஜூன் 26
இந்தியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் சுதர்ஷன செனவிரட்ன, ஜனாதிபதியிடமிருந்து தனது நியமனக் கடிதத்தை நேற்றுப் பெற்றுக் கொண்டார்.
இந்தியாவுக்கான தூதுவராக கடமையாற்றிய பிரசாத் காரியவசம், அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில்

20 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண சபை இன்று கூடுகின்றது.

யாழ்ப்பாணம், ஜூன் 26
வடக்கு மாகாண சபையின் 11 ஆவது அமர்வு இன்று காலை 9.30 மணிக்கு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இன்றைய அமர்வில் நியதிச் சட்டங்கள் தொடர்பிலான விவாதம் எடுத்துக் கொள்ளப்

20 ஆம் பக்கம் பார்க்க

குடிப் பழக்கத்தை கட்டுப்படுத்துவது எப்படி?
பக்கம் 13

## தமிழக மீனவர்கள் 64 பேரும் விடுதலை

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவை அடுத்து

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு இந்திய அரசு ராஜதந்திர முயற்சிகளை ஆரம்பித்துள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையிட் அக்பர்தீன் கூறியிருந்த நிலையில், இலங்கை ஜனாதிபதியால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், ஜூன் 26
இலங்கைக் கடற்படையினரால் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த

20 ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றுக்கு போலியான ஆவணங்களை கொடுத்தவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 26

திருட்டுக் குற்றச்சாட்டில் கைதானவரை போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து பிணை எடுக்க முற்பட்டவர் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார். இரண்டாவது சந்தேக நபர் தான் நிரபராதி என்று கூறியதனால் அவரை விசாரிக்க தவணை வழங்கப்பட்டது.

யாழ்.நீதிமன்றில் கடந்த மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. குருநகரைச் சேர்ந்த ஒருவர் திருட்டுக் குற்றச்சாட்டில் கைதானார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவரைப் பிணையெடுப்பதற்கே குருநகரைச் சேர்ந்த மற்றொரு நபர் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளார்.

யாழ்.பிரதேச செயலாளரது கையொப்பம் அவரது முத்திரை என்பனவற்றைப் போலியாகத் தயாரித்து முத்திரையிடப்பட்ட ஆவணங்களை சந்தேக நபர் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார். ஆவணங்களை பரிசீலித்த நீதிமன்ற உத்தியோகத்தர் அவற்றில் சந்தேகம் கொண்டு ஆராய்ந்தபோது அவை போலியானவை என்று தெரியவந்தது. அதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டு. விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவருக்கு எதிராக குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிரதான சந்தேக நபர் தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து தீர்ப்புக்காக வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. இரண்டாவது சந்தேக நபர் தொடர்பான வழக்கு விளக்கத்துக்காக ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-4)

# வீட்டுத் திட்டத்தில் ஊழல் எனக் கூறி ஒட்டுசுட்டானில் மக்கள் போராட்டம்

## உண்மைக்குப் புறம்பாக நடத்தப்பட்டது என்கிறது பிரதேச செயலகம்

ஒட்டுசுட்டான், ஜூன் 26

தமக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லையெனவும், அதிகாரிகள் பக்கச்சார்பாக செயற்படுகின்றனர் எனவும் தெரிவித்து முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் இந்த ஆர்ப்பாட்டம் சரியான காரணங்கள் இன்றி சிலரின் திட்டமிட்ட நடவடிக்கையால் மேற்கொள்ளப்பட்டதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது; நேற்று மாங்குளம் பனிக்கன்குளம், ஒலுமடு, கற்சிலைமடு. போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த சிலர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்கள் தாம் இந்திய வீட்டுத்திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளோம் என்றும் பிரதேச செயலக அதிகாரிகள் பக்கச்சார்பாக செயல்படுகின்றனர் என்றும் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

எனினும் ஆர்ப்பாட்டம் நடத்த வந்தவர்கள் உண்மையில் பாதிக்கப்படாதவர்கள் என்றும் அவர்களை சிலர் தூண்டிவிட்டு பிரதேச செயலருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த அழைத்து வரப்பட்டவர்கள் என்றும் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு கீழ் பல கிராமங்களுக்கு இந்திய வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டன. அவற்றில் பல தற்போது ஆள்களற்ற வீடுகளாக மாறியுள்ளன. எனவே அடுத்த கட்ட திட்டங்களில் வீடு அவசியமான பயனாளிகளை முன்னிலைப்படுத்தி பயனாளிகள் தெரிவு இடம்பெற்றது. குடும்ப அங்கத்தவர்கள் குறைந்த பயனாளிகளுக்கு அடுத்த கட்டங்களில் வீட்டுத் திட்டம் வழங்குவதாகவும் உறுதியளிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று பிரதேச செயலகம் தெரிவித்தது. (ஐ-500)

## போர்க்கால மதிப்பீட்டு அறிக்கையை ஒப்படைப்பதற்கு இழுத்தடிப்பு

கொழும்பு, ஜூன் 26

மூன்று மாதங்களில் பகிரங்கப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போர்க் கால இழப்பீடு தொடர்பான தொகை மதிப்பீட்டு அறிக்கை 6 மாதங்களின் பின்னர் அரசிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

'போர் இழப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொகை மதிப்பீட்டு அறிக்கை இன்னும் 3 வாரங்களில் அரசிடம் கையளிக்கப்படும்' என்று தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்கள பணிப்பாளர் டீ. சி. ஏ குணவர்தன தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய, போரில் இறந்தவர்கள், காணாமற் போனவர்கள், அங்கவீனமுற்றோர், சொத்திழப்புக்கள் தொடர்பில் தொகை மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. 1982 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டுக்கு இடையிலான போர்க் கால இழப்பீடு தொடர்பிலேயே கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது அமர்வில் சமர்ப்பிப்பதற்காக, அவசர அவசரமாக கடந்த வருடம் நவம்பர், டிசெம்பர் காலப் பகுதிகளில் இந்தக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மூன்று மாத காலத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதும் ஆறு மாதங்கள் கடந்த நிலையிலேயே இழப்பீட்டு அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

இது தொடர்பில் பணிப்பாளர் டீ.சி.ஏ. குணவர்தன மேலும் தெரிவிக்கையில்:-

இந்த தொகைமதிப்பீடு சில வரையறைக்குட்பட்டே வடக்கு, கிழக்கு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது. இதில் கொழும்பு போன்ற பகுதிகள் போலன்றி வடக்கு - கிழக்கு மக்கள் ஆர்வமாக தகவல்களை வழங்கினர். - என்றார். (ஐ-5)


## 3 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திச் சென்றவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது யாழ்.நீதிமன்று.

நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த, வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குற்றத்தை ஒப்புக்கொண்ட நபருக்கு தண்டம் விதிக்கப்பட்டதோடு மீண்டும் அவ்வாறு வாகனம் செலுத்தும் பட்சத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்படும் என்று நீதிமன்று எச்சரித்தது. (த-4)

## மோட்டார் சைக்கிள் கார் விபத்தில் குடும்பப் பெண் ஸ்தலத்தில் சாவு



முள்ளியவளை, ஜூன் 26

முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த விபத்து நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பணியாற்றும் தண்ணீரூற்று மேற்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான குலேந்திரன் சிவகங்காதேவி (வயது -52) என்பவரே உயிரிழந்தார். முள்ளியவளை வடக்கைச் சேர்ந்த செல்லையா கருணாகரன் வயது (47) என்பவர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

சிவகங்கா தேவியும் கருணாகரனும் ஒரே அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் இவர்கள் இருவரும் பணிமுடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் முல்லைத்தீவு சந்திக்கு அண்மையாக எதிரே வந்த காருடன் மோதிக் கொண்டனர்.

இதில் சிவகங்கா தேவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற கருணாகரன் படுகாயமடைந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-102,433)

# இரணைமடு பிரச்சினையை தீர்க்க கால அவகாசம் கோரியுள்ளேன்

## விவசாய பிரதிநிதிகளிடம் அமைச்சர் தெரிவிப்பு

இரணைமடு குளத்தின் கீழ் தண்ணீர் உரிமம் பெறாத விவசாயிகளுக்கு அதனைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அத்துடன் கண்டாவளை பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள 15,000 ஆயிரம் ஏக்கர் வரையான நிலத்துக்கு தண்ணீர் வழங்க ஆவன செய்ய வேண்டும். இவ்வாறு இரண்டு புதிய கோரிக்கைகளை முன்வைத்தனர், இரணைமடுக் குள அமைப்புகளின் சம்மேளத்தினர்.

இரணைமடுக்குள விவசாய அமைப்பு சம்மேளன பிரதிநிதிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று அவசரமாக அழைத்து சந்தித்தார்.

இதன்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர் எனினும் தமது இந்தக் கோரிக்கைகளை அமைச்சர் ஏற்றுக் கொண்டதாக தெரியவில்லை. அவை குறித்து பின்னர் பேசலாம் என கலந்துரையாடலை முடித்துக் கொண்டார் என இரணைமடு விவசாய அமைப்புக்களின் சம்மேளன செயலாளர் சிவமோகன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, இரணைமடுக் குள அபிவிருத்தி குறித்து ஜனாதிபதி அக்கறை கொண்டுள்ளார் எனினும் கிளிநொச்சி மாவட்ட மக்களை பகைத்துக் கொள்ள அவர் தயாராக இல்லை. எனவே மக்களிடையே நிலவும் முரண்பாடுகளைத் தீர்த்து அவர்களின் விருப்போடு அபிவிருத்தி செய்யவே தாம் விரும்புவதாகவும் ஜனாதிபதி தன்னிடம் தெரிவித்தார் என்றும் அமைச்சர் விவசாயிகளிடம் தெரிவித்தார். மக்களிடம் கலந்துரையாடி அவர்களை சமரசப்படுத்துவதற்கு ஒரு மாத கால அவகாசத்தை தாம் ஜனாதிபதியிடம் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரணைமடுக் குள அபிவிருத்திக்கான நிதி திரும்பிச் செல்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் தம்மிடம் தெரிவித்தார் எனவும் விவசாயிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஐ-18)

பொன்னான வாய்ப்பு

27.06.2014 வெள்ளிக்கிழமை எமது யாழ். அலுவலகத்தில்

நேர்முகத்தேர்வு

சுவிஸ், பிரான்ஸ், இத்தாலி, நோர்வே, ஜேர்மனி...

செங்கன் விசா - 2 வருடம் படிக்க உழைக்க வாய்ப்பு

விரைந்து வாருங்கள்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090



(49352)(10)

## பிறரை அடித்த குற்றச்சாட்டில் இருவருக்கு பிணை

தென்மராட்சி, ஜூன் 26
மீசாலைப் பகுதியில் தலைக் கவசம் மற்றும் கைகளாலும் ஒருவரை அடித்துக் காயப் படுத்திய குற்றச்சாட்டில் நப ரொருவரும், கொடிகாமம் பாலாவி வடக்குப் பகுதியில் கைகளாலும் காலாலும் ஒரு வரைத் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் மற்றொரு நப ரும், நேற்று சாவகச்சேரி நீதி மன்றில் பொலிஸாரால் முற் படுத்தப்பட்டனர்.
வழக்குகளை விசாரித்த நீதிவான் இருவரையும் தலா 20 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட் டார். (வ-9)

# ஆஸி. வழங்கிய நன்கொடை சிங்கள மாவட்டங்களுக்கு

யாழ்ப்பாணம், ஜுன் 26
ஆஸ்திரேலிய அரசால் நன் கொடையாக வழங்கப்பட்ட 25 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர் நிதி, வடக்கு - கிழக் குடன் தொடுகையாகவுள்ள 4 சிங்கள மாவட்டங்களின் 22 உள்ளூராட்சி மன்றங்களுக் கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.
சிங்களப் பிரதேச சபை களுக்கு தலா 50 மில்லியன் ரூபாய்களும், வடக்கு - கிழக் கின் 79 உள்ளூராட்சி மன்றங் களுக் கும் தலா 15 தொடக்கம் 20 மில்லியன் ரூபாய்களும் ஒதுக்கப்பட் டுள்ளதாகக் குறிப் பிடப்படுகின்றது.
உலக வங்கியின் நிதியில் வடக்கு - கிழக்கிலுள்ள பிரதேச மேம்பாட்டுக்காக நெல்சிப் திட்டம் நடைமுறைப்படுத் தப் பட்டது. மக்கள் பங்களிப் புடன் நடைமுறைப்படுத் தப்பட்ட இந்தச் செயற்றிட்டம் 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டிருந் தது. கடந்த ஆண்டு டிசெம்ப ருடன் முடிவடைய வேண்டியி ருந்த போதிலும், இந்த ஆண்டு டிசெம்பர் வரையில் குறித்த திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.
அதன்பின்னர் வடக்கு - கிழக்கு பிரதேச மேம்பாட்டுக்காக ஆஸ்திரேலிய அரசு, ஆஸ்தி ரேலியன் எயிட் ஊடாக இலங் கைக்கு நன்கொடையாக 25 மில்லியன் ஆஸ்திரேலிய டொலரை வழங்கவுள்ளது. இதுவே இலங்கைக்கான ஆஸ் திரேலியாவின் இறுதி நன் கொடை என்றும் தெரிவிக்கப் படுகின்றது. இந்த நிதி வடக்கு - கிழக்கு மற்றும் அதனுடன் இணைப்பிலுள்ள 4 சிங்கள மாவட்டங்களுக்கும் பகிர்ந்த ளிக்கப்படவுள்ளது.
இணைப்பு மாவட்டங்களாக உள்ள சிங்கள மாவட்டங் களின் 22 உள்ளூராட்சி சபை களுக்கும் தலா 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு - கிழக்கி லுள்ள 79 உள்ளூராட்சி சபைகளுக் கும் தலா 15 தொடக்கம் 20 மில்லியன் ரூபா நிதியே ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.
நெல்சிப் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கே பெருமளவு நிதி வழங்கப்பட்டி ருந்தது. சிங்கள மாவட்டங் களுக்கு வழங்கப்படவில்லை. அதனாலேயே தற்போது சிங் கள மாவட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டதாகத் தெரி விக்கப்படுகின்றது. (வ-5)

## நாகபூஷணி அம்பாளுக்கு சனியன்று கொடியேற்றம்



யாழ்ப்பாணம், ஜூன் 26
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறு தினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.
அன்று காலை 6 மணிக்கு இடம்பெறும் வழமையான பூசையைத் தொடர்ந்து திரு விழாவுக்கான கிரியைகள் ஆரம்பமாகும். வசந்த மண் டபப் பூசையை அடுத்து கொடி யேற்றம் இடம்பெறும். ஆலய பிரதமகுரு ப.முத்துகுமாரசா மிக் குருக்கள் கொடியேற்றி வைத்துதிருவிழாவைதொடர்ந்து நடத்துவார்.
திருவிழா காலங்களில் அதி கமான பக்தர்கள் நயினா தீவுக்கு வருகை தரவுள்ளார்கள் என்பதால் போக்குவரத்து, குடிதண்ணீர், சுகாதார வசதி களை சிறந்த முறையில் நிறை வேற்ற வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், வேலணை பிரதேசத் தலைவர் எஸ்.சிவராசா ஆகி யோர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். தொண் டர் சேவைகள் உட்பட அனைத்து சேவைகளும் வழமை போன்று இடம்பெற ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறங் காவல் சபைத் தலைவர் ஆ.தியா கராசா தெரிவித்தார். (வ-7)

## கண்காட்சியின் ஆக்கங்கள் வாக்களிப்பு மூலம் தெரிவு



தென்மராட்சி, ஜூன் 26
நாவற்குழி மகாவித்தியாலயத் தில் நேற்று முன்தினம் ஆரம் பிக்கப்பட்ட கல்விக் கண்காட்சி யில் வைக்கப்பட்டுள்ள ஆக் கங்களில் சிறந்தவை எவை என்பது குறித்து கண்காட்சி யைப்பார்வையிட வருவோரின் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளன. இதற்காக தேர்தல் வாக்களிப்பு நிலை யமும் அமைக்கப்பட்டுள்ளது.
நாட்டில் தேர்தல்கள் நடை பெறும் போது வாக்கெடுப்பு நிலையத்தில் எவ்வாறான நடைமுறைகள் காணப்படு கிறதோ அதேபோன்று 19 காட்சி நிலையங்களுக்கு அடுத் ததாக வாக்கெடுப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
கண்காட்சியைப் பார்வை யிடுவோர் 20 ஆவது அறை யில் உள்ள வாக்கெடுப்பு நிலை யத்தில் உரிய வாக்குச் சீட்டில் தமது வாக்கை புள்ளடியிடுவ துடன் விருப்பு வாக்காக மூன்று ஆக்கங்களுக்கும் புள்ளடியிட முடியும்.
காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒவ் வொரு தலைப்புகளில் பார்வை யாளரின் மனதைக் கவர்ந்த காட்சியகத்துக்குத் தெரிவுப் புள்ளடியும் அடுத்து அவர் விரும் பும் மூன்று ஆக்கங்களுக்கு விருப்புவாக்குகளும் இடமுடியும். கிடைக்கும் வாக்குகள் அடிப் படையில் சிறந்த ஆக்கப் பிரிவு தெரிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
கண்காட்சிகளில் ஆக்கங்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப் படுவது இதுதான் முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## ஒலிபெருக்கிப் பாவனை குறித்து பெற்றோர் விசனம்

தென்மராட்சி, ஜூன் 26
தென்மராட்சி பிரதேச மாண வர்களின் கற்றல் செயற் பாடு களை சீர்குலைக் கும் வகை யில் இடம்பெறும் ஒலி பெருக் கிப் பாவனை குறித்து பெற் றோர் கவலை தெரிவித்தனர்.
பிரதேசத்தில் தற்போதைய கால வேளையில் ஆலயங் களில் வழக்கமான வருடாந் தப் பெருவிழாக்கள் இடம் பெறுவதால் இந்து ஆலயங் களில் அதிகாலை 4 மணி தொடக்கம் நள்ளிரவு வரை ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப் படுகின்றன. இதனால் பரீட் சைக்காகப் படிக்க இயலாமலும், மீட்டல் பாடங்களை மேற் கொள்ள இயலாமலும், மாண வர்கள் கஷ்டங்களை எதிர் நோக்குவதாகவும் பெற்றோர் கள் தெரிவித்தனர்.
ஆலயங்களில் ஒலிபெருக்கிப் பாவனையை கட்டுப்படுத்து வது தொடர்பாக உரிய அதிகாரி கள் கவனம் செலுத்தி மாணவர் களின் கல்வித் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-9)

## விஷன்-1 கல்விக் கண்காட்சி

தென்மராட்சி, ஜூன் 26
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் நடத்தும் விஷன்-1 கல்விக் கண்காட்சி நாளை காலை 9.30 மணிக்கு மட்டு வில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி. மண்டபத்தில் நடை பெறும். வலயத்தைச் சேர்ந்த 7 பாடசாலைகளின் மாணவர் களால் உருவாக் கப்பட்ட ஓவி யங்கள், ஸ்ரென்ஸில் பதிப்புக் கள், பேப்பர் வெட் டுச் சித்திரங் கள், மாபிளிங் ஆகிய வற்றிலான ஆக்கப் பொருள்கள் கண்காட்சி யில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தலைமையில் இடம் பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இரா ஜேந்திரனும், சிறப்பு விருந்தி னர்களாக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் திருமதி ஏ.என்.கிருஷ்ண வேணி, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு.இராதா கிருஷ்ணன், 'வேள்ட் விஷன்' நிறுவன திட்ட முகாமையாளர் ஏ.ஜீ.றொரைரோ ஆகியோரும் கலந்துகொள்வர்.
கண்காட்சியை முதன்மை விருந்தினர் ஆரம்பித்து வைப் பார். வளவாளர் கௌரவிப்பும் இடம்பெறும். (வ-9)

## அபிவிருத்தி சேவை தரத்துக்குள் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26
வடமாகாண அரச திணைக்கள அலுவலகங்களில் கடமை யாற்றும் அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அபிவிருத்தி உத்தி யோகத்தர் சேவை தரத்துக் குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.
பத்து ஆண்டுகளுக்கு மேலாக பட்டதாரி ஆள்சேர்ப்புத் திட்டத் தில் அபிவிருத்தி உத்தியோகத் தர்களாகக் கடமையாற்றிய உத் தியோகத்தர்களே அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III க்கு நியமிக்கப்பட்டு உள்ளீர்க்கப்பட் டுள்ளனர். உள்ளீர்க்கப்பட்ட மைக்கான கடிதங்கள் சம் பந் தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாகாண பிரதிப் பிரதம செய லாளர் அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (வ-9)

# விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வுடனேயே வட மாகாண சபை செயற்படுகிறது

*அரசகரும மொழிக் கொள்கை மீறல் குறித்து ஆணைக்குழுவுக்கு அவைத் தலைவரால் அளித்த விளக்கத்தில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜுன் 26
ஜாதிக ஹெல உறுமயவின் தமிழின விரோதப்போக்குப் போன்று வடக்கு மாகாண சபை செயற்படவில்லை. வடக்கு மாகாண சபை விட்டுக் கொடுப் புடனும் -புரிந்துணர் வுடனுமே செயற்படுகின்றது என்றும் தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், ஜாதிக ஹெல உறுமயவால் வடக்கு மாகாண சபை அச்சுறுத்தப்பட முடியாது என்றும் சுட்டிக்காட்டி யுள்ளார்.
அரசகரும மொழிக் கொள்கை மீறப்படல் தொடர்பில், ஜாதிக ஹெல உறுமயவால் அரச கரும மொழிகள் ஆணைக் குழுவுக்கு செய்யப்பட்ட முறைப் பாட்டுக்கு அமைய ஆணைக் குழுவால் அது தொடர்பில் வடக்கு மாகாண சபையிடம் விளக்கம் கோரப்பட்டிருந்தது.
அதற்கு அனுப்பிய பதில் கடி தத்திலேயே வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
வடக்கு-கிழக்குமாகாணங்களில் நிர்வாக மொழி தமிழ் மொழி தான் என்ற அரசியல் யாப்பின் 16 ஆவது திருத்த ஏற்பாடுக ளுக்கு அமையவே வடக்கு மாகாண சபைசெயற்படுகின்றது.
மாகாண சபையில் நிறை வேற்றப்பட்ட பிரேரணையில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சி களிடமும் கோரிக்கை விடுக் கப்பட வேண்டியிருந்தால் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அவர்களுக்கு தனித்து கடிதம் அனுப்பப்படவில்லை. நாம் அனுப்பிய கடிதம் தொடர்பில் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் வேறு எந்த அரசியல் கட்சியும் முறைப்பாடு செய்ய வில்லை. எனவே இதிலிருந்து ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு வெளிப்படை யாகவே தெரிகின்றது.
எமது மாகாண சபையில் அங்கம் வகிக்கும் இரண்டு சிங்கள உறுப்பினர்களுக்கும் நாம் அவர்களது மொழியுரிமை மீறாமல் செயற்பட்டு வருகின் றோம். நாம் அனுப் பிய கடிதத் தின் மொழி பெயர்ப்பை ஜாதிக ஹெல உறுமய கோரியிருந் தால் நாம் நிச்சயம் வழங்கியி ருப்போம். தமிழ் மொழியும் இந்தநாட்டின் இரண்டு தேசிய கரும மற்றும் நிர்வாக மொழி களில் ஒன்று என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.
வடக்குமாகாணத்துக்குவெளியே உள்ள ஏனைய மாகாண சபைகள் அத்துடன் திணைக் களங்களிலிருந்து எமக்கும் எமது ஏனைய திணைக்களங் களுக்கும் தனிச் சிங்களத்தி லேயே கடிதம் அனுப்பப்படு கின்றது. அவர்களுக்கு நாம் சிங்க ளத்திலேயோ அல்லது ஆங் கிலத்திலேயோதான் பதில் அனுப்புகின்றோம். நாம் முறைப்பாடு செய்யத் தொடங் கினால் ஆணைக்குழு அலு வலகம் நிரம்பி வழியும்.
நாம் மிகவும் விட்டுக் கொடுப் புடனும் புரிந்துணர்வுடனுமே செயற்படுகின்றோம். ஜாதிக ஹெல உறுமயவின் தமிழின விரோதப்போக்கு மாதிரி அல்ல. அவர்களால் நாம் அச்சுறுத்தப் பட முடியாது - என்று அரச கரும மொழிகள் ஆணைக்குழு வுக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# தமிழர்களது பிரதேசங்களை மறைப்பதற்கே அரசு முயற்சி

## சிங்களக் குடியேற்றங்கள் குறித்து சுவிஸ் தூதருக்கு விளக்கினார் வடக்கு மாகாண முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 26
வடக்கும் - கிழக்கும் தொடர்ச்சியாக தமிழ் பேசும் மக்களின் நிலங்களாக இருக்கவில்லை என்ற தோற்றத்தை உருவாக்குவதற்காகவே தென்பகுதியிலிருந்து 450 சிங்களக் குடும்பங்களைக் கொண்டு வந்து முல்லைத்தீவில் குடியேற்றியுள்ளார்கள். அத்துடன் அவர்கள் சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் இராணுவத்தினர் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குகின்றனர் இவ்வாறு இலங்கைக்கான சுவிஸ் தூதருக்கு விளக்கமளித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த சுவிஸ் தூதுவர் தோமஸ்ரன் லிப்ரன், வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு முதலமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள ஊடகக்குறிப்பிலேயேமேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் தூதுவர், தாம் வடக்கில் ஏதாவது இடங்கள் முக்கியமாக சென்று பார்க்க வேண்டியிருக்கின்றதா ? என்று என்னிடம் கேள்வியெழுப்பினார். இதன் போது முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய பிரதேசங்களை நேரடியாகச் சென்று பார்வையிடுமாறு தெரிவித்தேன்.

எவ்வாறு வட - கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பிரதேசமாக இதுவரை காலமும் இருந்து வந்ததென்பதையும் நடுவிலே சிங்களக் குடியேற்றங்களை முன்னிறுத்தி வடக்கும்கிழக்கும்தொடர்ச்சியாக தமிழ் பேசும் மக்களின் இடங்களாக இருக்கவில்லை என்ற கருத்தை முன்வைப்பதற்காக 450 குடும்பங்களை தெற்கிலிருந்து கொண்டுவந்து குடியேற்றி உள்ளார்கள் என்பதையும், அங்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் அந்தத் தொழிலை பாரம்பரியமாக செய்த விதத்திலே செய்ய முடியாமல் தடைசெய்து தெற்கிலிருந்து வந்தவர்கள் தடைசெய்யப்பட்ட முறைகளிலே மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு இராணுவத்தினரால் எவ்வாறு அனுசரணைகள் வழங்கப்படுகின்றன என்பது பற்றி எடுத்துக்காட்டி இது ஒரு முக்கியமான விடயம் என்றும் தெரிவித்தேன். அத்துடன் அங்குள்ள தமிழ் மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு உதவி செய்வது அவசியம் என்பதையும் குறிப்பிட்டேன்.

இதேவேளை சுவிஸ் தூதுவர் தலைமையிலான குழுவினர், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிவமோகன், சர்வேஸ்வரன், பசுபதிப்பிள்ளை, சுகிர்தன் ஆகியோரை வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில்சந்தித்துக்கலந்துரையாடினார். இந்தச்சந்திப்பில், வடக்குமாகாண சபைக்கான அதிகாரப் பரவலாக்கம் மற்றும் மாகாண சபையைக் கொண்டு நடத்துவதிலுள்ள தடங்கல்கள் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்களால் தூதுவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அரசியல் தீர்வு தொடர்பிலும் ஆராயப்பட்டது. தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான ஆட்சியே தீர்வாகும். அதனை தமிழ் மக்கள் பெற்றுக் கொள்வதற்கு சுவிஸ் அரசும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லாவிட்டால் சுவிஸில் உள்ளதைப் போன்றாவது அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்- என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயங்களைக் கேட்டறிந்த பின்னர் பதிலளித்த சுவிஸ் தூதுவர், சகல விடயங்களையும் கருத்தில் எடுத்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார். (ற-5)

## கடற்படைக்கு எதிராக தொடர்ந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாது

### கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26
இலங்கை கடற்படைக்கு எதிராக இந்தியப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தமக்கு எந்தவொரு அறிவித்தலும் கிடைக்கப் பெறவில்லை என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ண குலசூர்ய தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் கடந்த வாரம் இராமேஸ்வரம் பகுதி மீனவர்களால்மண்டபம்பொலிஸ் நிலையத்தில் இலங்கை கடற்படையினருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. தமிழக மீனவர் மீது கொலை முயற்சி உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குத் தொடர்பில் தாம் இந்திய ஊடகங்களின் செய்திகளில் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் உத்தியோகபூர்வமாக எந்தவொரு அறிவித்தலும் தமக்குக் கிடைக்கவில்லை என்று ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

**தமிழக மீனவர் மீது கொலை முயற்சி உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்களை முன் வைத்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

மேலும், வடக்கு மீன் வளத்தை கொள்ளையிடும் தமிழ்நாட்டு மீனவர்களையே இலங்கை கடற்படை கைது செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த கைது தொடர்பில் கடற்படையை குற்றஞ்சாட்டுகிறது என்று வர்ணகுலசூரிய கூறினார்.

வடக்கு கடற்பரப்பில் அதிக மீன் வளம் காணப்படுவதாகவும், அதனை பிடிப்பதற்காகவே தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதாகவும் அவர்களையே கடற்படையினர் கைது செய்வதாகவும் கடற்படை ஊடகப்பேச்சாளர் அறுதியாகத் தெரிவித்துள்ளார். (ற-5)

## மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க யாழ். செல்ல வேண்டும் ஜெயலலிதா


சென்னை, ஜூன் 26
தமிழக மீனவர் பிரச்சினைக்கு, இலங்கை அதிபர் ராஜபக்ஷவை நேரில் சந்தித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா தீர்வு காண வேண்டும் என பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

"தமிழக மீனவர்கள் அத்துமீறி இலங்கைகடற்பகுதிக்குள்சென்று மீன்வளங்களை சுரண்டுவதாக, இலங்கை மீனவர்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக, தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கையிலுள்ள யாழ்ப்பாணம் பகுதிக்கு நேரில் சென்று அங்குள்ள மீனவர்களை சந்தித்து பேச வேண்டும்.

மேலும், தமிழக மீனவர்கள் இலங்கைகடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவது தொடர்பாக, இலங்கை அதிபர் ராஜபக்ஷவையும், 'தமிழக முதல்வர் ஜெயலலிதா நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)





யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத் துறையும் ஊடக வளங்கள் பயிற்சி மையமும் இணைந்து ஏற்பாடு செய்த வரலாற்று சுவடுகள் எனும் புகைப்பட கண்காட்சி நேற்று யாழ். பல்கலைக்கழக கலைத்துறை வளாகத்தில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் மற்றும் விஞ்ஞானத்துறை பீடாதிபதி பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா ஆகியோர் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர். (ற-21)

## விபத்தில் சிறுவன் படுகாயம்

வவுனியா, ஜூன் 26
வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் நேற்று நடத்த விபத்தொன்றில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

சுற்றுலா சென்றுவிட்டு கிளிநொச்சி சென்று கொண்டிருந்த மாணவர் குழு தேநீர் அருந்துவதற்கான தாண்டிக்குளம் பகுதியில் பஸ் நிறுத்தப்பட்டது. குறித்த மாணவன் வீதியைக் கடந்து உணவகத்துக்குச் செல்ல முயன்றபோது, கப் ரக வாகனம் சிறுவனை மோதியது.

அதில் படுகாயமடைந்த சிறுவன் வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டான்.

குறித்த சிறுவனின் மூளைப் பகுதியின் செயற்பாடுகள் செயலிழந்துள்ளது என்று வைத்திய சாலை வட்டாரங்கள் கூறுகின்றன. (ற-421)

## அரசியலில் ஈடுபடவில்லை புலனாய்வாளர்கள்

கொழும்பு, ஜூன் 26
நாட்டின் புலனாய்வாளர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளார் இராணுவ பேச்சாளர் ருவான் வணிகசூரிய.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு பணிகளை விடுத்து, அரசியல் பணிகளில் ஈடுபட்ட புலனாய்வாளர்கள் குறித்த தகவல்களை வெளிப்படுத்தப் போவதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி புலனாய்வாளர்கள் குறித்த தகவல்களை வெளிப்படுத்த சில அரசியல்வாதிகள் முயற்சிப்பதாக, இராணுவப் பேச்சாளர் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமைக்கு பதிலாகவே மங்களசமரவீர இவ்வாறு கூறியிருந்தார்.

இது குறித்து நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த இராணுவப் பேச்சாளர், புலனாய்வாளர்கள் அரசியல் பணிகளில் ஈடுபடவில்லை என்றும், நாட்டின் புலனாய்வுத்துறையை வீழ்ச்சி அடைய செய்வதற்கான சூழ்ச்சிகள் குறித்து தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## புதிய தவிசாளருக்கும் கடும் எதிர்ப்பு; முடங்கியது வலி.கிழக்கு பிரதேச சபை

அச்சுவேலி, ஜூன் 26
புதிய தவிசாளரின் தலைமையில் வலி. கிழக்குப் பிரதேச சபை நேற்றுக் கூடியபோதும், அவரது கட்சியைச் சேர்ந்தவர்களே, தவிசாளர் தனக்குரிய பெரும்பான்மையை நிரூபிக்க வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றதால், திகதி குறிப்பிடாது கூட்டத்தை ஒத்திவைத்தார் சபையின் தவிசாளர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலி. கிழக்குப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தொடர்ச்சியாக மூன்று முறை தோற்கடிக்கப்பட்டதை அடுத்து, அப்போது தவிசாளராகப் பதவி வகித்த வசந்தகுமார் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னர் புதிய தவிசாளராக க.துரைசிங்கம் இந்த மாத முற்பகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியால் நியமிக்கப்பட்டார். அவர் தலைமையில் முதலாவது கூட்டம் முற்பகல் 10 மணிக்குக் கூடியது.

கூட்டத்தில் தீர்மானங்களைச் சபையில் சமர்ப்பிப்பதற்கு தவிசாளர் முற்பட்டபோது, ஆளும்கட்சியின் அதிருப்திக் குழுவினர் "புதிய தவிசாளர் தனக்குரிய பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்" என்று குரல் எழுப்பத் தொடங்கினர். அதனால் சபை நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத தவிசாளர், "அடுத்த கூட்டத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கின்றேன்"- என்று தெரிவித்து திகதி குறிப்பிடாது கூட்டத்தை ஒத்திவைத்தார். கூட்டம் 45 நிமிடங்களே நடைபெற்றது.

அதேவேளை, 16 உறுப்பினர்களைக் கொண்ட ஆளுந்தரப்பில், 7 உறுப்பினர்களே தவிசாளர் மீது அதிருப்தி கொண்டுள்ளனர். அவர்களைச் சமாதானப்படுத்தும் முயற்சிகள் கடந்த திங்கட்கிழமை வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தலைமையில் நடந்துள்ளன. ஆயினும் அவரது முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. (ற-11)

# புலிகளுக்கு எதிராக செயற்படாத முஸ்லிம்கள் இன்று அரசுக்கு எதிராகப் போராடுவது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் ஜனாதிபதி மஹிந்த

யாழ்ப்பாணம், ஜூன் 26
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக கிளர்ந்தெழாத முஸ்லிம்கள் இன்று எமது அரசுக்கு எதிராக மாத்திரம் கிளர்ந்தெழுவது ஏன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.

வடக்கிலிருந்து விடுதலைப் புலிகள் விரட்டியடித்தபோதும், காத்தான்குடி பள்ளிவாசலில் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட போதும், கடையடைப்பு-ஹர்த்தால் செய்வதற்கு எவரும் இருக்கவில்லை. இன்று ஹர்த்தால் செய்தவர்கள் அன்று எங்கிருந்தார்கள் என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அம்பாந்தோட்டை மாகாம்புர ராஜபக்ஷ துறைமுகத்தில் 76 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட எரிபொருள் தாங்கிகளை செயற்பட வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிபோதே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கிலிருந்து 19 ஆயிரம் முஸ்லிம் மக்களை உடுத்த உடையோடு இரண்டு மணித்தியாலங்களுக்குள் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு வீடுகளிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் விடுதலைப்புலிகளே விரட்டியடித்தனர். அப்போது ஹர்த்தால் - கடையடைப்பு நடத்தப்பட்டதா? இன்று ஹர்த்தால் மேற்கொள்வோர் அன்று எங்கிருந்தார்கள்? அன்று எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று ஜனாதிபதி கூறினார்.

காத்தான்குடி பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தி விடுதலைப் புலிகள் முஸ்லிம்களைக் கொலை செய்தனர். அதற்காக யார் ஹர்த்தால் செய்தார்கள்? ஆனால், இன்று சிறு சம்பவத்துக்காக ஹர்த் தால் செய்கின்றனர். இன வாதத்தைத் தூண்டுகின்றனர். இதனை இரு தரப்பினரும் கைவிட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.


மஹிந்த ராஜபக்ஷ

நாட்டின் சமாதானத்தை - அமைதியைப் பாதுகாக்க அரசு மட்டுமல்ல மக்களும் பங்களிப்பு வழங்க வேண்டும். அன்று சிங்கள முஸ்லிம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்டார்கள். இன்று ஹர்த்தால் நடத்துவோர் அப்போது எங்கிருந்தனர்? நாட்டில் ஆங்காங்கே சிறு சிறு சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. இது தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஆலோசனைகள், உத்தரவுகள் பிறப் பிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

இன்று அளுத்கமவுக்கு ஏன் இராணுவத்தினரை அனுப்பவில்லை என்று எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர்.

ரத்துபஸ்வலக்கு இராணுவத்தை அனுப்பி வைத்தோம். இன்று அது தொடர்பில் ஐ.நா. எம்மிடம் கேள்வியெழுப்புகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## மீண்டும் வன்முறை வெடிக்கும் அபாயம்

கொழும்பு.ஜூன் 26
பேருவளையில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம் தீ வைக்கப்பட்ட சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பேருவளை, அம்பேபிட்டிய பகுதியில் அமைந்துள்ள புத்தக விற்பனை நிலையம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தீ வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் தகவலையடுத்து விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதனால் ஏனைய வர்த்தக நிலையங்களுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து விசேட அதிரடிப்படையினர் அந்தப் பகுதியில் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். அதனால் இன முறுகல் ஏற்படும் அபாயம் தவிர்க்கப்பட்டது.

எனினும் தீ வைப்புச் சம்பவத்தைக் கேள்வியுற்று அந்தப் பகுதிக்கு விரைந்து வந்த முஸ்லிம் இளைஞர்களை, அதிரடிப்படையினர் தாக்க முற்பட்டதனால் இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.


கோப்புப்படம்

இந்த நிலையில் பொது மக்களை அமைதியாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள பள்ளிவாசல் நிர்வாகம், உலமாக்கள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் ஊடாக பதற்றத்தைத் தணிக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. (ச)


காலநிலை மாற்றங்களால் ஏற்படும் அபாயங்களை எதிர்த்து நிற்கும் கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்துக்கும் இடையில் அண்மையில் கையெழுத்திடப்பட்டது. அமைச்சின் செயலாளர் கலாநிதி நிகால் ஜயதிலகவும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட வதிவிடப் பிரதிநிதி ரஸினா பில்கிராமி அம்மையாரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதைக் காணலாம். (ப)

## கார்ப் பந்தயத்துக்கு கிடைத்தது அனுமதி

*வழங்கியது அஸ்கிரிய பீடம்*

*கொழும்பு.ஜூன் 26*
*கண்டியில் இந்த வார இறுதியில் இடம்பெறவுள்ள இரவு நேர கார்ப் பந்தயத்துக்கு அனுமதியளிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று அஸ்கிரிய பீட மகாநாயக்கர் உடுகம புத்தரக்கித்த தேரர் தெரிவித்தார்.*

*இந்தக் கார்ப் பந்தயத்துக்காக ஏற்பாட்டாளர்களால் அதிக செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*இந்த தடவை மாத்திரம் இந்த கார்ப் பந்தயத்துக்கு அனுமதியளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்தமைக்கு அமையவே அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தேரர் குறிப்பிட்டார்.*

*இந்த கார்ப் பந்தயத்துக்கு தேரர் முன்னர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)*

## மதத் தலைவர்களுடன் ரணில் இன்று சந்திப்பு

கொழும்பு.ஜூன் 26
நாட்டில் தேசிய ஒற்றுமை முனைப்புக்களில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


ரணில் விக்கிரமசிங்க

மதத் தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் எனப் பலரையும் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சு நாடாளுமன்ற வளாகத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த வாரம் பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசத்தில் வன்முறைகள் வெடித்திருந்தன.

இந்தப் பிரதேசங்களை பிரதிநிதித்துவம் செய்யும் மதத் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் ரணிலுடன் பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்த சந்திப்பில் இனங்களுக்கு இடையில் சகோதரத்துவத்தை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. (ச)

## புதிய போர் விமானங்கள் கொள்வனவில் இலங்கை

ஆராய்கிறது விமானப்படை

கொழும்பு.ஜூன் 26
இலங்கை விமானப்படை புதிய ஜெட் போர் விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விமானப்படையில் உள்ள கிபிர் மற்றும் மிக்-27 போர் விமானங்கள் நீண்டகாலம் சேவையாற்றி விட்டதால், அவற்றை நீக்கி விட்டுப் புதிய விமானங்களைக் கொள்வனவு செய்வது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

10 ஆவது இலக்க ஸ்குவாட்ரனில் உள்ள கிபிர் போர் விமானங்கள் 1996 ஆம் ஆண்டு இஸ்ரேலிடம் இருந்து வாங்கப்பட்டவையாகும்.

12 ஆவது இலக்க ஜெட் ஸ்குவாட்ரனில் உள்ள மிக் 27 விமானங்கள் 2000 ஆம் ஆண்டு ரஷ்யாவி டம் இருந்து வாங்கப்பட்டன.

இவை நீண்டகாலம் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டவை என்பதால், இவற்றின் தரத்தை பரிசோதிக்கும் பணியை இலங்கை விமானப்படை ஆரம்பித்துள்ளது.

இந்த விமானங்களை அடுத்த சில ஆண்டுகளுக்குள் கழித்து விட வேண்டும் என்பதால், புதிய ஜெட் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடுகளை இலங்கை விமானப்படை மேற்கொண்டு வருகிறது. (ச)

## சிங்கள பயங்கரவாத அமைப்புகளின் பின்னணியில் பாதுகாப்பு அமைச்சு?

மங்கள சமரவீர எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு.ஜூன் 26
சிங்கள பயங்கரவாத அமைப்புகளின் பின்னணியில் பாதுகாப்பு அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் இருக்கிறார் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்கு உதவி வரும் மத்திய கிழக்கு நாடுகளுடனான தொடர்புகளை அழிக்கும் சதித்திட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுபல சேனா அமைப்புக்குப் பின்னால், பாதுகாப்பு அமைச்சு செயற்படுகிறது.


மங்கள சமரவீர

கடந்த காலங்களில் நாடு முழுவதும் சிங்கள மற்றும் முஸ்லிம் மோதல்களை ஏற்படுத்தும் சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஏற்கனவே விவரங்களுடன் தகவல்களை நாங்கள் வெளியிட்டு வந்துள்ளோம்.

இந்த சதித் திட்டங்கள் அரச அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் ஏற்பட்ட சம்பவங்களின் போது பொது பல சேனா உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகள் பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் தாக்குதல் நடத்தியமை இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த மோதல்களில் இரு தரப்பையும் சேர்ந்த அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்டுள்ளதாக அரசு கூறினாலும் உண்மையில், காவி அணிந்த நபரின் குழுவே இந்த தாக்குதல்களில் சம்பந்தப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் நகைக் கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை கொள்ளையிடும் போது பாதுகாப்பு தரப்பினர் எங்கிருந்தனர் என்று புரியவில்லை-என்றார். (ச)

# தங்க வேலாயுதபுரத்தில் 15 இல் மீள்குடியேற்றம்

## திருக்கோவில் பிரதேச செயலர் தகவல்

திருக்கோவில்,ஜூன் 26

கடந்த காலப் போரால் இடம்பெயர்ந்த அம்பாறை, தங்க வேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு கிராம மக்களை உத்தியோக பூர்வமாக மீள்குடியேற்றும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்று திருக்கோவில் பிரதேச செயலர் எஸ்.ஜெகராஜன் தெரிவித்தார்.

இந்த மீள் குடியேற்றம் தொடர்பாக திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

**மீள்குடியேற்றம் தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத் திகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் சம்மந்தமாக ஆராயும் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.**

மீள் குடியேற்றங்கள் இடம்பெறுவதை முன்னிட்டு அந்தக் கிராமங்களில் இடம்பெற வேண்டிய வீதி புனரமைப்பு, மின்சார இணைப்புக்கள், குடிதண்ணீர், போக்குவரத்து வசதிகள் போன்ற மீள்குடியேற்றம் தொடர்பானஉட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் சம்மந்தமாக ஆராயும் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் கூறினார். (ச)



மட்டக்களப்பு,காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள பேரீச்சை மரங்கள் காய்த்து பழமாகியுள்ள நிலையில், அதற்கான அறுவடையை பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைத்துள்ளார்.

ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியால் காத்தான்குடி பிரதான வீதியில் 2010 ஆம் ஆண்டு நடப்பட்டுள்ள இந்தப் பேரீச்சை மரங்கள் ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் காய்க்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வாகரையில் சுதந்திரக் கட்சி அலுவலகம்

மட்டக்களப்பு,ஜுன் 26

மட்டக்களப்பு, வாகரை பிரதேச செயலர் பிரிவுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச அலுவலகத்தை மட்டக்களப்பு, வாகரை,அம்பந்தனாவெளிக் கிராமத்தில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று புதன்கிழமை திறந்து வைத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாகரை பிரதேச அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நகர அபிவிருத்தி அமைச்சின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பேர்டி பெரேரா, மீள்குடியேற்ற பிரதி அமைச்சரின் இணைப்பாளர் பொன். ரவீந்திரன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கல்குடாத்தொகுதி அமைப்பாளர் சந்திரபால உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் புதிதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்டவர்களுக்கான கட்சி அங்கத்துவ அட்டைகளும் வழங்கப்பட்டன.(ச)

## மணிபுரத்தில் ஆலயம் எரிப்பு

மட்டக்களப்பு, ஆயித்திய மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணிபுரம் பகுதியில் ஓலைக் கொட்டிலில் அமைக்கப்பட்டிருந்த முத்துமாரியம்மன் ஆலயம் இனந் தெரியாத நபர்களால் எரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆலயத்தை நேற்று புதன்கிழமை காலை சென்று பார்த்தபோது ஓலைக் கொட்டில் எரிந்த நிலையில் காணப்பட்டதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்ததையடுத்து தாம் அங்கு நேரடியாகச் சென்று பார்த்த போது ஆலயம் முற்றாக எரிந்த நிலையில் காணப்பட்டது என்று கிராம அலுவலர் தெரிவித்தார். (ச)

## வெவ்வேறு விபத்துகளில் ஒருவர் சாவு; மூவர் காயம்

மட்டக்களப்பு,ஜுன் 26

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றவிபத்துச் சம்பவமொன்றில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு -திருமலை வீதியில் ஆறுமுகத்தான் குடியிருப்பு எல்லையில் மோட்டார் சைக்கிள் ஒன்று சைக்கிளொன்றுடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் தோப்பூரைச் சேர்ந்த குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ளார் என்று வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநபர்பயணம்செய்தமோட்டார் சைக்கிள் வீதி அருகில் இருந்த தென்னை மரமொன்றுடன் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட நபருக்கு ச[illegible]ரை வியாதியுள்ளதால் அ[illegible]டி தலைச் சுற்றினால் மயங்கி விழுபவர் என்று விசாரணைகளின் போது உறவினர்கள் வாகரை பொலிஸாரிடம் தெரிவித்தனர். (ச)

# இருநூறு மில்லியன் ரூபாவுக்கு மேல் மாதமொன்றில் மதுபானம் விற்பனை

## மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கவலை

மட்டக்களப்பு,ஜுன் 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதமொன்றுக்கு சராசரி 200 மில்லியன் ரூபாவுக்கு மதுபானம் விற்பனையாகின்றது.

இந்த மாவட்டத்தில் மதுபான பாவனைக்காக அதிகளவு தொகை செலவிடப்படுகிறது என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர்திருமதிபி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் மகா சங்க சம்மேளனத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.



பி.எஸ்.எம். சார்ள்ஸ்

நான் இந்த மாவட்டத்துக்கு அரச அதிபராகக் கடமையேற்ற போது மாவட்டத்தில் மொத்தமாக 54 மதுபான சாலைகள் இருந்தன. அதன் பின்னர் ஒரு மதுபான சாலையும் புதிதாக திறக்கப்படவில்லை.

அதற்கான அனுமதியை நான் வழங்கவில்லை என்று அவர் கூறினார்.

ஆனால் மதுபான சாலைகளை மூடுவதற்கான உத்தரவை என்னால் பிறப்பிக்க முடியாது. அதை மதுவரி அதிகாரிகள்தான் செய்யவேண்டும்.

இந்த மாவட்டத்தில் மதுபாவனைக்கு எதிராக பெண்கள் போராட முன்வர வேண்டும் என்று அவர் கூறினார். (ச)

## காணாமல் போனோரின் உறவுகளுக்கு நிதியுதவி

மட்டக்களப்பு,ஜுன்26

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் கடந்த காலப் போரால் காணாமல் போனோரின் உறவுகளுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமற் போனோரின் உறவுகளின் ஒன்றியம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் முதல் கட்டமாக காணாமற் போனோர் 50 பேரின் உறவுகளுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

அடுத்த கட்ட நிதி உதவிகள் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு ஆறாம் ஆண்டு





திருமதி வசந்தி (வதனி) கதிர்காமநாதன்

அமரர் நன்னித்தம்பி இராமுப்பிள்ளை

20.04.1971 ← தோற்றம் → 29.07.1934

07.07.2013 ← மறைவு → 19.02.2009

திதி: சதுர்த்தசி தேய்பிறை

திதி: திரயோதசி வளர்பிறை

ஆனிமாதம் (26.06.2014, வியாழக்கிழமை)

எங்கள் குடும்ப விளக்காய்
எங்கள் குடும்ப விருட்சத்தின் ஆணி வேராய்
நின்று அகில மெல்லாம் கிளை பரப்பி,
கனிவுடன் நிழல் தந்து – பிள்ளைகளின்
கல்விக்காக பல கஷ்டங்களைத் தாங்கி
எமது பிள்ளைகளின் ஒளி விளக்காய்
உழைத்த எம் அன்புத் தெய்வம்
மறைந்து ஓராண்டு ஆனாலும்
உங்களின் நீங்கா நினைவுகளுடன்
ஆத்மா சாந்திபெற வேண்டி வழிபடுகிறோம்.

நிற்சாமம், சங்கானை.

(சி10180)(12.5.6)

குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பார்வதிப்பிள்ளை நடராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



மண்ணில் 03.04.1928

விண்ணில் 07.07.2013

திதி: ஆனி அமாவாசை

[43668][4.6.3]

பண்பின் உருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பகலிரவாய்ப் பாடுபட்டு உதிரத்தை உருக்கி
உயிர்காத்து எமை வளர்த்து வையத்துள்
உயர வைத்த உன்னத தாயே!
ஆண்டுகள் ஒன்றென்ன நூறாயினும்
ஆறாது உங்கள் நினைவலைகள்....

அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

### ஆணவ உணர்வை எவ்விதம் அகற்றலாம்

நான் தான் உடம்பு என்ற உணர்வு எம்மில் எழும்போது நாம் அமைதியாக இருந்து, எமது மூச்சு எமக்கு உணர்த்துவதை அவதானிக்க வேண்டும். எமது மூச்சு, சுவாசம் உட்செல்லும் போது "சோ" என்றும், சுவாசம் வெளிவரும் போது 'ஹம்' என்று மிருப்பதை எமக்கு உணர்த்துகிறது.
"சோ" "ஹம்" என்ற இரு சொற்களும் "நான் பிரம்மன்" என்ற பொருள்களை உணர்த்துகின்றன.
இந்த மந்திரத்தை நாம் இடையறாது உச்சரித்தால் நானே உடம்பு எனக் கொண்ட ஆணவ உணர்வின் எண்ணக் கரு எமக்கு எந்தவித தொந்தரவையும் தர மாட்டாது.
இந்த 'சோ ஹம்' என்ற மந்திரம் எமது மூச்சுடன் ஒரு நாளைக்கு 21.600 முறை மீட்டப்படுகிறது. நான் பிரம்மன் என்றது எமது அகக் குரல் எவ்வேளையிலும் கூறுவதன் அர்த்தமாகும்.



நன்றி:தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை



வடக்கு மாகாண அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதலமைச்சர் அலுவலகத்தில், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இது தொடர்பிலான 26 ஒளிப்படங்கள் மாத்திரம் முதலமைச்சர் அலுவலகத்தால் மின்னஞ்சல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இது தொடர்பில் எந்தவொரு செய்திக் குறிப்பும் அனுப்பி வைக்கப்படவில்லை. (ந-5)

## பொதுபல சேனாவால் திட்டமிட்டு நடத்தப்படும் வன்முறைகள்

### முஸ்லிம்கள் மீதான தாக்குதல் குறித்து சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
முஸ்லிம்களுக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் பொதுபல சேனாவால் திட்டமிட்ட முறையில் பொலிஸாரின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஓர் இன விரோத வன்முறை என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. எனினும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களோ, உறுப்பினர்களோ இந்தச் சம்பவங்கள் தொடர்பாக எந்தவித வலுவான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். முஸ்லிம் சமூகத்தின் மீதான தாக்குதல் சம்பவங்களை கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளையும் இனவெறித் தாக்குதல்களையும் வன்மையாக கண்டிக்கின்றேன். தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கியப்பட்டு எமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டியதேவைஏற்பட்டுள்ளது.
பேருவளை, அளுத்கம நகரங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறியாட்டமும் அதைத் தொடர்ந்து மத்துகம, பெலிவத்தை, பதுளை, தெஹிவளை ஆகிய இடங்களுக்கு பரவிய முஸ்லிம்களின் கடைகளுக்கு தீ வைப்புச் சம்பவங்களும் தாக்குதல் மற்றும் சூறையாடல் நடவடிக்கைகளும் நாம் ஒரு ஜனநாயக நாட்டில்தான் வாழ்கின்றோமா? என்ற கேள்வியை எழுப்புவதுடன் ஆழ்ந்த மனக்கவலையளிப்பதாகவும் கண்டிக்கப்பட வேண்டியவையாகவும் அமைந்துள்ளன.
பதற்றமான சூழ்நிலை நிலவும் போது வன்முறையைத் தூண்டத்தக்க ஒரு பேரணிக்கு பொலிஸார் ஏன் அனுமதி வழங்கினர்? (வ-10)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை வேலணை பொது நூலகத்தில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்த வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா பாடசாலை மாணவர்களுடன் கண்காட்சியைப் பார்வையிடுவதைக் காணலாம். (வ-7)

## தொழில் நுட்ப பீட கட்டடத்துக்கு நேற்று அடிக்கல்

தென்மராட்சி, ஜூன் 26
சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 60 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள தொழில்நுட்ப பீடத்துக்கான மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாரம்பரியக்கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.
நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் சூ.அலெக்ஸாண்டர் உட்பட பலர் கலந்து கொண்டனர். 1000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (வ-9)




ஓம் சக்தி
நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய
2014 ஆம் ஆண்டு (ஜய வருடம்)
உயர் திருவிழா

28.06.2014 சனிக்கிழமை முதலாம் திருவிழா பகல் கொடியேற்றம் 12.00 மணி
02.07.2014 புதன்கிழமை 05 ஆம் திருவிழா இரவு முத்துச்சப்பறம்
04.07.2014 வெள்ளிக்கிழமை 07 ஆம் திருவிழா இரவு கைலைக்காட்சி
06.07.2014 ஞாயிற்றுக்கிழமை 09 ஆம் திருவிழா பகல் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம்
07.07.2014 திங்கட்கிழமை 10 ஆம் திருவிழா பகல் சிவபூசைக் கைலைக்காட்சி இரவு திருமஞ்சம்
08.07.2014 செவ்வாய்க்கிழமை 11 ஆம் திருவிழா பகல் விசேட கருட சர்ப்ப பூசை,வாயு பட்சணி நாகம் வீதியுலா இரவு பூந்தண்டிகை
09.07.2014 புதன்கிழமை 12 ஆம் திருவிழா குதிரை வாகனம்
10.07.2014 வியாழக்கிழமை 13 ஆம் திருவிழா பகல் கைலைக்காட்சி இரவு சப்பறம்
11.07.2014 வெள்ளிக்கிழமை 14 ஆம் திருவிழா காலை தேர்
12.07.2014 சனிக்கிழமை 15 ஆம் திருவிழா காலை தீர்த்தம் மாலை திருவூஞ்சல், கொடியிறக்கம்
13.07.2014 ஞாயிற்றுக்கிழமை 16 ஆம் திருவிழா இரவு (பூங்காவனம்) தெப்போற்சவம்

இப்பெருவிழாச் சிறப்புடன் நடைபெற திருவிழா உபயகாரர்களும், அடியார்களும் எமக்குப் பூரண ஒத்துழைப்புத் தந்துதவுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

யாத்திரீகர்களின் நலன்கருதி வழமைபோல இம்முறையும் அமுதசுரபி அன்னதான சபையினர் தாகசாந்தி நிலையத்தினர், போக்குவரத்துச்சேவையினர், மோட்டார் படகுச் சேவையினர், சுகாதார சேவைப் பகுதியினர், தொண்டர் சபையினர், சாரணர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவினர், செஞ்சிலுவைச் சங்கத்தினர், மக்கள் நலன்புரி சங்கத்தினர் அனைவரும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளனர் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக.

அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

(A/10196)(4.3,6)

**வாடிக்கையாளர் கவனத்துக்கு**

எனது நிறுவனத்தின் சார்பில் எவர்வரினும் அத்தாட்சிகள் எதுவும் இன்றி எந்த ஒரு கொடுப்பனவுகளையும் மேற்கொள்ள வேண்டாம்.

**சிவா பிறதர்ஸ்**

யாழ்ப்பாணம் (077 772 2215)
(49341) (4.3.6.)

**பஸ்சேவை**
**சிங்ககிரி ரான்ஸ் போட்**
**யாழ்ப்பாணம்-கதிர்காமம்**

யாழ்ப்பாணத்திலிருந்து மகியங்கனை, மொனறாகலை ஊடாக கதிர்காமத்திற்கான தினசரி பஸ் சேவை. யாழ் புறப்படும் நேரம் மாலை 3.50இற்கு, கதிர்காமத்திலிருந்து புறப்படும் நேரம் இரவு 11.00இற்கு,

யாழ். ஆசனப் பதிவுகளுக்கு வரணி ஆசனப்பதிவகம்
T.P: 021 222 2868, 021 490 0955,
077 604 8921

கதிர்காமத்தில் ஆசனப்பதிவுக்கு:
ரோகித்த:
T.P: 072 8382140

கட்டணம்: 943/=
(49189) (5.6.3)

## பொது மக்களுக்கான அறிவித்தல்

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(31.05.2014 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
11. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. சிற்றி பாங்க் என்ஏ
14. செலான் பாங்க் பிஎல்சி
15. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
16. டொயிச் பாங்க் ஏஜி
17. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
19. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
20. பப்ளிக் பாங்க் பேர்காட்
21. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
22. மக்கள் வங்கி
23. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
24. ஸ்ராண்டட் சாட்டட் பாங்க்
25. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியண்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோஎ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்றிலொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
33. ப்ரெக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதே வேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் சில தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒருங்கிணைப்பு செயற்பாட்டின் கீழ் இணைக்கப்பட்ட/கையகப்படுத்தப்பட்ட/உட்கொள்ளப்பட்ட இருக்கின்றன. இது குறித்து பொதுமக்களுக்கு அறியத் தருவது என்னவென்றால் இந்த ஒருங்கிணைப்பு செயற்பாடானது மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடனான உங்களது தற்போதைய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வைப்புக்களை எந்தவகையிலும் பாதிக்காது என்பதாகும்.

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

➢ மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
நிதிக் கம்பனிகள் - தொ.பேசி: 2477500, 2477504 தொ.நகல்: 2477738 மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk
(C/14559)

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜீன் 26

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தின் ஆரம்ப இடைநிலைப்பிரிவுகளுக்கான கல்விக் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கே.வி.குகேந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா கலந்து கொள்வார். (வ)

**வீடு வாடகைக்கு**

சகல வசதிகளுடன் கச்சேரி நல்லூர் வீதி மத்தியில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 470 5540, 077 601 6314
(49343) (4.3.6.)

**வீடு / அறை வாடகைக்குண்டு**

கலாசாலை வீதி, திருநெல்வேலியில் வீடு அல்லது அறைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 609 0837
(49342) (4.3.6.)

**தேவை** உங்கள் இல்லத்தலங்களில் இருக்கின்ற பழைய பத்திரிகைகள், புத்தகங்கள், கொப்பிகள், காகிதாதிகள், காட்போட் என்பவற்றை மீள்சுழற்சிப் பயன்பாட்டுக்காக பணம் கொடுத்து வாங்குகிறோம்.
தொடர்பு: 077 418 0185
(49544) (4.3.6.)

## தடகளத் திருவிழா

உரும்பிராய், ஜீன் 26

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய தரம் 1,2,3 மாணவர்களுக்கான தடகளத் திருவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் உள்ளக விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இதில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவியான திருமதி பத்மலோஜினி சந்திரபாலன் கலந்து கொள்வார். (க)



**கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்**

இடம் மாற்றுவதை முன்னிட்டு 15.06.2014 முதல் இருப்பகற்றல்.
கொள்வனவு செய்யும் அனைத்து விதமான ஆடைகளையும் அதன் விலையில் இருந்து ½ வாசி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393

**மாவிட்டபுரம்-வீணியவரை**
**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான புனருத்தாரணசபைப் பொதுக்கூட்ட அறிவித்தல்**

அம்பாள் அடியார்களே!

மேற்படி ஆலயப்பொதுக்கூட்டம் எதிர்வரும் 29.06.2014 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெற உள்ளது.
இக் கூட்டத்திற்கு ஆலய அடியார்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வீணியவரை-மாவிட்டபுரம்
தெல்லிப்பழை.
24.06.2014
(சு/10197)(4.6)
புனருத்தாரண சபை,
செயலாளர்

**அபகரிப்பின் அத்திபாரம்**

வடக்கு கிழக்குப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களுக்கான கதவுகள் வேகமாக திறக்கப்படுகின்றன. உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் என்று தமிழ் மக்களை வெளியேற்றி விட்டு அவர்களின் காணிகளை இராணுவக் குடியிருப்புக்களுக்காக சுவீகரிக்கும் பணிகளும் மும்முரமாக அரங்கேறி வருகின்றன. விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு பகுதியில் தமது கால்களைப் பதித்திருந்த காலப் பொழுதுகளில் அவர்களின் முகாம்களாக இருந்த காணிகளும் தமக்கே உரித்துடையன என்றும் அரசு உரிமை கொண்டாடத் தொடங்கியிருக்கிறது. இன்னொரு புறத்தில் தமிழ் பகுதிகளில் இருக்கும் காணிகளை சிங்கள மக்களுக்கு உறுதி எழுதியும் கொடுக்கும் காரியத்திலும் அரசு இறங்கியுள்ளது. இதன் ஒரு பகுதியாகவே நாவற்குழியில் அடாத்தாக காணி பிடித்த சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு அந்த நிலங்களுக்கான உறுதிப்பத்திரங்களை அமைச்சர்.....

**சுடர் ஒளி**

வெளிவந்த இதழில்....

## வாழ்வின் எழுச்சித் திட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் 65%வெற்றி

### கடந்த மூன்று வருடங்களில்

யாழ்ப்பாணம், ஜூன் 26
கடந்த மூன்று வருடங்களாக யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வாழ்வின் எழுச்சித் (திவிநெகும) திட்டத்தில் 65 சதவீத வெற்றி பெறப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வாழ்வின் எழுச்சித் திட்டம் கடந்த 2011 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தினூடாக, வீட்டுத்தோட்ட ஊக்குவிக்கப்பட்டு, மரக்கறி மற்றும் பழவகைகளில் தன்னிறைவு அடைவதை நோக்காகக் கொள்ளப்பட்டது.

இதற்கமைய யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளும் பல்வேறு மரக்கறி விதைப்பைக் கற்றுகள், பழமரக் கன்றுகள், பயன்தரு மரக்கன்றுகள் என்பன வழங்கப்பட்டன.

அவற்றில் சில மரக்கன்றுகள் பொருத்தமில்லாத காலநிலையில் வழங்கப்பட்டதாலும், யாழ். குடாநாட்டின் காலநிலைக்குப் பொருத்த மில்லாத கன்றுகள் வழங்கப்பட்டமையாலும் அழிவடைந்தன. அத்துடன் தீவகப் பகுதிகளின் வறட்சியான காலநிலை காரணமாகவும் சில அழிவுகள் ஏற்பட்டிருந்தன.

எனினும் கடந்த மூன்றாண்டுகளில் யாழ்.மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக, மேற்படி திட்டம் 65 சதவீதம் வெற்றியைப் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெற்றியை மேலும் அதிகரிப்பதற்காக, கடந்த காலங்களில் விடப்பட்ட தவறுகளைக் களைவதற்கு, வாழ்வின் எழுச்சியை நடை முறைப்படுத்தும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (வ-5)

# அமைச்சர் டக்ளஸ் வராததால் வழங்கப்படவில்லை நியமனம்

### யாழ். மாநகர சபை தீயணைப்பு பிரிவினருக்கு நேற்று

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்.மாநகர சபை தீயணைக்கும் சேவைப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நேற்று சமுகமளிக்காததால் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் அடுத்த மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவால் அவை வழங்கப்படும் என்று யாழ்.மாநகர முதல்வர் திரு மதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

தீயணைப்புச் சேவைக்கென தெரிவு செய்யப்பட்ட 18 பேருக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்றைய தினம் கையளிக்கப்படவிருந்தது. எனினும் அமைச்சர் சமுகமளிக்காத நிலையில் முதல்வர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முதல்வரால் இவ்வாறு கூறப்பட்டது. அமைச்சரின் கையாலேயே இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது விருப்பம். அமைச்சரால் சமுகமளிக்க முடியாததால் அடுத்த மாதம் 6, 7 ஆகிய திகதிகளில் நியமனக் கடிதங்கள் அமைச்சரின் கையால் வழங்கப்படும் என்று முதல்வர் குறிப்பிட்டார். தீயணைப்புப் பிரிவினருக்கான நிரந்தர நியமனம் வடமாகாணத்தில் முதல் தடவையாக யாழ். மாநகர சபைக்கு கிடைக்கிறது. (வ-7)

## வீதி சமிக்ஞைகளை கையாள்வது தொடர்பில் விழிப்புணர்வு நாடகம்



யாழ்ப்பாணம், ஜூன்.26
யாழ்.மாவட்டத்தில் அதிகரிக்கும் விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்கில் வீதி சமிக்ஞைகளை கையாள்வது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நேற்று நடைபெற்றது.

யாழ்.தலைமைப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த சில்வா தலைமையில் நேற்று யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் விழிப்புணர்வு செயலமர்வு நடைபெற்றது. யாழ்.பொது நூலகத்தின் முன்பாக உள்ள வீதியில் வீதிச் சமிக்ஞைகளை எவ்வாறு பின்பற்றுவது, மற்றும் அதனூடாக வீதி விபத்தைத் தவிர்ப்பது தொடர்பிலான விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது.

இதன்போது, மாணவர்களின் ஊடாக வீதிப்போக்குவரத்தை மாணவர்கள் கடைப்பிடிப்பதுடன், ஏனையோருக்கும் வீதிச் சமிக்ஞைகளை கடைப்பிடிப்பதற்கு வலியுறுத்த அறிவுறுத்தல்களும்வழங்கப்பட்டன.

இந்த செயலமர்வில், வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் வட மாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபா பூஜித ஜயசுந்தர உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாட சாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-106)

## ஆலயத்தில் திருட முயன்ற நபர் வசமாக மாட்டினார்

வலி.வடக்கு, ஜூன் 26
ஆலயக் கதவுகளை உடைத்து ஆலயத்துக்குள் உள்ளிறங்கிய திருடன் காவலாளி விழித்துக்கொண்டதால் வகையாக மாட்டிக் கொண்டான். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு அராலி கிழக்கில் இடம் பெற்றுள்ளது.

அராலி கிழக்கு, ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா கடந்த திங்கட்கிழமை நிறைவடைந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் அராலி கிழக்கைச் சேர்ந்த 27 வயது மதிக்கத்தக்க இளைஞனொருவன் ஆலய குருக்களின் வீட்டின் ஊடாகச் சென்று கதவுகளை உடைத்து உண்டியலில் உள்ள பணத்தைத் திருட முயன்றுள்ளான்.

சத்தம் கேட்டு விழித்துக் கொண்ட காவலாளி ஆலயத்தினுள் 'டோர்ச்' லைற்றை அடித்ததும் ஆலயத்துக்கு வெளியால் பாய்ந்து வயல்வெளி ஊடாக தப்பி ஓட முயன்றான். சத்தம் கேட்டுவழித்துக்கொண்ட ஆலயச் சுற்றாடலில் கடை வைத்திருந்தவர்களும் குறித்த நபரை வயல் வெளிகள் ஊடாக துரத்திச் சென்று பிடித்ததுடன் வட்டுக்கோட்டைப் பொலிஸாரை அழைத்து அந்த இளைஞனை ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை - குறித்த இளைஞன் அந்தப் பகுதிகளில் இடம் பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடனும் தொடர்புடையவன் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (வ- 86)

## மாவிட்டபுரம் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 2015 இல்

### திருப்பணிச் சபையினர் நேற்றுக்கூடித் தீர்மானம்

வலி.வடக்கு, ஜூன் 26
மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய கும்பாபிஷேகத்தை அடுத்தாண்டின் முற் பகுதியில் நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வது என்று மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய திருப் பணிச் சபையினர் நேற்று முடிவெடுத்துள்ளனர்.

திருப்பணிச்சபையினரின் கூட்டம் ஆலய பிரதமகுருவும் ஆதீன கர்த்தாவுமான பேரரசு இரத்தினசபாபதிக்குருக்கள் தலைமையில் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஆலயத்தின் திருத்தப் பணிகள் முற்றுப் பெறாதுள்ளதாகவும் அதனை விரைவாகச் செய்து முடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக ஆராயப்பட்டு குறிப்பிட்ட பணிகளை பலருடைய உதவிகளைப் பெற்றுச் செய்து முடிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று முடிவு எடுக்கப்பட்டது.

அடுத்தாண்டு கும்பாபிஷேகம் நடத்த வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது. (வ-86)

## போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட ஆலயம் மீண்டும் அதே இடத்தில்

போர்த்துக்கீசர் காலத்தில் அழிக்கப்பட்டதாகக் கருதப்படும் சிவன் ஆலயம் மீண்டும் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு மேற்குப் புறமாக அமைக்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போர்த்துக்கீசர் ஆட்சிக்கு முன்னர் சாவகச்சேரி வாரிவனேஸ்வர சிவன் ஆலயத்தில் வழிபாடுகள் இடம்பெற்று வந்ததாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலயத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த திருமஞ்சனக் கிணறு தற்போதைய பஸ் நிலைய வளாகத்தில் இன்றும் காணப்படுகிறது. அத்துடன் இந்தப் பகுதி யில் பண்டைய காலத்து கருங்கல் விக்கிரகங்கள் மற்றும் பூசை வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டு சாவகச்சேரி பகுதியிலுள்ள சிவன் கோயில்களிலும், யாழ்.பல்கலைக்கழக தொல் பொருள் அருங்காட்சியகத்திலும் வைக்கப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் நீதிமன்ற வளாகத்துக்காகக் கட்டடங்கள் அமைக்க அத்திபாரம் வெட்டிய வேளையில் அப்பகுதியில் ஆலயம் இருந்ததை உறுதிப்படுத்தும் சான்றுப் பொருள்கள் காணப்பட்டன.

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்ட வேளையில் நீதிமன்ற வளாகத்தில் ஆலயக் கட்டடமொன்றை அமைப்பதற்கான அத்திபாரக் கல் நடப்பட்டது. அதன் பின்னர் அந்த முயற்சியில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்த நிலையில் பிரதேசத்தைச் சேர்ந்த நலன் விரும்பிகளின் பெரு முயற்சியால் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு மேற்குப் புறமாகவும், சாவகச்சேரி நீதிமன்றின் வடக்குப் புறமாகவும் காணப்படும் காணியொன்றில் கோயில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## மாவிட்டபுரம் ஆலயச் சூழலில் புகைபொருள்கள் விற்கத் தடை

### திருவிழா தொடர்பான கூட்டத்தில் நேற்று முடிவு

வலி.வடக்கு, ஜூன் 26
வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயவருடாந்தத் திரு விழாவை முன்னிட்டு ஏற்பாட்டுக் கூட்டம் வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது திருவிழா காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டன.

ஆலயச் சுற்றாடலில் தற்காலிகமாக பொலிஸ் நிலையம், சுகாதார வைத்தியதிகாரி பணிமனை மற்றும் பிரதேச செயலகம் என்பனவற்றை வழமை போன்று அமைப்பது என்றும் ஆலயச் சுற்றாடல் சுகாதாரம், வாகனங்களின் தரிப்பிடம் போன்ற விடயங்களை பிரதேசசபை கைக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியால் பின்வரும் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆலயச் சுற்றாடலில் அமைக்கப்படும் கடைகளில் புகைத் தல் பொருள்களின் விற்பனைக்கு தடை செய்வதெனவும், அதனை மீறிப் புகைத்தல் பொருள்கள் விற்பனை செய்யப்படுமாக இருந்தால் கடைகளின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல்.

கடைகளில், உணவகங்களில் பணியாற்றுவோர் அனைவரும் சுகாதார வைத்திய அதிகாரியால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர் அனுமதி அளித்தால் மட்டுமே கடைகளில் பணியாற்றுதல்.

கோயில் அன்னதான மடத்தில் சமையலாளர்களாக பணிபுரிவோர் சுகாதார வைத்திய திகாரியின் அனுமதியின் பின்னரே பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

பிரதேச சபையால் இரவு நேரத்தில் பொதுமக்கள் நடமாடக் கூடிய வகையில் ஆலயச் சுற்றாடலில் உள்ள முக்கிய வீதிகளுக்கு மின் வெளிச்ச வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும்.

போன்ற விடயங்கள் விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டு பிரதேச சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. (வ-86)

## விளையாட்டரங்க குளிர்பான கடையில் பொருள்களின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வட மாகாண கல்வி அமைச்சால் மாகாண கல்வி வலயங்களுக்கு இடையே நடத்தப்படும் போட்டிகளின்போது மைதானத்தில் அமைக்கப்படும் குளிர்பானக் கடையில் அனைத்துப் பொருள்களும் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

குளிர்பானங்கள் குளிர்பானப் போத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விலையில் இருந்து 10-15 ரூபா வரை அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. அதேபோன்று பைகளில் அடைக்கப்பட்டு வரும் சிற்றுண்டி வகைகளும் கூட குறிப்பிட்ட விலையில் இருந்து ஐந்து ரூபா முதல் பத்து ரூபா வரை அதிகரிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் மாணவர்கள் முதல் ஆசிரியர்கள், அலுவலர்கள் எனப் பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர். (வ-86)

## கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26
மாதகல் கடற்கரையை அண்மித்து பற்றைக்குள்ளிருந்து மூன்றரைக் கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் பற்றைக்குள் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடற் படையினர் அதனை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். எனினும் எவரும் கைதாக வில்லை என்று பொலிஸார் மேலும் தெரிவித் தனர். (4)

# அருகங்குன்று காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு

## தடுத்து நிறுத்தக் கோருகின்றனர் மக்கள்

மன்னார், ஜூன் 26

மன்னார், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அருகங்குன்று குடியிருப்புக்குப் பின்பக்கமாகவுள்ள காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

அரசியல்வாதிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி சட்ட விரோத மணல் அகழ்வில் சிலர் ஈடுபட்டு வருவதால் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று மக்கள் தெரிவித்தனர்.



மணல் அகழ்வு இடம்பெற்ற பகுதி

மணல் அகழ்வுக்கு சாதகமாகவுள்ள குறித்த அனுமதிப்பத்திரத்தைத் தடை செய்ய வேண்டும்.

அருகங்குன்று பகுதியின் காட்டுப் பிரதேசங்களில் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இந்தச் சம்பவம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டுசென்றபோதிலும் இதுவரை அதனைத் தடுத்து நிறுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கூறினர்.

மணல் அகழ்வு நடைபெறும் போது பொலிஸாருக்கோ அல்லது விசேட அதிரடிப்படையினருக்கோ அறிவித்தால் அவர்கள் குறித்த பகுதிக்கு வந்து மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துவது வழக்கமாகியுள்ளது.

எனினும் அவர்கள் சென்றபின் மீண்டும் மணல்அகழ்வு இடம்பெற்று வருகிறது என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.

மணல் அகழ்வு செய்வதற்கு சிலருக்கு அனுமதிப்பத்திரம் உள்ள நிலையில், மணல் அகழ்வு செய்வதற்கான நாள், மணல்அகழ்வுசெய்யும் அளவு என்பவற்றுக்கு மேலதிகதாக மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது என்று மக்கள் கூறினர்.

எனவே மணல் அகழ்வுக்கு சாதகமாகவுள்ள குறித்த அனுமதிப் பத்திரத்தை தடைசெய்ய வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எனவே மணல் அகழ் வைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சி, மாயவனூர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தலா 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கால்நடைகளை சேவா லங்கா நிறுவனம் வழங்கியுள்ளது.

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மாயவனூர் கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் 'சேவாலங்கா' நிறுவனத்தால் கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ப்பைத் தெரிவு செய்துள்ள 12 பயனாளிகளுக்கு இவ்வாறு கால் நடைகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-55)

## குடிதண்ணீர் தட்டுப்பாட்டால் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 26

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் குடிதண்ணீர் நெருக்கடியை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள கிணறுகளில் தண்ணீர் முற்றாக வற்றியுள்ளது. அதனால் நீண்ட தூரம் சென்றே குடிதண்ணீரைப் பெற வேண்டியுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை குடி தண்ணீர் வழங்கலில் ஈடுபட்டுள்ளபோதும் முழுமையான தேவையை நிறைவேற்றத் தண்ணீர் போதுமானதாக இல்லை என்று மக்கள் கூறினர். (ச-18)

# சுயதொழில் பயிற்சி ஜூலையில் ஆரம்பம்

## மாற்றுவலுவுடையோருக்கு

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்று வலுவுடையோருக்கு சுயதொழில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனம் கோரியுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் ஆலோசனையின் கீழ், 6 மாத காலம் நடைபெறவுள்ள இந்தச் சுயதொழில் பயிற்சி நெறி அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சியில் தையல் பயிற்சி, கைத்தொலைபேசி திருத்துதல் போன்றவை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்காக மாற்றுவலுவுள்ள 40 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பயிற்சி நிறைவில் 10,000 ரூபா பெறுமதியான சுயதொழில் உபகரணங்களும், அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் பொருத்தமான சுயதொழில் உதவிகளும் வழங்கப்படவுள்ளன என்று கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் ச.மோகனபவன் தெரிவித்தார்.

பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தொழில்நுட்ப நிறுவனத்துடன், அல்லது கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச செயலகங்களிலுள்ள சமூக சேவைப் பிரிவுடன் தொடர்புகொண்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று அவர் கூறினார். (ச-9)

# சத்தமிட்டபடி தண்ணீருக்காக அலைகின்றன கால்நடைகள்

## பூநகரி பிரதேசத்தில் முற்றாக வற்றின குளங்கள்

பூநகரிப் பிரதேசத்தில் கோடை காலத்தில் கால்நடைகளின் தாகத்தைத்தீர்க்கும் நீர் நிலைகளாக உள்ள குளங்கள் அனைத்தும் முற்றாக வற்றிய நிலையில் கால்நடைகள் சத்தமிட்ட வண்ணம் தண்ணீருக்காக அலைந்து திரிகின்றன.

பூநகரியில் உள்ள நெடுங்குளம், ஆனைப்பான் குளம், மேளாப்புக்குளம், சோபாதுபிட்டிக்குளம், சின்னவேலிக்குளம், தாளக்குளம் உட்பட பலகுளங்கள் முற்றாகவற்றியுள்ளன. அதனால் தண்ணீர் இல்லாமல் கால்நடைகள் நோய் வாய்ப்பட்டு உயிரிழக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது என்று பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

எனவே கால்நடைகளைப் பாதுகாக்கக் கூடியதான திட்டம் ஒன்றை விரைந்து எடுக்க வேண்டும் என்று பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)



தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகத்தால் அத்தியாவசிய ஆவணங்ளை இலவசமாகப் பொது மக்களுக்கு வழங்கும் நடமாடும் சேவை ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில் அதிகளவான மக்கள் கலந்துகொண்டு தமது ஆவணங்களுக்குரிய பதிவுகளை மேற்கொண்டனர். (ச-421)

# இருவருக்கு அபராதம்

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சியில் மது போதையில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட இருவருக்கு தலா 5,000 ரூபா அபராதம் செலுத்துமாறு கிளி நொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் கடந்த சனிக்கிழமை மதுபோதையில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட இருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-18)

## கழிவுகளை கொட்டுவதால் சிரமம்

மன்னார், ஜூன் 26

மன்னார் நகர சபை எல்லைக்குட்பட்ட சேமக்காலைப் பகுதிக்கு அருகாமையில் நகர சபையால் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு வருவதால் தாம் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கொட்டப்படும் கழிவுகள் எரிக்கப்படுகின்றபோது புகை மண்டலமாகத் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதை பிரதேச மக்கள் தடுத்தபோது சம்பவ இடத்துக்கு வருகை தந்த நகர சபைத் தவிசாளர் அரசால் 5 ஆம் கட்டையில் ஒதுக்கப்பட்ட 6 ஏக்கர் காணியில் இனிமேல் கழிவுப் பொருள்களை கொட்டுவதென உறுதியளித்திருந்தார்.

எனினும் அந்த உறுதி மொழியின் பின்னரும் இந்தச் செயற்பாடு தொடர்ந்து நடைபெறுகிறது என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

எனவே குறித்த பகுதியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-415)

# 2,069 குடும்பங்களுக்கு அமைக்கப்பட்டன வீடுகள்

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக புள்ளி விவரத்தில் தகவல்

முல்லைத்தீவு, ஜூன் 26

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியேறியவர்களில் 2,069 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், 1,204 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலக புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இதுவரையில் 5,600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளன. அவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவர்களில் 3,273 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களில் 2,069 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 1,204 குடும்பங்களுக்குவீடுகள் அமைக்கும்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியின் மூலம் 1,648 வீடுகள் அமைத் துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசின் வீட்டுத் திட்டம் கட்டம் கட்டமாக மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

முத்துஐயன்கட்டு கிராமத்தில் 91 வீடுகளும், அம்பகாமத்தில் 58 வீடுகளும், திருமுறிகண்டி, இந்துபுரம் கிராமத்தில் 127 வீடுகளும், காதலியார் சமணன் குளத்தில் 143 வீடுகளுமாக 419 வீடுகள் அமைக்கப் பட்டு வருகின்றன.

ஒலுமடுவில் 74 வீடுகளும், மாங்குளத்தில் 173 வீடுகளும், பனிக்கன்குளத்தில் 24 வீடுகளும், திருமுறிகண்டியில் 191 வீடுகளுமாக 462 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

முத்துவிநாயகபுரத்தில் 35 வீடுகளும், கருவேலன்கண்டலில் 37 வீடுகளும், தட்டையர் மலையில் 59 வீடுகளும், கனகரட்ணபுரத்தில் 55 வீடுகளும் வித்தியாபுரத்தில் 137 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

பகுதியளவு சேதமடைந்த 346 வீடுகளில் 287 வீடுகளையே திருத்தி அமைப்பதற்கு அனுமதி கிடைத்த நிலையில் அவற்றில் 239 வீடுகள் யு.என். கபிராற் நிறுவனத்தின் நிதியுதவி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் தனிநபர் மற்றும் இருநபர் கொண்ட குடும்பங்கள் தவிர்ந்த 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாக உள்ளன என்று புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-55)

# இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம் நாளைய கனவுகள்



**தேவையற்ற நினைவுகள், சிந்தனைகள், ஏமாற்றங்கள் மனதில் புதைந்துள்ளன. எனவே அவை எல்லாவற்றிலும் இருந்து விடுபட வேண்டுமானால் நேற்றைய நினைவுகளை எல்லாம் மறந்துவிட வேண்டும்.**

இன்றைய நாகரிக மாற்றத்தினாலும் தொடர்பாடலினாலும் பல இளை ஞர்களும், யுவதிகளும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேவையற்ற நினைவுகள், சிந்தனைகள், ஏமாற்றங்கள் மனதில் புதைந்துள்ளன.

எனவே, அவை எல்லாவற்றிலும் இருந்து விடுபட வேண்டுமானால் நேற்றைய நினைவுகளை எல்லாம் மறந்துவிட வேண்டும்.

இல்லையெனில் ஒரு அடி கூட நகரமுடியாமல் ஸ்தம்பித்துவிட நேரிடும். எமது இலக்கை நோக்கி நகர வேண்டும். வாழ்வில் வீழ்ச்சி ஏற்படலாம். ஆனால் விழ்ந்து விடக் கூடாது.

தமிழன் என்று சொல்லடா, தலை நிமிந்து நில்லடா என்ற வாசகத்தை மகுட வாசகமாக நினைத்து நாள்களை வெற்றிக்கான பாதையில் இட்டுச் சென்றால் இறப்பின் பின்னும் வாழலாம்.

அப்துல்கலாம் போல நாமும் அடிப்படை அறிவை விருத்தி செய்து நாளைய இனிமையான கனவுகளை நிஜமாக்க விமர்சனங்களையும், அவமானங்களையும் தாண்டி அயராது முயற்சிப்போம்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம்

**நேற்றைய நினைவுகளா? நாளைய கனவுகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## தற்காலிக முகவரிகள்



எல்லா ஊர்களும்
விடிந்திருக்கிறது
எம் ஊரைத் தவிர

பறவைகள் கூட
புறக்கணிக்கின்றன
எம் வானத்திலும்
மேடு பள்ளமாம்

மழையில் நனைந்த பின்பும்
குடிசைகள் சிரிக்கின்றன
அங்கே இருக்கும்
மனிதர்களைப் பார்த்து

காக்கைகள் மட்டும்
குளித்து மகிழ்கின்றன
எம் தெருவின்
சாக்கடையை சமுத்திரமென எண்ணி

பள்ளிக்கூடங்களில்
மந்தைக் கூட்டங்கள்
சிறுவர்களுக்கு பதிலாய்

சீர்திருத்தம், அபிவிருத்தி
மின்சாரமும்
தொலைந்து போனது
தொலை தூரத்துக்கு
தெரு மூடி மடம்
ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி
இவைதான் இன்று
எம் ஊரின்
தற்காலிக முகவரிகள்



*-சாம்-*

# வாழ்க்கையே ஓர் ஆராய்ச்சிதான்...

*(கடந்தவாரத் தொடர்ச்சி...)*



**தன்னுடைய குற்றங்களை ஆராய்வதை விடுத்து பிறருடைய குற்றங்களை ஆராய்பவன் தன் குற்றங்களை முழுமையாக மறைக்கின்றான்.**

தன்னைப் பற்றித் தானே ஆராய்வது ஒருபோதும் சுயநலமல்ல. ஏனெனில் தன்னை ஆராய்பவன் தனக்குள்ளே அனைத்தையும் இப்பிரபஞ்சம் உட்பட சகலவற்றையும் அடக்கி விடுகின்றான்.

எல்லாவற்றையும் அகங்காரமற்ற தெய்வீக 'நான்' என்ற உணர்வோடு உணருகின்ற பொழுது அவன் கடவுளாகவே மாறி விடுகின்றான்.

அப்படிப்பட்டவர்களே 'அகம் பிரமம் அஸ்மி' என்று தங்களைத் தாங்களே தியானிப்பார்கள். அதாவது 'நான் கடவுள்' என்று உணரும் பொழுது வாழ்வில் முழுமையாக வெற்றி பெற்றவர்கள் அவர்களே.



தன்னுடைய குற்றங்களை ஆராய்வதை விடுத்து பிறரு டைய குற்றங்களை ஆராய்புவன் தன் குற்றங்களை முழுமையாக மறைக்கின்றான்.

வாழ்வின் முழுமையான ஆரோக்கியமே தன்னைத் தானே ஆராய்வதில் தான் தங்கியுள்ளது.

பிறரை ஆராய்பவனோ தன் சுய வாழ்வின் ஆரோக்கியத்தையும், தன் சுயத்தையும் அடியோடு இழந்து விடுகின்றான்.

பிறரை மேலும், மேலும் ஆராய்பவன் பிறருடைய குணநலன்களையும் தீய எண்ணங்களையும் அவர்களுடைய கர்ம வியாதிகளையும் இயல்பாகவே பெற்று விடுகின்றான்.

ஆகவே பிறரைப் பற்றி சிந்திப்பவன் பிறருடைய மாயையாகவும் தன்னைப் பற்றி சிந்தித்து ஆராய்பவன் கடவுளாகவும் மாற நேர்கிறது.

இதில் வேதம் சொல்வது போல் 'நீ எதை நினைக்கிறாயோ? அதுவாகவே மாறுகிறாய்' என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

எம் தேசத்து இளம் தலைமுறையினரே வாழ்க்கை விஞ்ஞானம் என்பது விவேகம் கொண்ட வெறும் ஆராய்ச்சியில்தான் தங்கியுள்ளது.

தன்னைத் தானே நுட்பமாக ஆராய்கின்றபோது வெற்றி பெற்றவர்களாகவும் அந்த நுட்பம் சற்று தடம்புரளும் போது வாழ்வில் தோல்வியுற்றவர்களாகவும் மாறி விடுகின்றோம். வாழ்வின் வசந்தமே அக ஆராய்ச்சியில்தான் பொருந்தியுள்ளது.

இதுவே உங்களின் மன சமநிலையை ஏற்படுத்த தகுந்த வழியாகும். நீங்கள் கடவுளுக்கு அருகில் இருக்கிறீர்களா? மிகவும் தூர விலகி இருக்கின்றீர்களா? என்பதை இந்த தொடர் ஆராய்ச்சியின் மூலம் அறிந்து கொள் ளலாம்.

*சாம்-ரமேஸ்குமார்*
*மருதனார்மடம்.*

## உணர்வு



மலர்ந்த பூவுக்குத் தான்
வாசனை அதிகம்,
பகிரும் உணர்வுக்குத் தான்
பாசம் அதிகம்
உணர்வுகளின் ஆசையில்
காதலுண்டு
உலகில்
பல உறவுகள்
தோன்றி மறையலாம்
இதயத்தில் தோன்றிய
முதல் உறவு
நீ தானே
நீ இல்லாத நொடிப் பொழுதும்
அர்த்தமற்றதாகிவிடும்.

*சிந்து சிவதாஸ்.*
*ஜங்கரன் வீதி.*

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................

முகவரி :-....................................

........................ ........................
திகதி கையொப்பம்

**இளவல்கள் வட்டம் ,**
உதயன, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தலையீடுகள் மாறாத வரையில் புதிய சட்டங்களாலும் பயன் இல்லை

வெறுப்புணர்வைத் தூண்டும் வகையிலான உரைகளை, பேச்சுக்களைத் தடை செய்வதற்கான சட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்படுகின்றன என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கிறார். சட்ட வரைவு இன்னும் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அளுத்கம உள்ளிட்ட பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதற்குப் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட ஞானசார தேரரின் வெறுப்பூட்டும் பேச்சுத்தான் காரணம் என்ற குற்றச்சாட்டுக்கள் தீவிரம் பெற்றுள்ள பின்னணியில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் கருத்து வெளியாகி இருக்கிறது.

ஏற்கனவே இருக்கும் சட்டவிதிகளை மாற்றி அமைத்து, வெறுப்பூட்டும் உரையை, பேச்சை, எழுத்தை வெளியிடுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் வகையில் புதிய சட்டத்தைக் கொண்டு வருவதே இந்த முயற்சியின் நோக்கம்.

நோக்கம் நல்லதுதான். ஆனால், அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதன் மூலம் மட்டும், திட்டமிட்ட இனவன்செயல்களை – சிறுபான்மையினருக்கு எதிரான அடக்கு முறைகளை – தடுத்துவிட முடியுமா என்ற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை. கடந்த கால வரலாறுகளில் இருந்து கிடைத்த படிப்பினைகள், இல்லை என்றே பதில் சொல்கின்றன.

இலங்கையில் ஏற்கனவே ஏராளம் சிறந்த சட்டங்கள் இருக்கின்றன. உருவாக்கப்பட்ட அத்தகைய சட்டங்களால் மட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடிந்ததில்லை. பிரச்சினை உண்மையில் சட்டங்களில் இல்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்துபவர்களிடமே சிக்கல் உள்ளது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தும் பொலிஸாரைத் தமது கடமையை ஒழுங்காகச் செய்ய விடாது தடுக்கும், திசை திரும்பும் கேவலமான சிந்தனை கொண்ட அரசியல்வாதிகளிடமும், அதிகார அடிவருடிகளிடமுமே பிரச்சினை இருக்கிறது. இவர்கள்தான் சட்டத்தையும் ஒழுங்கையும் தமக்கேற்றவாறு வளைக்கிறார்கள். சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்த வேண்டிய காவலர்களை ஊழல் செய்யத் தூண்டுகின்றார்கள். அல்லது நிர்ப்பந்திக்கிற்றார்கள்.

எனவே புதிய புதிய சட்டங்களை உருவாக்குவதால் மட்டும் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது. இன முரண்பாட்டைத் தூண்டுகிறார் என்று குற்றஞ்சாட்டி முஸ்லிம் இனத் தலைவரான அசாத் சாலியைக் கைது செய்ய முடிந்த பொலிஸாரால், அதே சட்டத்தைப் பயன்படுத்தி ஞானசார தேரரை இன்று வரையில் கைது செய்ய முடியவில்லையெனில் அது சட்டத்தின் தவறா? அதை நடைமுறைப்படுத்துபவர்களின் தவறா?

அதேபோன்றே, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க இலங்கை ஜனாதிபதியையும் உள்ளடக்கிய அமைச்சரவை மறுக்கிறது. ஒரு நாட்டின் அதியுயர் சட்ட ஆவணமான அரசமைப்பை, அதை நடை முறைப்படுத்த வேண்டிய அரசே மீறுகின்றபோது – தனது அரசியல் சுயநலன்கள் கருதி அதைச் செய்கின்றபோது, புதிது புதிதாகச் சட்டங்களை இயற்றி என்ன பயன்? அதுபோன்றதே தற்போது மேற்கொள்ளப்படும் வெறுப்புணர்வூட்டலுக்கு எதிரான சட்ட உருவாக்கமும்கூட. இறுதியில் இத்தகைய சட்டங்கள் சிறுபான்மை மக்கள் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதை நசுக்குவதற்கு மட்டும் பயன்படுத்தப்படுமே தவிர, அவை உருவாக்கப்பட்டதன் உண்மை நோக்கத்தை நிறைவு செய்யமாட்டா.

நேர்மையான அரசியல் தலைமையும், சுயாதீனமான சட்டம் ஒழுங்குக் காவலர்களும் உருவாக்கப்படாத வரையில், புதிய சட்டங்களாலும் சாதிக்க முடியப்போவது ஒன்றுமில்லை. எனவே அமைச்சர் வாசுதேவ போன்றவர்கள் லஞ்சம், ஊழல் அற்ற உண்மையான ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக உழைக்க வேண்டுமே தவிர, புதிய சட்டங்களை உருவாக்குவதற்காகவல்ல.



# இலங்கையின் விமோசனம் ஆட்சியாளர்களின் கைகளில்

## மனம் வைத்தால் நிச்சயம் இடமுண்டு

சேரலாதன்

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்துச் செல்வதாக அரசு புள்ளி விவரங்களை அடுக்கிக் கொண்டிருக்கும் அதேவேளை, இலங்கையில் வாழுகின்ற சாதாரண மனிதர்களின் நிலை பரிதாபகரமான கட்டத்தை எட்டியுள்ளது. பொருளாதாரக் கஷ்டங்கள் குரல் வளையை நெருக்குவதால் அதிலிருந்து விடு படுவதற்கான மார்க்கங்கள் எதுவும் புலப்படாது அவர்கள் தடுமாறி வருகின்றனர்.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அங்கு வாழுகின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருத்தல் வேண்டும். மக்கள் வறுமையில் வாடிக்கொண்டிருக்கும் போது மத்திய வங்கியின் அறிக்கைகளைக் காட்டிக்கொண்டிருப்பதால் அவர்களின் துன்பங்கள் தீரப் போவதில்லை. இன்று இந்த நாட்டிலே சகல உணவுப் பொருள்களின் விலையும் உச்சநிலையில் காணப்படுகின்றன. அரிசியிலிருந்து உப உணவுப் பொருள்கள் வரை எட்டாத உயரத்தை எட்டிப்பிடித்துள்ளன. ஒரு நாளைக்கு ஒருவேளை உணவை உண்பதென்பது கூட ஒரு சாதாரண குடும்பத்தின் சாதனையாகவே மாறிவிட்டது. அதிலும் அதிக எண்ணிக்கையான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களின் நிலை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. சாமானியர்கள் உணவகங்களை எட்டிப்பார்க்கக்கூட முடியாத அளவுக்கு அங்கு அதிக விலையில் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. உணவகங்களில் விற்கப்படும் உணவு வகைகளுக்கு விலைக் கட்டுப்பாடுகள் எவையும் விதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உணவக உரிமையாளர்கள் தமது மனதுக்குப் பிடித்த விதத்தில் விலைகளை நிர்ணயம் செய்கின்றனர்.

இந்த நிலையில் அரசினால் அபிவிருத்தி என்ற கோஷத்தை மட்டுமே எழுப்ப முடிகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தி முயற்சியை எவரும் குறை கூறிவிட முடியாது. ஆனால் மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அந்த அபிவிருத்தி அமைந்திருத்தல் வேண்டும். இன்று புதிய புதிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுவதைக் காண்கின்றோம். இவற்றுள் சில அதிவேக நெடுஞ்சாலைகளாகவும் காணப்படுகின்றன. அது மட்டுமல்லாது புதிய விமான நிலையம், துறைமுகம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த சாலைகள், துறைமுகம், விமான நிலையம் என்பன முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. அத்துடன் சீரான ரயில் சேவைகளும் அவசியமானதே. இலங்கை ஒரு சிறிய நாடாகும். அதன் வர்த்தக நடவடிக்கைகளும் ஒரு சிறிய வட்டத்தினுள் உள்ளடங்கிக் காணப்படுகின்றன. முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாகத் தேயிலை, றப்பர் என்பன ஒரு காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கியபோதிலும், இவற்றின் முக்கியத்துவம் இன்று குறைந்துவிட்டது என்றே கூறமுடியும். தேயிலை இன்று முன்னரைப் போலன்றி ஒரு வரையறைக்குட்பட்ட அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. இதற்கு வேறு நாடுகளிலும் தேயிலை உற்பத்தி இடம்பெறுவதும் இங்குள்ள தேயிலைத் தோட்டங்களில் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததும் முக்கிய காரணங்களாகும். செயற்கை றபரின் உற்பத்தி முன்னணி நாடுகளில் அதிகரித்துவிட்டதால் இலங்கையில் உற்பத்தியாகும் இயற்கை றபரின் தேவை குறைந்துவிட்டது.

இன்று தைத்த ஆடைகளின் ஏற்றுமதி, வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் அனுப்பி வைக்கும் பணம் என்பன இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரிதும் உதவி வருகின்றன. இவற்றின் மூலமாக இந்த நாட்டுக்குத் தேவையான அந்நிய செலாவணியும் கிடைக்கின்றது.

ஆனால் இவையெல்லாவற்றையும் கடந்து உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், வெளிநாடுகள் என்பன பெருமளவு கடன்களை இலங்கைக்கு வழங்கி வருவதைக் காண முடிகின்றது. இங்கு இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் கூட கடன்களைப் பெற்றே இடம்பெறுவதாகத் தெரியவந்துள்ளது. அபிவிருத்தியின் பயன்களை அனுபவிக்கும் மக்களே கடன் சுமையையும் தமது தலைகளில் சுமக்க நேரிடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஒருமுறை சிங்கப்பூரின் பிரதம மந்திரியொருவர் இலங்கைக்கு வருகை தந்து பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையில்; இலங்கையைப் போன்று சிங்கப்பூரையும் கட்டியெழுப்புவேன் என தெரிவித்தார். இலங்கையை விட மிகச் சிறிய நாடான சிங்கப்பூர் பெரிய நாடுகள் மூக்கில் விரல் வைக்கும் அளவுக்குப் பொருளாதாரத்தில் உயர்ந்து நிற்கின்றது. அங்கு வசிக்கும் மக்களும் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றனர். இத்தனைக்கும் பெரும் தொழில் நிறுவனங்களோ ஆலைகளோ அங்கு இல்லை. பொருள்களை இறக்குமதி செய்து அவற்றை ஏற்றுமதி செய்யும் வர்த்தக நடவடிக்கைகளின் முக்கிய இடத்தை வகிக்கின்றது. பெரும் செல்வந்தர்கள் தமது மருத்துவத் தேவைகளுக்காக சிங்கப்பூரையே நாடுகின்றனர். ஆனால் எமது நாடு எந்த நிலையில் காணப்படுகின்றது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். சிங்கப்பூரில் சரியான, பாகுபாடு காட்டாத, திறமைக்கு முன்னுரிமை வழங்கும் அரசியல் தலைமை வாய்த்துள்ளதால் அந்த நாடு சுபீட்சத்தில் திளைக்கின்றது. ஆனால் அந்த நிலைமை இங்கில்லாததால் அந்த இலக்கை எம்மால் எட்ட முடியவில்லை.

கடந்த காலங்களில் நிகழ்ந்த இனக் கலவரங்களின் போது சிறுபான்மைத் தமிழ் மக்களின் பொருளாதார மையங்கள் மீது இலக்கு வைத்துத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு அழிக்கப்பட்டன. இதனால் தமிழர்கள் மட்டுமல்லாது நாட்டின் பொருளாதாரமே பெரும் பாதிப்பை எதிர்கொண்டது. தற்போது முஸ்லிம் மக்களுக்கெதிரான வன்முறைச் செயல்களின் போதும் அவர்களது பொருளாதாரத்தை அழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. இவையும் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

எந்தவொரு நாட்டிலும் அங்கு வாழும் சக்ல இனங்களும் சரிசமமாக நடத்தப்படும் போது சகலருக்கும் இயல்பாகவே நாட்டின் மீது பற்று வந்துவிடும். இதை விடுத்து இனங்களுக்கிடையில் பாகுபாடு காட்டப்படுமானால் அதன் விளைவுகள் நாட்டின் வளர்ச்சியையும் பாதித்துவிடும். இதுதான் எமது நாட்டில் நிகழ்ந்து வருகின்றது.

இலங்கை பூகோள ரீதியில் முக்கியமானதொரு இடத்தில் அமைந்திருக்கின்றது. நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் மீன் வளத்துக்குக் குறைவில்லை. ஆனால் இன்று கூட வெளிநாடுகளிலிருந்து தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கள். இறக்குமதியாகின்றன. இவை மட்டுமல்ல முக்கிய உணவுப் பொருள்கள் பலவும் வெளிநாடுகளிலிருந்தே இங்கு வந்து சேருகின்றன. நிலவளமும், நீர் வளமும் இங்கு நிறையவே இருந்தும் இந்த அவல நிலை நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து தொடர்கின்றது. சாமானிய மனிதர்களின் வாழ்க்கை நரகமாகவே மாறிவிட்டது.

இலங்கையின் ஆட்சியாளர்கள் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதத்தை இனியும் பாராட்டிக் கொண்டிராது அனைத்துச் சமூகங்களையும் அரவணைத்துச் செல்வதன் மூலமாக இந்த நாட்டின் பொருளாதாரத்தை நிச்சயமாக நல்ல நிலைக்குக் கொண்டுவரமுடியும். இனவாதம், மதவாதம் என்பன இல்லாதொழிக்கப்படும் போது இந்த நாடு சிங்கப்பூரை விட பல மடங்கு உயர்ந்த நிலைக்கு வந்து விடும். சிந்திப்பார்களா ஆட்சியாளர்கள்?

போதைப் பொருள் எதிர்ப்பு நாள் இன்றாகும்

# குடிப்பழக்கத்தை கட்டுப்படுத்துவது யார்?

ஆதவன்

"தண்ணி அடிக்கிறதில்லையா?" இதற்கான பதில் இல்லை என்று கொடுக்கப்பட்டால் பதில் சொன்னவர் நாகரிகமற்றவர் என்ற ஒரு பார்வை எமது சூழலில் உருவாகி இருக்கின்றது. வயது, பால் வேறுபாடு கடந்து "தண்ணி அடித்தல்" என்று செல்லமாகச் சொல்லப்படும் மதுப்பாவனை நாளுக்கு நாள் இலங்கையில் அதிகரித்துச் செல்கிறது. 2000 இல் இலங்கையில் 52.4 மில்லியன் லீற்றர்களாக இருந்த மதுப்பாவனை, 2009 இல் 75.1 மில்லியன் லீற்றர்களாக ஆக உயர்வடைந்திருக்கின்றது. இந்த ஆண்டில் அதன் உயர்வு இன்னும் பல மடங்காக அதிகரித்திருக்கலாம். ஏனெனில் 2009க்குப் பின்னரான இலங்கையில் பொருளாதார நிலையிலும் , சமூக வழக்காறுகளிலும் , பழக்க வழக்கங்களிலும் பெரும் மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது. குறித்த காலப் பகுதியில் இலங்கையை நோக்கிப் படையெடுத்த வெளிநாட்டு நுகர்வுக் கலாசாரமும், சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வரவும் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாட்டில் இந்த மாற்றம் தவிர்க்க முடியாததாயினும் கட்டுக்குள் கொண்டுவரமுடியாத ஒன்றல்ல. ஆனால் அதைக்கட்டுப்படுத்துவதற்கு அரச தரப்பே பின்நிற்பது வியப்பான விடயம்.

அதிகரித்த மதுப்பாவனையால் பாதிக்கப்படுவது சாதாரண "குடிமகனே". அனேகமாக ஆளை விழுங்கும் குடிப்பழக்கத்துக்கு உள்ளாகியிருப்பவர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் ஆண்களே. மதுச்சாலைகளிலும் அதனை அண்டிய வீதிகளிலும் பேருந்து நிலையங்களிலும் இவர்களைப் பார்க்க முடியும். மாலை வேளைகளில் சைக்கிளோடு சரிந்தும், நிஜமாகவே மரணித்தவர் போல மயங்கிக் கிடப்பர். அவர்களின் முகத்தில் வறுமை, அப்பா ஏதாவது வாங்கி வருவார் என்ற எதிர்பார்ப்போடு குடிசையில் காத்திருக்கும் குழந்தைகளின் கனவுகள் , அடுத்த வேளை உணவுப் பொழுதை சமாளிக்கத் திணறும் மனைவியின் மனநிலை, வாசலில் தட்டிக்கொண்டிருக்கும் கடன்காரர்களின் தொல்லை என்பன தெரியும். ஆனால் மதுப் போதைக்கு அடிமையானவர்கள் இங்கு குறிப்பிட்ட எந்த மனித உணர்வுகளையும் கவனத்தில் எடுப்பதில்லை. பிள்ளையின் கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணத்தையோ, மனைவி ஐந்து பத்தாக சமையலறையில் சேமித்து வைத்த சில்லறைகளையோ , கடைசியாக மிஞ்சி மனைவியின் காதில் மின்னிக் கொண்டிருக்கும் தோடுகளையோ திருடிக் கொண்டுபோய் குடித்து அழித்துவிடுவதிலேயே தமது முழு நாளையும் செலவழிப்பர்.



இந்த வகைப்பட்ட மனிதர்களால் சமூகத்துக்கு எந்தப்பயனும் இல்லை. அவர்களால் நிகழ்கால சமூகமும், எதிர்கால சமூகமும் நாசமடைவது மட்டுமே நிகழ்கின்றது. வறுமைக் கோட்டுக்குட்பட்டு குடிகாரர்களாய் இருப்பவர்களின் பிள்ளைகள் கல்வியில் பின்னடைவைச் சந்திக்கின்றனர். அதில் அக்கறை காட்டினாலும், அவர்களின் உடற் சுகாதாரம் அதற்குப் போதிய இடம் கொடுப்பதில்லை. உணவுப் பழக்க வழக்கங்களும் ஆரோக்கியமான குடும்ப சூழலும், சுகாதாரமும் நல்ல கல்விக்கு அவசியமாக இருப்பதால் பிள்ளைகளால் அதில் பெரிதாகச் சாதிக்க முடிவதில்லை. ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் தாயின் அக்கறை மட்டும் போதாது. பெற்றோரின் கூட்டு முயற்சியினாலேயே பிள்ளையின் வெற்றி சாத்தியமாகிறது. இந்த இடத்தில் அப்பா குடிகாரனாக இருந்தால் ?

வருடாவருடம் மது ஒழிப்புத் தினத்தையும் போதைப்பொருளுக்கு எதிரான தினத்தையும் அதற்கான பாடசாலை மட்ட கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளையும் நடத்துவதால் மட்டும் மதுப்பாவனையை கட்டுப்படுத்த முடியாது. முதலில் அரசின் பொறுப்பின் கீழ் வரும் மதுபான நிலையங்களை மூட வேண்டும். அதுவே ஆரோக்கியமுள்ள அரசுக்கு பொருத்தமான நடவடிக்கை ஆகும். ஒரு புறத்தில் தாராள விலையில் மதுவை விற்பனை செய்து கொண்டு மறுபுறத்தில் அதற்கு எதிராக விளம் பரம் செய்வதில் எந்தப் பயனும் நிகழப்போவ தில்லை. குறித்த ஆண்டுகாலப் பகுதிக்குள் குடிப் பழக்கத்துக்கு உள்ளாகும் இளையவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்றது. கட்டுப்பாடற்ற நிர்வாக நடைமுறை , சினிமா, கலாசார சீரழிவு என்பன இதற்குரிய காரணங்களாக இருக்கின்றன. சுய ஒழுக்கம் மிக்க மனிதர்கள் வாழ்ந்த இந்த இடத்தில் இன்று ஒழுக்கமே அற்ற, ஒழுக்கம் என்றால் என்ன என்று கேட்கின்ற ஒரு தலைமுறையே உருவாகி விட் டது. அவர்களாலேயே அதிகளவான குற்றச் செயல்களும் நடக்கின்றன. கொள்ளை, கொலை, வன்புணர்வு, வாள்வெட்டு- உயிர் எடுப்பு என்பன தாராளமாக நிகழ்த்தப்படுகின்றன. ஆனால் சட்டத்தைக் கையில் வைத்திருப்போர் அது குறித்து எந்த அக்கறையும் காட்டுவதில்லை. இதனால் வருடாவருடம் மது ஒழிப்பு தினமும் கொண்டாடப்பட, குடிப்பழக்கத்துக்கு உட்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்தே செல்கின்றது.

# இராணுவத்தில் தமிழர்களை இணைப்பது அவர்களுக்கு எதிரான காய் நகர்த்தலே

வாசகர் திருமுகம்

தமிழர் இளைஞர், யுவதிகள் இராணுவத்தில் இணைந்தால் 30 ஆயிரம் ரூபா சம்பளம் கொடுக்கிறோம். சிவில் வேலைகளில் ஈடுபடுத்துகிறோம் என்று ஆசை வார்த்தை காட்டுகிறது இராணுவம். கிராம சேவகர் மூலம் வீடு வீடாகச் சென்று கட்டாய ஆள்சேர்ப்பில் இராணுவம் தற்போது ஈடுபட்டுள்ளது.

இந்த ஆள்சேர்ப்பு தமிழினத்தைப் பிளவுபடுத்துவதற்கும் தமிழின உரிமைப் போராட்டைத்தைக் காட்டிக்கொடுக்கவுமே வழிவகுக்கும்.

தொழிலின்மை, குடும்பக் கஷ்டம் காரணமாக தமிழ் இளைஞர், யுவதிகள் இராணுவத்தில் சேர்வதற்கு உந்தப்படலாம்.

ஆனால் அவர்கள் இராணுவ சேவையிலுள்ள கஷ்டங்கள், முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் பற்றி அறியாமலும் தமிழினத்துக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளைப் பற்றி உணராமலும் இருக்கிறார்கள்.

இராணுவத்தில் இணைந்து கொள்ளும் தமிழ் இளைஞர், யுவதிகள் இராணுவச் சீருடை அணிந்து பகலிலும் இரவிலும் இராணுவ முகாம்களிலேயே தங்க வேண்டும். அனுமதியின்றி விடுமுறை எடுக்கமுடியாது. இராணுவ சேவையிலிருந்து விலகுவதும் கஷ்டம். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும்.

இராணுவத்தில் இணையும் தமிழ் யுவதிகளின் நிலைமை சிங்கத்தின் கூண்டுக்குள் நுழைந்து விட்ட பெண்மான் எதிர்கொள்ளும் நிலையைப் போன்றதாகவே இருக்கும்.

தமிழினத்தின் நலன்களுக்கும் உரிமைகளுக்கும் எதிராக இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளிலும் இராணுவத்தில் உள்ள தமிழர்கள் ஈடுபடுத்தப்படலாம். மேலும், இராணுவத்தில் உள்ள தமிழர்கள் உளவுப் படையணியாகவும் பயன்படுத்தப்படலாம். இராணுவத்தில் உள்ள தமிழர்களும், அவர்களின் குடும்பத்தினரும் மற்றும் அவர்களின் உறவினர்களும் இராணுவத்தின் ஆதரவாளர்களாக மாற்றப்படலாம்.

தமிழர் காணிகளில் இராணுவ முகாம்கள் அமைத்தலிலும், விவசாயப் பண்ணைகளை நிறுவி அதில் தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் ஈடுபடுத்தலாம். இதனால் நில அபகரிப்பு, இராணுவமயமாக்கலுக்கு எதிரான போராட்டங்கள் பலவீனப்படலாம்.

சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக பல்லாயிரக் கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் மண் மீட்புப் போரில் ஈடுபட்டு உயிர்த்தியாகம் செய்திருக்கிறார்கள். அதே சிங்கள இராணுவத்தில் தற்போது தமிழ் இளைஞர், யுவதிகள் இணைவது என்பது அந்த மாவீரர்களுக்கு செய்யும் அப்பட்டமான துரோகமாகும். இது தமிழ் நாட்டு ஈழத்தமிழர் அபிமானிகளான வைகோ, சீமான், நெடுமாறன் போன்றோரின் முகத்தில் கரிபூசுவதாகவே அமையும். வன்னிப் போரில் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் (மரண) ஓலம் கேட்டு வேதனை தாங்காமல் தீக்குளித்துத் தற்கொலை செய்த முத்துக்குமரன் உட்பட 16 பேரின் ஆன்மாக்களை இழிவுபடுத்துவது போலாகும்.

வன்னியில் நடந்த போரின்போது லட்சக் கணக்கில் தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டார்கள். தமிழ் பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்று இராணுவத்தின் மீது போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இந்தப் போர்க் குற்றச்சாட்டு தொடர்பாகவும் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்காகவும் இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையால் சர்வதேச விசாரணை விரைவில் நடைபெற ஏற்பாடு நடக்கிறது.

இலங்கை இராணுவம் (சிங்கள) இனவாதம் காரணமாகவே தமிழ் மக்களை வேண்டுமென்றே இனப்படுகொலை செய்தது என்ற குற்றச்சாட்டை மூடி மறைப்பதற்காகவே அவசர கதியில் இராணுவத்தில் தமிழ் இளைஞர், யுவதிகளை இணைப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது. இராணுவத்தில் தமிழர்கள் இணைந்திருந்தால், போரின்போது இனவாதமாக இராணுவம் செயற்படவில்லை. பாதுகாப்பு வலயங்களில் இருந்த தமிழ் மக்கள் மீது வேண்டும் என்றே எறிகணைத் தாக்குதல், குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளவில்லை என்று வாதிக்கப் போகிறது இலங்கை இராணுவம். மேலும் தமிழ் யுவதிகள் இராணுவத்தில் இணைந்திருப்பதைக் காட்டி தமிழ்ப் பெண்களைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கவில்லை. இராணுவத்தின் ஒழுக்கமான, நேர்மையான நடவடிக்கை காரணமாகவே தமிழ் யுவதிகள் இராணுவத்தில் நம்பிக்கை வைத்து இணைந்திருக்கிறார்கள் என்று இராணுவம் வாதிக்கலாம்.



மேலும் ஐ.நா. சர்வதேச விசாரணையில் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நேரடியாகச் சாட்சியம் அளிக்கப்போகிறார்கள். இராணுவத்தில் உள்ள தமிழர்களைக் கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியமளிப்பதைத் தடுப்பதற்கும், இராணுவத்தின் மீது போர்க்குற்றம் சுமத்தாமல் செய்வதற்கும், மேலும் சாட்சியமளிப்போரை மூளைச் சலவை செய்து, போர்க்குற்றத்தை விடுதலைப் புலிகள் மீது சுமத்துவதற்கும் இராணுவம் தந்திரமாகக் காய்நகர்த்துகிறது.

போர்க் குற்றச்சாட்டிலிருந்து இராணுவம் பாதுகாக்கப்படுமானால், அது தமிழர் தரப்புக்கு அதாவது தமிழர் இனப் பிரச்சினைக்குச் சாதகமான தீர்வு கிடைக்காமல் செய்துவிடும்.

ஆகவே, தமிழ் இளைஞர், யுவதிகள் தற் போதைய சூழ்நிலையில் இராணுவத்தில் இணைவது தவிர்க்கப்படவேண்டும். இராணு வத்தில் உள்ள தமிழ் யுவதிகளைத் தமிழர்கள் திருமணம் செய்ய விரும்பமாட்டார்கள். சிங்கள இராணுவத்தினரையே திருமணம் செய்யவேண்டிய நிலைமை தமிழ் யுவதிகளுக்கு ஏற்படலாம்.

*வி. கே.*

# பீஹாரில் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டதில் 4 பேர் சாவு

## மாவோயிஸ்ட்டுகளின் சதி எனச் சந்தேகம்

புதுடில்லி, ஜூன் 26

பீஹாரில், டில்லி- திப்ருகர் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். விபத்துக்கு மாவோயிஸ்ட்டுகளின்சதியே காரணமாக இருக்கலாம் எனக் கூறப்பட்டுவந்த நிலையில், அதற்கான வாய்ப்பு இல்லை என அந்த மாநில முதல்வர் ஜித்தன் ராம் மன்ஜி தெரிவித்துள்ளார்.

மேலும், சம்பவம் நடந்த பகுதியில், தண்டவாளம் தகர்க்கப்பட்டதற்கான தடயங்கள் ஏதும் கிடைக்கவில்லை என்றார் அவர்.

இதேபோல் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும், விபத்து குறித்த விரிவான விசாரணை தொடங்கும் முன்பே மாவோயிஸ்ட் சதி என கூறுவது சரியானது அல்ல எனத் தெரிவித்துள்ளார்.

டில்லி- திப்ருகர் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயில் டெல்லியில் இருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்டது. பீஹார் மாநிலம் சாப்ரா ரயில் நிலையத்துக்கு நேற்று அதிகாலை 2 மணி அளவில் வந்தடைந்தது.

சாப்ரா ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே தடம் புரண்டது.

இது குறித்து, ரயில்வே செய்தி தொடர்பாளர் சக்சேனா கூறுகையில்பி-1,பி-2,பி-3,பி-4ஆகிய 4 பயணிகள் பெட்டிகள் மற்றும் சமையல் அறை கொண்ட பெட்டி ஆகியன தலைகீழாகக் கவிழ்ந்தன. பி-5 முதல் பி-10 வரையிலான பெட்டிகள் தடம் புரண்டன என்றார்.



தடம் புரண்டு விபத்துக்குள்ளான ரயில்

ரயில் விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள ரயில்வே அமைச்சர் சதானந்த கவுடா, மீட்புப் பணிகளை முடுக்கிவிடவும், காயமடைந்த பயணிகளுக்குச் சிறப்பான முறையில் சிகிச்சை மேற்கொள்ளவும் ரயில்வே துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் உத்தரவுக்கு இணங்கி மத்திய கிழக்கு ரயில்வே உயர் அதிகாரிகளும், மருத்துவக் குழுவினரும் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

ரயில்வே அமைச்சர் சதானந்த கவுடாவும் சம்பவ இடத்துக்கு நேரில் சென்றார். ரயில் விபத்து பின்னணியில் மாவோயிஸ்ட்டுகளின் சதி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக விசாரணை அடிப்படையில், தண்டவாளத்தில் குண்டுவெடிப்புக்கான அறிகுறி இருப்பதாகவும் அதுவே ரயில் தடம்புரள காரணம் எனவும் ரயில்வே வாரிய தலைவர் அருனேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இதேபோல், ராஜ்தானி எக்ஸ்பிரஸ் கோல்டன் கஞ் ரயில் நிலையத்தில் இருந்து 60 கி.மீ தூரத்தில் சரக்கு ரயில் ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானதாகவும் தெரிவித்தார். இருசம்பவங்கள் குறித்தும் விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதாகவும் அவர் கூறினார். (த)

### கற்பழிப்புக் காணொலியை பேஸ்புக்கில் பதிவேற்றிய கும்பல்

புதுடில்லி, ஜூன் 26

உத்தர பிரதேசத்தில் 20 வயது இளம்பெண் ஒருவர், அவரது நண்பர் உட்பட 8 பேர் கொண்ட கொடூரக் கும்பலால் கற்பழிக்கப்பட்டுள்ளார். முஸாபர் நகரில் நடந்துள்ள இந்தக் கற்பழிப்பைக் காணொலியாக எடுத்து, குற்றவாளிகள் சமூக வலைத் தளமான பேஸ் புக்கில் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாகப் பொலிஸ் கூறுகையில், பாதிக்கப்பட்ட பெண், பொலிஸ் நிலையத்தில் கொடுத்துள்ள முறைப்பாட்டில் இந்தச் சம்பவம் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்ததாகத் தெரிவித்துள்ளார். அதில் 5 பேர் தன்னைக் கற்பழித்தனர், மற்றவர்கள் காணொலியை எடுத்தனர் என்று கூறியுள்ளார்.

பாஸ்தாடா கிராமத்தில் இருந்து இளம்பெண்ணைக் கடத்திக் கற்பழித்த அந்தக் கும்பல், இதனை வெளியே கூறினால் கொலை செய்துவிடுவோம் என்று அந்தப் பெண்ணை மிரட்டியுள்ளது. பயத்தினால் பாதிக்கப்பட்ட பெண் அப்போது பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கவில்லை. இந்நிலையில் குற்றவாளிகள் இந்தச்சம்பவம்தொடர்பான காணொலி காட்சிகளைப் பேஸ்புக்கில்வெளியிட்டுள்ளனர். இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண் பொலிஸில் முறைப்பாடு கொடுத்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

பெண்ணைக் கற்பழித்த இளைஞர்கள், ராஷித், வாஷிக், அப்துல் ரகுமான், சோகான், அபுல், மொனு, ராகுல், சாலு ஆகியவர்களுக்கு எதிராக கற்பழிப்பு வழக்குப்பதிவுசெய்யப்பட்டுவிசாரணை நடைபெற்று வருகிறது. (த)

### விஜயகாந்தின் அதிரடி ஆரம்பம்

சென்னை, ஜூன் 26

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், கட்சியின் நிர்வாகிகள் சிலரை அதிரடியாக நீக்கியுள்ளார்.

விஜயகாந்த் இது தொடர்பாக விடுத்துள்ள அறிவிப்பில்:

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் திருநெல்வேலி மாநகர் மாவட்ட கழக துணை செயலாளராகச் செயற்பட்டு வந்த எஸ்.ஜெயச்சந்திரன், அவர் வகித்து வந்த கழகப் பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்.

மேலும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பழனி நகர கழக செயலாளராகச் செயற்பட்டு வந்த டி.வெங்கட சுப்பிரமணி, அவர் வகித்து வந்த கழக பதவியில் இருந்து விலக்கப்படுகிறார் என்று தெரிவித்துள்ளார். (த)

## போயஸ் கார்டன் வீட்டை காலி செய்த ஜெயலலிதா

### குருப்பெயர்ச்சி காரணமா?

சென்னை, ஜூன் 26

முதல்வர் ஜெயலலிதா, போயஸ் கார்டன் வீட்டை விட்டுச் சில நாள்கள் சிறுதாவூர் பங்களாவில் தங்க உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குருபகவான் கடந்த 13ஆம் திகதி, வெள்ளிக்கிழமை மாலை 6:04 மணிக்கு, மிதுன ராசியில் இருந்து கடக ராசிக்குப் பெயர்ச்சியானார் என்று சோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், முதல்வர் ஜெயலலிதாவின் சிம்மராசிக்கு இந்தக் குருப் பெயர்ச்சி சாதகமானதாக இல்லை என்று சில சோதிடர்கள் கணித்துள்ளனர்.



ஜெயலலிதா

மிகப்பெரிய வெற்றியைப் பெற்றாலும், இவரால் மத்திய அரசில் பங்கு வகிக்க முடியாமல் போனதற்கு காரணம், சாதகமற்ற கிரகநிலையில்தான்.

இந்த குரு புத்தி, ஒக்ரோபர் 20ஆம் திகதி முடிந்தவுடன், மத்திய அரசில், இவரின் முயற்சியால், பல அனுகூலங்களைப் பெறலாம் என்கிறார் சோதிடர் ஒருவர்.

பல சோதிடர்கள் பலவிதமான கருத்துக்களைச் சொன்னாலும் மொத்தத்தில் இந்த குருப் பெயர்ச்சிக்கு முதல் நாள், வேறு இடத்துக்கு மாற வேண்டும்.

பிறகு, ஒரு வாரத்துக்கு எங்கும் வெளியில் செல்லக்கூடாது என்று சோதிடர்கள் சொன்னதையடுத்து, ஜெயலலிதா சிறுதாவூர் சென்று வந்துள்ளார். (த)

## 400 நோயாளிகளுக்கு விலங்கு ஊசி மருந்து

### ஏற்றியது ஜோத்பூர் அரச மருத்துவமனை

ராஜஸ்தான், ஜூன் 26

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ள அரச மருத்துவமனையில் விலங்குகளுக்குச் செலுத்தும் ஊசி மருந்தை நோயாளிகளுக்குச் செலுத்தியமை அம்பலமாகியுள்ளது.

சுமார் 400 பேருக்கு இந்த விலங்கு ஊசி மருந்து செலுத்தப்பட்டுள்ளமை, இந்திய மருத்துவ உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

'மெரோபீனம்' என்ற அந்த ஊசி மருந்து விலங்குகளுக்குரியது. கொடுமை என்னவெனில், அரசின் இலவச மருந்துத் திட்டத்தின் கீழ் இந்த மருந்தை அரச மருத்துவமனை வாங்கியுள்ளது.

கொடுமை என்ன வெனில், அரசின் இலவச மருந்துத் திட்டத்தின் கீழ் இந்த மருந்தை அரச மருத்துவமனை வாங்கியுள்ளது.

விலங்குகளுக்குக் கொடுக்கும் மருந்தை மனிதர்களுக்கு ஊசி மூலம் ஏற்றுவது என்றால், எந்த மருந்து எதற்குக் கொடுப்பது, யாருக்குக் கொடுப்பது என்ற தகவல்களைக்கூட அறியாத ஊழியர்களா அங்கு பணியாற்றி வருகின்றனர் என்று பொதுமக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

நல்லவேளையாக இதுவரை பக்க விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டாலும், நீண்டகாலப் பக்க விளைவுகளுக்கு அரச மருத்துவமனை பொறுப்பேற்குமா? என்று அந்தப் பகுதி மக்கள் ஆவேசமடைந்துள்ளனர்.

மெரோபீனம் என்ற இந்த மருந்து ஓர் அன்ட்டிபயோட்டிக் ஆகும். கிட்னி, நுரையீரல் தொற்று நோய்க்கு கொடுக்கப்படும் மருந்தாகும். இது விலங்குகளுக்குரியது.

இந்த விவகாரம் குறித்து ராஜஸ்தான் அரசு உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. இன்னமும் எத்தனை மருத்துவமனைகளில் இந்த மருந்து நோயாளிகளுக்குச் செலுத்தப்பட்டுள்ளது என்ற விவரத்தை இன்னமும் ஒரு வாரத்துக்குள் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (த)

## மோடியின் சம்பளம் எவ்வளவு தெரியுமா?


புதுடில்லி, ஜூன் 26

இந்தியப் பிரதமர் மோடியின் சம்பளம் பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.

உலகநாடுகளில் அதிக வேலைப்பளு கொண்ட இந்தியப் பிரதமருக்குத்தான், குறைந்த சம்பளம் என்று புள்ளிவிவரங்கள் நிரூபிக்கின்றன.

இந்தியப் பிரதமருக்கு மாதம் 50 ஆயிரம் இந்திய ரூபா அடிப்படைச் சம்பளம், இது தவிர செலவினங்களின்படி, தினசரிப்படி மற்றும் அலுவலகப்படி உட்பட மொத்தம் மாதத்துக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் இந்திய ரூபா வழங்கப்படுகிறது.

மேலும், பிரதமரின் உபயோகத்துக்குக் கறுப்பு நிற பி.எம். டபிள்யூ 7 வரிசை கார் அதிக பட்ச பாதுகாப்போடு வழங்கப்படுகிறது.



நரேந்திர மோடி

இந்தக் கார் குண்டு துளைக்காத வகையிலும் வெப்பத்தைத் தாங்கக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டில்லியில் வாழ்நாள் முழுவதும் தங்குவதற்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படும். அந்த வீட்டுக்கு வாடகை, மின் கட்டணம், குடிதண்ணீர் வரி என எதுவும் விதிக்கப்படமாட்டாது. (த)


## நைஜீரியாவில் மீண்டும் பெண்கள் பலர் கடத்தல்

அபுஜா, ஜூன் 26
நைஜீரியாவில் போகோ ஹறாம் தீவிரவாதிகள் மேலும் பல பெண்களையும் சிறார்களையும் கடத்திச் சென்றுள்ளனர்.
இதனை நைஜீரிய அரச தரப்பு உறுதி செய்துள்ளது.
கடந்த வாரங்களில் தாக்குதல் நடத்தப்பட்ட பொர்னோ பிரதேசத்தில் இருந்து சுமார் 60 பெண்களும், சிறார்களும் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது போராளிகளை விடுதலை செய்தால், கடத்திச் செல்லப்பட்டோரைத் தாம் விடுவிக்க முடியும் என போகோ ஹறாம் தீவிரவாதிகள் அறிவித்துள்ளார்கள்.
ஏற்கனவே கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி போகோ ஹறாம் தீவிரவாதிகளால் சுமார் 200 பள்ளி மாணவிகள் கடத்திச் செல்லப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# தரையிறங்கிய விமானம் மீது பாகிஸ்தானில் துப்பாக்கிச் சூடு

## பயணி ஒருவர் சாவு ; மூன்று பேர் காயம்

இஸ்லாமாபாத், ஜூன் 26
பாகிஸ்தானில் விமான நிலையத்தில் தரையிறங்கிய பயணிகள் விமானம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவத்தில் பயணி ஒருவர் உயிரிழந்தார். விமான ஓட்டி உட்பட 3 பேர் காயம் அடைந்துள்ளனர்.
காயம் அடைந்தவர்கள் அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.
பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள விமான நிலையத்தில் தரையிறங்கிய சர்வதேச விமானம் ஒன்றின் மீது மர்ம மனிதர்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.
பெஷாவர் விமானநிலையத்தில் நேற்று முன்தினம் இரவு சவூதி அரேபியாவில் இருந்து வந்த சர்வதேச விமானம் தரையிறங்கியது. அப்போது மர்ம நபர்கள் விமானம் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.
துப்பாக்கி ரவைகள் பயணிகளை நோக்கிப் பாய்ந்துள்ளன. விமானத்தில் இருந்த பெண் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தார். பெண்ணின் மகள், எனது தாய் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துவிட்டார் என்று கதறி அழுதார். இதனையடுத்து பயணிகள் பீதி அடைந்தனர். விமானத்தில் இருந்து இறங்க அவர்கள் மறுத்துள்ளனர்.
சம்பவம் குறித்து தகவல் அறிந்த பாதுகாப்பு படையினர் விமான நிலையத்தைச் சுற்றி வளைத்தனர்.
விமானம் மீது 6 ரவைகள் பாய்ந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.
துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியவர்களைத் தேடும் வேட்டையில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.
இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (த)



துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த பயணியின் சடலம்



ஈராக் தேசிய இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் பணிகள் அங்கு தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. தற்போது அங்கு கிளர்ச்சியாளர்களுடன் நடைபெறும் மோதலின் போது படைப் பற்றாக்குறை உள்ளமையால் ஆள்சேர்ப்பு இடம் பெறுகிறது. படையில் இணைவதற்கான நேர்முகத் தேர்வுக்குத் தோற்றுவதற்காகக் காத்திருக்கும் இளைஞர்கள். (த)

## நாட்டின் முன்னேற்றத்துக்கு சொத்தை வழங்கும் ஜனாதிபதி



அப்தல் பட்டா எல் சிசி

கெய்ரோ, ஜூன் 26
நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காகத் தமது சொத்தின் அரைவாசிப் பகுதியையும் சம்பளத்தின் பாதியையும் வழங்குவதாக எகிப்து ஜனாதிபதி அப்தல் பட்டா எல் சிசி தெரிவித்துள்ளார். எகிப்து மக்களுக்காக தாம் இதனைச் செய்வதற்கு முன்வந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தமது நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் அதிக பற்றாக்குறை நிலவுவதை ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.
தம்மால் வழங்கப்படும் நிதியின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என அப்தல் பட்டா அல் சிசி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
தமக்கு கிடைக்கும் ஊதியத் தொகையான 6 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் தமக்கு அதிகமெனக் குறிப்பிட்ட எகிப்து ஜனாதிபதி, அதன் பாதியை நாட்டுக்காகச் செலவிடுவதில் மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த)

## ரஷ்யாவை கடுமையாக எச்சரிக்கின்றார் ஒபாமா

வாஷிங்ரன், ஜூன் 26
உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவதை நிறுத்துமாறும், பிரிவினைவாதிகளுக்கு ஆதரவு அளிப்பதை தவிர்க்குமாறும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கோரிக்கை விடுத்துள்ளார். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.



பராக் ஒபாமா

இந்த வேண்டுகோளை ரஷ்யா நிறைவேற்றாவிட்டால், மேலும் பொருளாதார தடைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என ஒபாமா எச்சரித்துள்ளார்.
இந்தத் தொலைபேசி உரையாடலின்போது உக்ரைனுக்கும் அந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள பிரிவினைவாதிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்றும் ஒபாமா வலியுறுத்தினார்.
இதற்கிடையில், பிரிவினைவாதிகள் தரப்பு உக்ரைன் ஜனாதிபதி பற்றோ பொரஷெங்கோ அறிவித்துள்ள போர் நிறுத்தத்தை அவதானிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.
உக்ரைன் ஜனாதிபதியின் 15 அம்ச சமாதானத் திட்டத்தின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டுள்ள போர் நிறுத்தம், எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று நிறைவடைகின்றது. (த)


# 1942 இல் தவறவிட்ட பட்டத்தை 89 வயதில் பெற்றுக்கொண்ட நபர்

நியூயோர்க், ஜூன் 26
1942 ஆம் ஆண்டு கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கு பற்றத் தவறியதால் உயர் கல்விப் பட்டத்தைத் தவறவிட்ட ஒருவர் 72 வருடங்களின் பின் இப்போது 89 வயதில் அந்தப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.
அமெரிக்காவைச் சேர்ந்த ஜப்பானியரான டொன் மியாடா, 1942 ஆம் ஆண்டு நியூ போர்ட் உயர் பாடசாலையில் பட்டம் பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தார்.
ஆனால், அவ்வேளையில் அமெரிக்காவும், ஜப்பானும் இரண்டாம் உலகப் போரில் மோதிக்கொண்டிருந்ததால் டொன் மியாடா உட்பட 17,000 ஜப்பானியர்கள் அரிஸோனா பாலைவனத்திலுள்ள தடுப்பு முகாமொன்றில் வைக்கப்பட்டிருந்தனர். இதனால் பட்டமளிப்புவிழாவில் டொன்மியாடா பங்குபற்ற முடியவில்லை.
கடந்த வாரம் அவர் அந்தக் கல்லூரியில் தனது பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் பட்டம் பெறுவதற்கு மேடையேறியபோது, அரங்கிலிருந்த அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (த)



டொன் மியாடா

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

**வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.**

**வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.**

**தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.**

**பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.**

### மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**

**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புகளைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

**குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**:உணர்ச்சி பூர்வமாகப் பேசுவதை விட்டு அறிவு பூர்வமாகப் பேசுவீர்கள், செயற்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**இடபம்**: கடந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள், ஏமாற்றங்களை நினைத்து அவ்வப்போது மனம் கலங்குவீர்கள். உறவினர், நண்பர்களில் சிலர் உங்களை மதிக்கமாட்டார்கள் உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.



**மிதுனம்**: சகோதர வகையில் ஆரோக்கியமான விவாதங்கள் வரக் கூடும். செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள்.



**கடகம்**: ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிடைக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நெருங்கியவர்களைச் சந்தித்து எதிர்காலம் குறித்து ஆலோசிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.



**சிங்கம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். பழைய உறவினர், நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**கன்னி**: பணப் புழக்கம் கணிசமாக உயரும். நீண்ட நாள்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். விலகிச்சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் உதவுவார்கள்.



**துலாம்**: ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைக் கையாள வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாகச் சென்று செய்வது நல்லது.



**விருச்சிகம்**: புதிய எண்ணங்கள் செயல் வடிவம் பெறும். மனைவி வழி உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வேற்று மதத்தவர்களால் ஆதாயமடைவீர்கள். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் மதிப்பார்கள்.



**தனுசு**: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.



**மகரம்**: புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறிவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய மிகுதிகள் கைக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.



**கும்பம்**: முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாய்வழி உறவினர்களுடன் மனக்கசப்பு வந்து நீங்கும். நீண்ட நாள்களாக தள்ளிப்போன காரியங்கள் முடிவடையும்.



**மீனம்**: கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். உறவுகள் தேடி வருவார்கள். விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள்.

## நாளை

**ஆனி-13 வெள்ளிக்கிழமை | 27.06.2014**

திதி: அமாவாசை பி.ப.01.48 வரை
நட்சத்திரம்: திருவாதிரை முழுவதும்
சுபநேரம்: 05.55-07.25 வரை
இராகுகாலம்: 10.25-11.55 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## நாம் பிறந்த மதம்

மிகமிகப்பண்டையநாளிலே எமது நாடு ஆன்மிகத்துறையில் பெரிதும் முன்னேறியது. அந்தப் பழம்பெரும் சரித்திரத்தை இன்று எமது கண்முன் கொண்டு வருவோம். இவ்வாறு, பழம் பெருமையை எண்ணியே மகிழ்ந்திருப்பதால் புதுமை காண முயலாதிருக்கும் ஓர் ஆபத்து உள்ளது. கடந்து போன எமது பழம் பெருமையை எண்ணி மகிழ்ந்து கொண்டேயிருப்போம்; பெருமை கொள்வோம். இந்த விடயத்தில் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பண்டைய நாள்களில் ரிஷிகள் பலர் இருந்தனர்;உண்மையை நேருக்கு நேர்கண்ட மகரிஷிகள் பலர் இருந்தனர்; இந்தப் பழம் பெருமைபேசுவதால் பயன் விளைய வேண்டுமானால் நாமும் அவர்களைப் போல ரிஷிகளாக முயல வேண்டும்.அவர்களைவிடச்சிறந்த ரிஷிகள் ஆக வேண்டும் என்பதே எனது ஆசை.

கடந்தகாலத்தில்எமது சாதனை சிறப்பானது, குறிப்பிடத்தக்கது. அதுபற்றி நான் பெருமை கொள்கிறேன். நமது இன்றைய வீழ்ச்சியால் நான் சிறிதும் மனம் தளரவில்லை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடனிருக்கிறேன். என்ன நடக்க இருக்கிறது என்பதை நன்றாக அறிந்துள்ளேன். ஏன், விதை அழிவது எதற்காக? மரமாவதற்காக. விதை அழியும்போது மரம் தோன்றுகின்றது. மரம் தோன்று முன் விதை அழிந்து விடுகிறது. அதுபோல இன்றைய வீழ்ச்சியும் நாளைய எழுச்சியையே குறிக்கிறது. இன்றைய நிலை சிறிது காலமே இருக்கும். மீண்டும் நமது மதம் எழுச்சி பெறும், என்றுமில்லாத வகையில் பலமும் புகழும் பெறும்.

நாம் பிறந்த இந்த மதத்தில் உள்ள அடிப்படையான ஒற்றுமை எதுவென்பதைப் பார்ப்போம். முதன் முதலாக எவ்வளவோ வேற்றுமைகளைக் காண்கிறோம். சிலர் அத்வைதிகள், வேறு சிலர் விசிஷ்டாத்வைதிகள், மற்றும் சிலர் துவைதிகள். அவதாரத்தைச் சிலர் நம்புகிறார்கள்;உருவ வழிபாடு செய்பவர்கள் சிலர்; அருவக் கொள்கையுடையவர்கள்சிலர்.இதேமாதிரிபழக்க வழக்கங்களிலும் எவ்வளவோ வேற்றுமைகள் உள்ளன.

# சனிக்கோளின் சந்திரனில் புதிய தீவா?



சூரிய குடும்பத்தின் முக்கிய கோளான சனிக்கோளின் மிகப்பெரிய துணைக்கோளான டைடனில் புதிய தீவு போன்ற ஒன்று தோன்றி மறைந்ததாக வானியலாளர்கள் அறிவித்துள்ளனர்.

சூரிய குடும்பத்தில் இருக்கும் ஒரு கோளான பூமிக்கு எப்படி சந்திரன் என்கிற துணைக்கோள் இருக்கிறதோ, அதே போல, சூரியக் குடும்பத்தின் மற்றொரு கோளான சனிக்கும் ஏகப்பட்ட சந்திரன்கள் துணைக்கோள்களாக இருக்கின்றன. அவையெல்லாம் சனிக் கோளைச் சுற்றிவருகின்றன.

அப்படியானவற்றில் பெரிய துணைக்கோளான 'டைடன்' என்றசனிக்கிரகத்தின்துணைக்கோள் வானியல் ஆய்வாளர்களுக்கு என்றுமே மிகவும் சுவாரஸ்யமான ஒன்று. காரணம் பூமியைப் போலவே 'டைடன்' துணைக்கோளிலும் வளிமண்டலம் இருப்பதாலும், ஹைட்ரோ காபன் என்று அழைக்கப்படும் திரவ வடிவிலான காபனும் இருப்பதாலும் வானியலாளர்களுக்கு 'டைடன்' குறித்து அறிந்து கொள்வதில் கூடுதல் ஆர்வம் இருந்துவந்திருக்கிறது.

இந்த பின்னணியில், டைடன் துணைக்கோளை படம்பிடித்த காசினி என்கிற ஐரோப்பிய ஒன்றியத்தின் வானியல் ஆய்வுக்கான பிரத்தியேக செயற்கைக் கோள் 'டைடன்' துணைக் கோளை சமீபத்தில் படம் பிடித்து பூமிக்கு அனுப்பியிருக்கிறது. அதில் இந்த டைடன் துணைக்கோளில்தீவுபோன்ற ஒன்று தோன்றி மறைந்ததாக புகைப்படங்கள் காட்டியிருப்பதாக வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இப்படி 'டைடன்' துணைக் கோளில் தோன்றி மறைந்த தீவு போன்ற திட்டுப்பகுதி என்னவாக இருக்கும் என்பதில் பல்வேறு யூகங்கள் நிலவுவதாகத் தெரிவிக்கும் சென்னையிலுள்ள பெரியார் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் இணை இயக்குநர் முனைவர் சவுந்தர் ராஜபெருமாள், இது வானியல் ஆய்வின் முக்கிய மைல்கல் என்றும் தெரிவிக்கிறார்.

CM K

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 8 | | 5 | | | |
| | 9 | 8 | | 4 | 3 | 6 | | |
| | 3 | | 6 | | | 9 | | 4 |
| | 5 | | 3 | 6 | | | | |
| | | | 9 | 1 | 2 | | | |
| | | 9 | | 7 | 4 | | 6 | |
| 3 | | 4 | | | 9 | | 2 | |
| | | 6 | 4 | 8 | | 7 | 5 | |
| | | | 2 | | 6 | | | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 9 | 2 | 5 | 8 | 3 | 6 | 1 |
| 3 | 2 | 6 | 1 | 4 | 7 | 9 | 8 | 5 |
| 5 | 8 | 1 | 9 | 3 | 6 | 2 | 4 | 7 |
| 1 | 9 | 8 | 3 | 7 | 2 | 6 | 5 | 4 |
| 6 | 5 | 4 | 8 | 9 | 1 | 7 | 2 | 3 |
| 2 | 3 | 7 | 4 | 6 | 5 | 1 | 9 | 8 |
| 4 | 7 | 2 | 6 | 8 | 3 | 5 | 1 | 9 |
| 9 | 1 | 5 | 7 | 2 | 4 | 8 | 3 | 6 |
| 8 | 6 | 3 | 5 | 1 | 9 | 4 | 7 | 2 |

# மரண அறிவித்தல்

## திருமதி சிவகாமசுந்தரி சபாரத்தினம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும், இல.275, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும், இல.101/1 - 20, மானிப்பாய் வீதி, தாவடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமசுந்தரி சபாரத்தினம் நேற்று (25.06.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காரைநகர், முல்லைபிளவு சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுபாசினி (ஆசிரியர், முதலாம் பாடசாலை, ஸ்கந்தபுரம்), சுரேஸ் (மாவட்ட விலை மதிப்பீட்டாளர், வடபிராந்தியம்), ரஜீவ் (உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர், வடபிராந்தியம்), ஆரணி (யாழ். பல்கலைக்கழக வணிகபீட முதலாம் வருட மாணவி), சிந்து (ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ முதலாம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், றூபினியின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2014) வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

101/1- 20,
மானிப்பாய் வீதி, தாவடி.

(49349)(12)(3.6)

## பரிசில் தினம்

குருநகர், ஜூன் 26
யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசில் தினம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் யாழ்.ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது.

லண்டன் புனித மரியாள் பல்கலைக்கழகத்தின் திட்டப் பணிப்பாளர் கலாநிதி டேவிட் பின்சன் பிரதம விருந்தினராகவும், இலங்கை சுங்கத் திணைக்களத்தின் அத்தியட்சகர் ஜீ. பசில் ஞானராஜ் கௌரவ விருந்தினராகவும், லண்டன் புனித மரியாள் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜோன் லைடன் சிறப்பு விருந்தினராகவும், கலந்துகொள்ள உள்ளார்கள் என சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபர் வண பிதா.ஜெறோ செல்வநாயகம் அறியத்தந்துள்ளார். (க-51)

## இலவச பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி, ஜூன் 26
தென்மராட்சி கலை மன்றத்தினர் சாவகச்சேரி அம்பிகா மருந்தக அனுசரணையுடன் சங்கீதம், பண்ணிசை ஆகிய இலவச பயிற்சி வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

பயிற்சி வகுப்புகளில் இணையவுள்ளோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு மன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் அறிவித்துள்ளார்.

மன்றத்தால் நடனம், ஓர்கன், மிருதங்கம், கிற்றார் ஆகிய வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## கூட்டம்

அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகா சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண பொதுநூலக சிற்றுண்டிச்சாலை மண்டபத்தில் தலைவர் க.நடேசு தலைமையில் நடைபெறவுள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார்.

கூட்டத்தில் முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (வ-288)

## பால் காய்ச்சும் நிகழ்வு

சாவகச்சேரி நகர சபையால் 71 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொன்விழா மண்டபத்துக்கான பால் காய்ச்சும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு இடம் பெறும் என்று நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

மண்டபத் திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாகவும், ஜூலை மாத நடுப்பகுதியில் திறப்பு விழா இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மகா கும்பாபிஷேகம்

தென்மராட்சி, ஜூன் 26
எழுதுமட்டுவாழ் விழுபளை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும். எதிர்வரும் முப்பதாம் திகதி கிரியைகள் ஆரம்பமாகி, அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெறும்.

மகா கும்பாபிஷேகக் கிரியைகள் சிவஸ்ரீ இ.குமாரசாமிக்குருக்கள், சிவஸ்ரீ வெ.தில்லையம்பலக் குருக்கள் ஆகியோர் தலைமையில் இடம் பெறும். (ஒ-9)

## இந்து சமய பொது அறிவுப் போட்டி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான இந்து சமய பொது அறிவுப் போட்டி நாளை மறுதினம் 28 ஆம் திகதி இடம்பெறுமென திணைக்களத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான பரீட்சை மண்டபங்கள் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் அட்டவணையிலுள்ள மாணவர்களைத் தவிர வேறு மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியாதெனவும் அறிவித்துள்ளார்.

நேர அட்டவணையின் பிரகாரம் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை 2,3 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கும், முற்பகல் 10.30 மணி முதல் 11.30 மணிவரை 4,5,6,7 வகுப்பு மாண்வர்களுக்கும், மதியம் 12 மணி முதல் ஒரு மணிவரை 8,9,10,11 வகுப்பு மாணவர்களுக்கும் பரீட்சை இடம்பெறும். (க)

# முதலாம் ஆண்டு நினைவு



## அமரர் யோகராஜா ஸ்ரீகாந்தன்

பிறப்பு
09.05.1981

இறப்பு
25.06.2013

திதி: 26.06.2014
(வியாழக்கிழமை)



ஆண்டு ஒன்றாகி விட்டாலும்
அன்புருவம் நினைவில் பதிந்தேயுள்ளது
மீண்டும் ஒருமுறை திருமுகம் காண
உள்ளம் கிடந்து பரிதவிக்கின்றது
மாண்டு நீர் போனாலும் மனத்திலே
பசுமையாய் குடியிருக்கின்றீர்
எம் குலத்தில் உதித்த
கலங்கரை விளக்கமே!
என்றும் நாம் மறக்கவே மாட்டோம்
உன்னை நினைத்தே நாமிங்கு
வாழ்கின்றோம்
உத்தமனே பெற்றிடுக சாந்தி
ஓம் சாந்தி!

**யோகராஜா அன்னம்மா**

(49348)
(4.3.6)

நிரந்தர முகவரி: ஆயத்தடி, மிருசுவில்.
தற்காலிக முகவரி: சில்லாலை, பண்டத்தரிப்பு.

# நலிவடைந்துவரும் பண்பாடுகளை மேல்நிலைப்படுத்த சமூக அமைப்புகள் முன்வருக

## யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத் தலைவர் பேராசிரியர் வேல்நம்பி கருத்து

அச்சுவேலி, ஜூன் 26

"நலிவடைந்துவரும் எமது பண்பாடு, கலை, கலாசார அம்சங்களை மேல்நிலைப் படுத்துவதில் சமூக அமைப் புக்கள் அக்கறை கொள்ள வேண்டும்.

பழந்தமிழ் இலக்கியங்களால் மொழியால் உயர்வு பெற்ற எமது பண்பாடு கலை, கலா சாரத்தை எவராலும் அழிக்க முடியாது. இந்த வகையில் அச்சம் கொள்ளத் தேவை யில்லை. எமது பண்பாட்டு அம்சங்கள் இளைய தலை முறைக்கு எடுத்துச் சொல் லப்பட வேண்டும்.

பெற்றோர் தொலைக்காட்சி மெகா தொடருக்கு செலவிடும் நேரத்தை குறைத்து திருக் குறள், நாலடியார் மற்றும் பாரதி பாடலில் உள்ள வாழ்வி யல் அம்சங்களை பிள்ளை களுக்கு உணர்த்த முன்வர வேண்டும்".

இவ்வாறு கூறினார் யாழ்.பல் கலைக்கழக வணிக பீடத் தலைவர் பேராசிரியர் தி.வேல் நம்பி.

அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றத்தினால் நடத்தப்பட்ட பண்பாட்டு பெருவிழா அச்சு வேலி இராசமாணிக்கம் கல் யாண மண்டபத்தில் கடந்த சனியன்று நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற பண்பாட்டு பெருவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றும் போது;

தமிழர் பண்பாடு கலை, கலா சாரம், மொழியில் இலக்கியத் தால் உயர்ந்தது. வரலாற்றுப் பெருமை கொண்டது. மொழி யால் உயர்ந்து வளர்ந்து எமது பண்பாட்டை, கலை களை, கலாசாரத்தை யாரும் அழிக்க முடியாது. இந்த வகையில் நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. மேல்நிலைப்படுத்திப் பாது காக்க வேண்டும்.

சமகாலச் சூழலில் எமது கலை, கலாசாரம், பண்பாட்டு வடிவங் களின் செயல்முறையில் வீழ்ச்சி ஏற்பட்டதை உணர முடிகின்றது. இது இடைக் காலத்தில் ஏற்பட்ட தொய்வு நிலையாகும். இதனை மேல் நிலைப்படுத்துவதற்கு சகல தரப்பினரும் முன்வர வேண் டும். இந்த முயற்சி வீடு, கிரா மம், சமூக நிறுவனங்கள் என்ற நிலையில் மேல்நிலை பெறவேண்டும். இந்த விடயத் தில் பெற்றோர் அக்கறை கொள்ள வேண்டும்.

தமிழ் இலக்கியங்கள் கூறும் பண்பாட்டு இயல்புகள் இனத்தை உயர்த்தி உள்ளன. எம்மைப் பெருமைகொள்ள வைத்துள்ளன. இதில் சம காலச் சூழலில் சிறிது வீழ்ச்சி கண்டுள்ளது. இதனை மேல் நிலைப்படுத்த வேண்டும். பெற்றோர் பிள் ளைகளுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண் டும். திருக்குறள், நாலடியார் மற்றும் பாரதி பாடலில் உள்ள வாழ்வியல் கருத்துக்களை பிள்ளைகளுக்குச் சொல் லிக் கொடுக்க வேண்டும். தொலைக் காட்சி மெகாத் தொடருக்கு ஒதுக்கும் நேரத்தை குறைக்க வேண்டும். பண்பாட்டு விழாக் களை நடத்த வேண்டும்.

போர் நடைபெற்ற காலத்தில் ஏற்பட்ட இறப்பிலும் கூடிய அளவு இறப்பு தற்போது நிகழ் கின்றது.

கொலை, வாள்வெட்டு, பெண் களுக்கான வன்முறை, கொள் ளை என இவை நீண்டு கொண்டு செல்கின்றன.

இதனை குறைத்து பண்பாட்டு சார்நிலையில் பிள்ளைகள் வாழ் வதற்கு வழிப்படுத்த வேண்டும் - என்று கூறினார். (வ-11)


## யாழில் மகேந்திரா வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

25,26 ஆகிய திகதிகளில் இலவச சேவை முகாம் நடைபெற இருப்பதால் 9.00 - 5.00 வரை

Royal Mark Pvt Ltd 126, Kandy Road, Jaffna

எனும் முகவரிக்கு உங்கள் வாகனங்களை கொண்டுவந்து பயன் பெறவும்.

தொடர்புகளுக்கு:

077 109 9066 / 077 109 9067 / 077 761 7761

கிளிநொச்சியில் 27ஆம் திகதி மகேந்திரா வாடிக்கையாளர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 109 9068 (49353) (10)



## தவறிவிட்டது

கடந்த 22.06.2014 இரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ்ஸில் பெறு மதியான ஆவணங்கள், பொருள்கள் அடங்கிய பை (சூட்கேஸ்) புத்தளம் றோட்டில் புத்தளத் திற்கும் வென்னப்புவவுக்கும் இடையில் பஸ் ஸிலிருந்து தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 117 1872/021 222 2181

(49350)(12.3.6)


# மாற்று வலுவுடையோருக்கு தொழிற் பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்.மாவட்ட வலுவிழந் தோர் புனர்வாழ்வுச் சங்கத் தினர் மாற்று வலுவுள்ளோ ருக்கான தொழிற் பயிற்சியை ஜூலை முதலாம் திகதி ஆரம் பிக்கவுள்ளனர்.

தையல், புத்தகம் கட்டுதல், கைப்பணி வேலைகள், ஒட்டுச் சித்திர வாழ்த்துமடல் தயாரித் தல், கதிரை பின்னுதல், கேக் தயாரித்தலும் அலங்காரமும் ஆகிய பயிற்சி நெறிகளை ஆறு மாத காலத்துக்கு நடத்த வுள்ளனர்.

பயிற்சிநெறிக்குமாற்று வலுவுள்ள 20 ஆண் களும், 20 பெண்க ளும் தெரிவு செய்யப் பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள் ளன. பயிற்சிக் காலத் தில் ஒரு நாளைக்கு 110 ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங் கப்படும். பயிற்சி நிறை வில் 10 ஆயிரம் ரூபா பெறு மதியான சுய தொழில் உபகர ணங் களும், 25 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கப்படும்.

பயிற்சி பெற விரும்பு வோர் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் னர் திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் உள்ளசங்கத்தலைமை அலுவலகத்தில் பதிவு களை மேற்கொள்ளு மாறு சங்கத் தலை வர் மருத்துவர் என். சிவராஜா அறி வித் துள்ளார்.

(வ-9-11)


## டுபாய்

களஞ்சிய உதவியாளர் (Store Assistant) தேவை. கணினி மற்றும் அடிப்படை ஆங்கில அறிவு அவசியம். வயது 20 - 34 வரை. தங்குமிடம், மருத்துவம் இலவசம். சம்பளம் 1600Dhs. 8 மணித்தியால வேலை.

தொடர்புகளுக்கு: 077 3957 291

(43556) (10.6)



## வாகனம் விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள ISUZU- ELF 350 மொடல், WPXX-xxxx தொடர் இலக்கம், அலுமினியம் பொடி கன்ரர் உடன் விற்பனைக்குண்டு.

(சி/10100) (4.3.6) தொடர்பு: 077 773 8715



## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



சோதிடக்கலாநிதி திருமலை

வேலுப்பிள்ளை இரவீந்திரன்

மண்ணில் 20.10.1959 விண்ணில் 29.06.2011

எங்கள் வீட்டுக்கு ஒளி வீசிக் கொண்டிருந்த எங்கள் தெய்வமே ஐயா!

திடீரென ஒளி அணைந்து எங்கள் வீட்டை இருளாக்கி விட்டு மறைந்து சென்று மூன்று ஆண்டுகள் நிறைவுற்றது.

மூன்று ஆண்டுகள் என்ன 30 ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எமை விட்டு மறையாது ஐயா.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி — சுகுணா
பிள்ளைகள் — சுகேந்திரன் (ஜுவன்), சுதர்சன், சுகன்யா.
பேரப்பிள்ளை — நித்திய நிலா

109/01, புதிய சிவன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 784 9549



## நினைவஞ்சலி

2 ஆம் ஆண்டு



தோற்றம் 26 . 07 . 1927

மறைவு 12 . 05 . 2012

அமரர் கந்தையா சோமசுந்தரம்

திதி: சித்திரை அபரபக்க சப்தமி

எம்மை ஈன்ற பெற்றோரே– எம்மை விட்டு எங்கே சென்றீர்கள் பிரிவுத்துயரில் தவிக்கின்றோம் நாங்கள் தங்களின் இன் முகத்தைக் காணாது தினமும் கலங்கி நிற்கின்றோம்–அம்மா என்று சொல்லி ஆறுதல் கொண்டோம்

முதலாம் ஆண்டு



தோற்றம் 12 . 06 . 1941

மறைவு 07 . 07 . 2013

திருமதி பார்வதி சோமசுந்தரம்

திதி: ஆனி அமாவாசை

இங்கே ஐயா என்று அழைத்து அன்புமுகம் பார்த்தோம் இன்று நாங்கள் நாதியற்று இருக்கின்றோம் உங்கள் குரல்கேளாது உங்கள் நினைவு நிற்காது எங்கள் மனதில் குடிகொண்டுள்ளது

உங்கள் ஆத்மாசாந்தியடைய வேண்டும் என்று அன்னை முத்துமாரியை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாமன் தோட்டம், அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(சி/10199)(4.3.6) குடும்பத்தினர்.



## கூறுவிலை கோரல்

இலங்கை மின்சார சபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரி யும் பொறியியலாளர், அத்தியட்சகர் மற்றும் பொருத்துனர்கள் தங்கு வதற்கான விடுதிகள் தேவை சம்பந்தமாக கேள்விப்பத்திரங்கள் கோரப் பட்டுள்ளன. இக் கேள்விப் பத்திரங்கள் மற்றும் மேலதிக விவரங்களை யும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும்

1. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் திகதி : 26.06.2014 இருந்து 10.07.2014 வரை.
2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்: 10.07.2014 பி.ப 2.00 மணி
3. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் இடம் : யாழ். ஒளி மின் உற்பத்தி நிலையம், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்.
4. கேள்விப் பத்திரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

பிரதம பொறியியலாளர்,
யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம், 40075
தொலைபேசி: 021 2242 400 / 021 2242 247



## உங்கள் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கு ஒரே தீர்வு

நெற் மீற்றர் தொழில்நுட்பத்தில்

உங்கள் மின்சாரப் பாவனையை எமக்கு அறிவியுங்கள்.

| எதிர்பார்க்கும் அலகு (மாதாந்த பாவனை) | சூரிய மின்கலத்தின் எண்ணிக்கை | Invertor கொள்ளளவு |
|---|---|---|
| 123 - 149 | 04 | 1.1 |
| 168 - 203 | 06 | 1.5 |
| 224 - 270 | 08 | 2.0 |
| 280 - 338 | 10 | 2.5 |
| 336 - 405 | 12 | 3.0 |
| மற்றும் 4,5,6,7,8,10 - 100 KW வரையான தீர்வு | | |




25வருட உத்தரவாதம்

உடன் பதிவு செய்யுங்கள்

★ உங்கள் வீட்டிற்கு "சூரிய மின்கலம்" பூட்டித் தருகின்றோம்
★ முதல் 50 வாடிக்கையாளருக்கு 25% விலைக் கழிவுடன்

எம்முடன் முகவர்களாக இணைந்து செயற்பட ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். அவர்களுக்கு சிறந்த தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:

MICRO PC SYSTEMS

Head Office
No.115C,WA Silva Mw , Colombo - 00600, Sri Lanka.
Tel:077 307 6409, 0114 000 686
E-mail: mail@micropcsystems.com

(C/10200)(10.6.3)

# அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவது ஆபத்து

## ஆஸி .மனிதஉரிமை ஆணைக்குழு கூறுகிறது

மெல்பேர்ன், ஜூன் 26

இலங்கையில் இருந்துவரும் அகதிகளை திருப்பியனுப்பும் ஆஸ்திரேலியா அரசின் செயற்பாடு ஆபத்தானது என்று தெரிவித்துள்ளது ஆஸ்ரேலியாவின் மனித உரிமைகள் ஆணைக் குழு.

இவ்வாறு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுபவர்கள் அந்நாட்டுப் பாதுகாப்பு புலனாய்வு அதிகாரிகளால் அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும், பணம் கேட்டு இரவு நேரங்களில் தனியாக அழைக்கபட்டு பயமுறுத்தப்படுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்பு, 2012 ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்டவர்களின் வழக்குகள் இதுவரைக்கும் நிறைவு செய்யப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தகவல்களை ஆஸ்திரேலியாவின் நைன் செய்திச் சேவை வெளியிட்டுள்ளது.

அகதிகளை தடுத்து வைக்கும் செயற்பாடுகளிலும் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்,என்று கோரியுள்ள ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையாளர் கில்லியம் ரைக்ஸ் கோரி, ஆஸ்திரேலியாவுக்குள் வரும் அகதிகள் உண்மையான அகதிகளா என்பதை உறுதிப்படுத்த அரசு சர்வதேச கடப்பாட்டை கொண்டிருக்கின்றது . எனவே குடிவரவுக் கொள்கையில் மாற்றங்களை கொண்டு வர வேண்டும் - என்றும் கோரியுள்ளார் என்று அந்த செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் 6, 579 பேர் அரசியல் புகலிடம் கோரிய நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் 1.428 சிறுவர்களும் அடங்குகின்றனர் என்று கடந்த செப்ரெம்பர் 5 ஆம் திகதி எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

(வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வாக்காளராக

யில். தென்னிலங்கையிலிருந்து வந்துள்ள சிங்களக் குடும்பங்கள் அத்துமீறிக் குடியமர்ந்தன. அவ்வாறு குடியமர்ந்த சிங்களக் குடும்பங்கள், தாம் குடியமர்ந்த காணிகளில் தமக்கான நிரந்தர வீடுகளை அமைத்துள்ளன. இலங்கை அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் நிதியுதவியில் மேற்படி வீடுகள் அமைக்கப்பட்டன.

நாவற்குழியில் தாம் நிரந்தரமாகக் குடியமர்ந்து விட்டதாகத் தெரிவித்து 74 குடும்பங்கள் வரையில் கிராம சேவையாளர்களிடம் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. இருப்பினும் அந்தப் பகுதியில் ஒரு சில குடும்பங்கள் மாத்திரமே நிரந்தரமாக வசித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கடந்த 15 ஆம் திகதி, நாவற்குழியில் அத்துமீறிக் குடியமர்ந்த சிங்கள மக்களுக்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ, காணி உறுதிகளையும் வழங்கியிருந்தார்.

இந்தநிலையில், 2014 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு கோரி 6 சிங்களக் குடும்பங்கள் பி.சி படிவம் ஊடாக கிராம சேவையாளரிடம் தற்போது விண்ணப்பித்துள்ளன என்று தெரியவருகின்றது. (ற-5)

### வடக்கு

பட மாட்டாது என்று தெரியவருகின்றது. 7 பிரேரணைகள் மற்றும் அமைச்சரவைத் தீர்மாணங்கள் மாத்திரமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-5)

### இந்திய[illegible]க்கான

அவரது இ[illegible] பேராசிரியர் சுதர்ஷ[illegible]விரட்ண கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம், 'ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து தனக்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக பொறுப்பேற்கவுள்ள பிரசாத் காரியவசம், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை சந்திக்கவுள்ளார். எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாக, இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. (ற-5)

### தமிழக

குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 64 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு மீன்படி அமைச்சுக்கு நேற்று ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த மீனவர்கள் தலைமன்னார் மற்றும் நெடுந்தீவுக் கடல் பகுதிகளில் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்தநிலையிலேயே அவர்கள் ஜனாதிபதியால் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி இந்திய மீனவர்களை இவ்வாறு விடுவிப்பது மூன்றாவது தடவையாகும்.

அதையடுத்து யாழ்ப்பாணச் சிறைச் சாலையில் உள்ள 24 மீனவர்களும், அனுராதபுரம் சிறையில் உள்ள 22 மீனவர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தடுப்பில் உள்ள ஏனைய 28 மீனவர்களையும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர்களும் விரைவில் விடுவிக்கப்படுவர் என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் மீன்பிடி அமைச்சின் ஆலோசகர் எஸ்.பி . அந்தோனிமுத்துவைத் தொடர்பு கொண்டபோது,

"இந்திய துணைத்தூதரகத்தில் இருந்து கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு அமைவாக இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு மீன்படி அமைச்சுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 46 மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். ஏனையவர்களை விடுவிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்கள் இன்று விடுதலை செய்யப்படுவர். அவர்களது படகுகள் எவையும் விடுவிக்கப்படவில்லை"- என்று தெரிவித்தார்.

(ற-14.5)

### மின்சாரம்

ஒரு குறுக்குப் பாதையின் ஊடாகவே அந்தக் கம்பி கட்டப்பட்டிருந்தது. இருவார காலம் அந்தப் பாதையூடே குறித்த சிறுவனும் பயணித்துள்ளான்.

சம்பவதினம், மழை பெய்திருந்தது. மின்சாரக் கம்பம் சரிந்து கட்டப்பட்ட கம்பியுடன் சாய்ந்து விட்டது. அதனால் கம்பியூடு மின்சாரம் பாய்ந்த வண்ணம் இருந்துள்ளது. அது குறித்து மின்சார சபையினர் அலட்சியத்துடன் இருந்துள்ளனர்.

இதையெல்லாம் அறியாத அந்தச் சிறுவன் வழமைபோல் மாலைவேளையில் அந்தப் பாதையூடாகக் கோயிலுக்குச் சென்றுள்ளான். அவனது கால் அந்தக் கம்பியில் தொடுகையுற, அந்த இடத்திலேயே சிறுவன் உயிரிழந்தான். சிறுவன் கோயிலிலேயே தங்கிவிட்டான் என்று தாயார் நினைத்து வாளாவிருந்துவிட்டார். மறுநாள் காலையே சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

பொலிஸார் அது தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு உடனடியாக அறிவிக்கவில்லை. மறுநாள் இரவே ஊர்காவற்றுறைப் பதில் நீதிவானுக்கு அறிவித்துள்ளனர். அதனால் சிறுவனின் சடலம் இரண்டு நாள்களாக சம்பவ இடத்திலேயே இருந்தது. மூன்றாம்நாள் காலையே அங்கு சென்று விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிறுவனின் தாயாரும் சுகவீனமுற்றவர். தந்தையார் விபத்தொன்றில் உயிரிழந்து விட்டார். சிறுவனுக்கு சகோதரன் ஒருவரும் உள்ளார்.

இது தொடர்பான வழக்கு ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அதில் மின்சார சபையின் கவனவீனமாகவே குறித்த சிறுவன் உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி கே.சுகாஷ் நட்டஈடாக 5 லட்சம் ரூபா பணம் தரப்பட வேண்டும் என்று நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

மின்சார சபையினர் மற்றும் மின்சார சபையின் ஒப்பந்தகாரர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.தியாகேந்திரன் பாதிக்கப்பட்டவர்களுக்கு 4 லட்சம் ரூபா நட்டஈடு வழங்குவதாக தெரிவித்தார். அதனை இருசாராரும் எற்றுக்கொண்டதையடுத்து 4 லட்சம் ரூபா நட்டஈடு மின்சார சபையின் ஒப்பந்தகாரரால் செலுத்தப்பட்டது. (ற-4)

### ஐ.நா. விசாரணையை

றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் எனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் சர்வதேச விசாரணைக்கு கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங் கினால் அது வடக்குக்கும் தெற்குக்குமிடையிலான உறவுப்பாலத்தில் மேலும் விரிசலை ஏற்படுத்தும் நிலைமையை உருவாக்கி விடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள விசாரணை, அதற்கு எதிராக நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, அத்துடன், இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலார் அதுல் கெசாப் வெளியிட்டுள்ள கருத்துகள் ஆகியன தொடர்பில் நேற்றுக் கருத்துத் வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நா. விசாரணைக்குழுவுக்கு எதிராக நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை சட்டம் அல்ல வென்றும், பெரும்பாலானோரின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் தீர்மானமாக அது அமைந்துள்ளது எனவும் கூறிய அவர், எனவே, சாட்சிகளை கட்டுப்படுத்து வதற்குரிய உபாயங்கள் எதுவும் அதில் இல்லை. உயர் நீதி மன்றத்தினூடாகதான் ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

" ஐ.நா. விசாரணைக்குழுவுக்கு எதிரான பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களித்துள்ளது. இந்த முடிவு சரியா, தவறா என நான் விமர்சிக்க முன்வரவில்லை. எனினும், ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும். அதாவது, வட அயர்லாந்தில் சுயாட்சிக்காக போராடிய கட்சியொன்று பிரிட்டன் இராணுவத்துக்கு எதிராக சர்வதேச விசாரணையையோ அல்லது உள்நாட்டு விசாரணையையோ ஒரு போதும் கோரவில்லை.

எனவே, சர்வதேச விசாரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கினால் அது வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான உறவுப்பாலத்தில் மேலும் விரிசலை ஏற்படுத்தும்., சர்வதேச விசாரணைக்கு எதிரானவன் நான் என் பதையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள விசாரணையை அரசு நிராகரித்துள்ளதால் சர்வதேச மட்டத்தில் எதிர்காலத்தில் எழும் சவால்களை- அழுத்தங்களை எதிர்கொள்வதற் குரிய மாற்றுத் திட்டங்கள் பற்றி அரசு சிந்திக்கவேண்டும். இதற்காக வட்டமேசை மாநாட்டை ஜனாதிபதி உடன் நடத்த வேண்டும். கட்சிகளுடன் பேச வேண்டும்."- என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ற-சி)

### விஜித

விஜிததேரர் கடந்தவாரம் காயங் களுக்குள்ளான நிலையில் பாணந்துறைப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டார். இனந்தெரியாதவர்கள் தன்னைக் கடத்திச் சென்று தாக்கினார்கள் என்று அவர் முறையிட்டிருந்தார். ஆயினும் பொலிஸார் தற்போது அதனை மறுக்கின்றனர். விஜித தேரரை எவரும் கடத்திச் செல்லவில்லை. அவர் தன்னைத் தானே தாக்கிக் கொண்டார் என்றும் கூறுகின்றனர்.

அதையடுத்தே பொய் முறைப்பாட்டைப் பதிவு செய்தார் என்று தெரிவித்து நேற்று விஜித தேரர் கைது செய்யப்பட்டார். அவர் நேற்று பாணந்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. அதுமட்டுமல்லாது, விஜித தேரர் உளவியல் பரிசோதனைக் குட்படுத்தப்படவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விஜித தேரர், கடும் போக்குடைய பௌத்த அமைப்பான பொதுபல சேனா அமைப்புக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டு வந்தமையும், அதனால் அவர் முன்னர் அச்சுறுத்தபட்டிருந்தார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

(ற)

### ஐ.நா. விசாரணை

கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது ஐ.நா. மனித உரிமையாளர் அலுவலகம்.

விசாரணைக் குழு தொடர்பிலான பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில், தற்போது அவர்களுக்கு ஆலோசனை வழங்கவுள்ள வல்லுநர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதுகுறித்து ஐ.நா. சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "இவர்கள் மூவரும், இலங்கையின் உள்நாட்டுப் போரின் கடைசி ஆண்டுகளில் இடம்பெற்றன என்று கூறப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கவுள்ள ஐ.நா. மனித உரிமை குழுவுக்கு, ஆலோசனை வழங்கவும், ஒத்துழைப்பு அளிக்கவும் உடன்பட்டுள்ளனர். விசாரணைக் குழு இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினராலும் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை நடத்தும்.

இலங்கை அரசு மற்றும் மக்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்காவிட்டாலும், தடைகளை மீறி இந்த விசாரணை முன்னெடுக்கப்படும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### ஐ.நா. விசாரணை மூலம்

இதுகுறித்து அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

"அவரின் அந்தக் கருத்து குறித்து நான் அவருக்கு நன்றியுடையவனாக இருக்கின்றேன். ஏனெனில் எமக்கு ஒரு வேளைசிலநடைமுறைவிமோசனங்கள் வரக்கூடுமோ என்று, வரப்போகும் அந்த விசாரணைகளில் இருந்து எண்ணத் தோன்றுகின்றது

வடமாகாணத்தில் இதுவரை காலமும் பலவிதமான செயற்திட்டங்களை சுவிஸ் அரசு நடைமுறைப்படுத்தி வந்தது. அவை விரைவில் முடிவுக்கு வர இருப்பதால் தொடர்ந்து தாம் இவ்வாறான செயற்திட்டங்களை வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்க வேண்டுமா என்பது பற்றி ஆராயவும், தற்போதுள்ள நிலைஎன்ன, எவ்வாறான பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கி இருக்கின்றோம் என்பது குறித்து அறியவுமே, சுவிஸ் தூதுக் குழுவினர் இங்கு வந்திருந்தார்கள்.

எங்களுடைய அலுவலர்கள் தங்களுடைய தகைமையை - திறன்களை மேம்படுத்துவதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது சம்பந்தமாகப் பேசினார்கள். எங்களுடைய தகைமைகளை மேம்படுத்துவதற்காக பல விதமான நடவடிக்கைகளை சுவிஸ் அரசு ஏற்கனவே முன்னெடுத் துள்ளது. அவற்றைத் தொடர வேண்டுமா என்பது பற்றி கேட்டிருந்தார்கள். அவற்றைத் தொடர வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டினேன்.

எங்களுடைய அலுவலர்களைக் பற்றி நான் குறை கூறவில்லை. ஆனால் போர்க் காலத்தில் அலுவலர்கள், சிரேஷ்ட அலுவலர்களாக மாறினாலும், அவர்களுடைய அனுபவமும் முதிர்ச்சியும் சற்று தடங்கலாகியது என்றுதான் கருத வேண்டும். அந்த நிலையிலே நாங்கள் அவர்களுக்கு போதிய அனுபவத்தையும் அறிவையும் அவர்களது வேலை சம்பந்தமாக பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே அவர்களிடம் நான் ஒரு கோரிக்கை விடுத்தேன். அதைத் தாங்கள் ஆராய்வதாகக் கூறினார்கள்.

எங்கள் பிரச்சினைகள் என்ன என்று கேட்டார்கள். வடமாகாணத்தில் தொடர்ந்து இராணுவம் இருப்பதால் எங்களுடைய வாழ்க்கைக்கு, பொது மக்களுடைய வாழ்க்கைக்கு அது எவ்வாறு பங்கம் விளைவிக்கின்றது, எங்களுடைய பொருளாதார விருத்திக்கு எவ்வாறு பங்கம் விளைவிக்கின்றது, சமூக விருத்திக்கு எவ்வாறு பங்கம் விளைவிக்கின்றது என்பது தொடர்பில் சுவிஸ் தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டது."- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# அடுத்த சுற்றுக்கு முதல் முறையாக கிரீஸ் பரிதாபமாக வெளியேறியது ஐவரிகோஸ்ட்



**உலகக் கிண்ணத்தில் இன்றைய ஆட்டங்கள்**

போர்த்துக்கல் எதிர் கானா (இரவு 9.30 மணி)
அமெரிக்கா எதிர் ஜேர்மனி (இரவு 9.30 மணி)
கொரியா எதிர் பெல்ஜியம் (அதிகாலை 1.30 மணி)
அல்ஜீரியா எதிர் ரஷ்யா (அதிகாலை 1.30 மணி)

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் அடுத்த சுற்றுக்கு முதல் முறையாக முன்னேறியது கிரீஸ். பிரிவு சி ஆட்டத்தில் ஐவரிகோஸ்ட் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது கிரீஸ்.

இதே பிரிவில் கொலம்பியா அணி ஜப்பானை வீழ்த்தியிருப்பதால் இந்தப் போட்டியில் ஐவரிகோஸ்ட் அடுத்த சுற்றுக்கு முன்னேற சமநிலை போதுமானது. இதனாலேயே ஐவரிகோஸ்ட் வீரர் வில்பிரெட் போனி 74ஆவது நிமிடத்தில் கோல் அடித்து சமன் செய்தது போதும் என்று கருதி அந்த அணியின் பயிற்சியாளர், த்ரோக்பா, மற்றும் ஜெர்வின்ஹோ ஆகியோரை உள்ளே அழைத்து மாற்று வீரர்களைக் களத்திற்கு அனுப்பினார்.

1-1 என்று ஐவரி கோஸ்ட் விருப்பப்படி சென்று கொண்டிருந்த ஆட்டத்தில் 90ஆவது நிமிடத்தில் எதிர்பாராதது நிகழ்ந்தது. கிரீஸ் வீரர் லாசரஸ் இடது புறம் அபாரமாக பந்தை செலுத்த அங்கு சமாரஸ் கோல் அடிக்கத் தயாரானார். ஆனால் ஐவரிகோஸ்ட் வீரர் சியோ சமாரஸை பவுல் செய்ய நடுவர் பெனால்டி கிக் கொடுத்தார்.

பெனால்டி கிக்கை அடித்த சமாரஸ் அதனை கோல் காப்பாளருக்கு இடது புறம் கோலாக மாற்ற ஐவரி கோஸ்டின் கனவு முறிந்தது.

முன்னதாக இடைவேளைக்கு முன் 42ஆவது நிமிடத்தில் ஐவரி கோஸ்ட் வீரர் டியோட் தனது பகுதியிலேயே பந்தை கோலோவுக்கு பாஸ் செய்ய நினைத்தார். ஆனால் சுற்றிலும் கிரீஸ் வீரர்கள் இருந்ததை அவர் எப்படி மறந்தார் என்று தெரியவில்லை.

பந்து கோலோவுக்குச் செல்லும் முன்பே கிரீஸ் வசம் வந்தது. கிரீஸ் வீரர் சமாரிஸ் பந்தின் மீது பாய்ந்தார், அவர் சமாரஸ் என்பவருக்கு பாஸ் செய்தார். அவர் பந்தை கோல் கம்பம் நோக்கி எடுத்துச் சென்று மீண்டும் சமாரிஸிடம் அளிக்க அவர் அதனை மிகவும் கூலாக கோலாக மாற்றி முன்னிலை பெற்றுக் கொடுத்தார்.

பிறகு ஆட்டத்தின் 74ஆவது நிமிடத்தில் கோலோ பந்தை நடுக்களத்தில் அடிக்க கிரீஸ் வீரர்கள் அவரைத் தடுக்க முயன்றனர். ஆனால் எப்படியோ அவர்களைக் கடந்து பந்தைக் கடத்தி வந்து, கோலோ அதனை ஜெர்வின்ஹோவுக்கு பாஸ் செய்தார். இடது புறம் நின்றிருந்த ஜெர்வின்ஹோ அதனை பக்கவாட்டில் இருந்த போனிக்கு அடிக்க அவர் அதனை அபாரமான கோலாக மாற்றி சமன் செய்தார்.

அதன் பிறகே 92ஆவது நிமிடத்தில் ஐவரி கோஸ்ட் தவறு செய்ய பெனால்டி கிக் கிடைத்த கிரீஸ் கோல் அடித்து ஐவரி கோஸ்டை வெளியேற்றியது. (த)

# வரலாற்று பெரு வெற்றி பதிவு செய்தது இலங்கை



வெற்றி பெற்ற இலங்கை அணி

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியதன் மூலம் இலங்கை அணி மீண்டும் தாம் ஆசியாவின் சிங்கங்கள் என்பதை நிரூபித்துள்ளது.

இறுதி டெஸ்ட் போட்டியின், நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தின் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தின் 5ஆவது பந்து வீச்சில் இலங்கையின் வெற்றி உறுதி செய்யப்பட்டது.

இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை மிகுந்த போராட்டத்தின் மத்தியில் இலங்கை அணி முதல் முறையாக கைப்பற்றிக் கொண்டது.

350 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு நேற்று முன் தினம் தமது இறுதி நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து. 5 இலக்குகள் மாத்திரம் கைவசம் இருந்த நிலையில் 293 ஓட்டங்களை பெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. இங்கிலாந்து சார்பில் மொயின் அலி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் தோல்வியைத் தவிர்க்கப் போராடினார் எனினும் அவரது போராட்டம் வீணானது.

இங்கிலாந்து அணியின் பின்வரிசை வீரர்கள் இலங்கை அணியின் வெற்றியை தாமதப்படுத்தும் வகையில் தமது ஆட்டத்தை கொண்டு சென்றனர். இறுதி 5 இலக்குகளையும் வீழ்த்துவதற்கு இலங்கை அணிக்கு மொத்தமாக 543 பந்து வீச்சுகள் தேவைப்பட்டன.

இங்கிலாந்து அணி சார்பில் ரூட் 31 ஓட்டங்களையும், பிரயர் 10 ஓட்டங்களையும், ஜோர்டன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்ட அதேவேளை புரோட் மற்றும் அன்டர்சன் ஓட்டங்கள் எதனையும் பெறாத போதிலும் மொத்தாக 79 பந்துகளை சந்தித்து இலங்கை அணியின் வெற்றியை தாமதப்படுத்தினார். இதில் ஜேம்ஸ் அன்டர்சனின் ஆட்டம் அதிக பந்து வீச்சுக்களை சந்தித்து பெறப்பட்ட இரண்டாவது அதி சிறப்பானதாகும்.

தனது இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய மொயின் அலி தனது கன்னிச் சதத்தை பூர்த்தி செய்து 281 பந்து வீச்சில் 108 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். இவர் 385 நிமிடங்கள் ஆடுகளத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன் தினம் மதிய போசன இடைவேளையுடன் நிறைவடையும் என எதிர்பார்க்கப்பட்ட போட்டி இறுதி பந்துப்பரிமாற்றம் வரை நீடித்தது.

இறுதி பந்துப்பரிமாற்றத்தை வீசிய எரங்கவினால் வீசப்பட்ட பவுன்சர் பந்து மூலமாக அன்டர்சன் ஆட்டமிழப்புச் செய்யப்பட்டார். இதன் மூலம் அனைத்து இலக்குகளையும் இழந்து 249 ஓட்டங்களை மாத்திரமே இங்கிலாந்து அணி பெற்றுக்கொண்டது. இதனால் 100 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி பெற்று டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது.

போட்டியின் நாயகனாக சதம் பெற்று அணியை சரிவிலிருந்து மீட்ட அஞ்சலோ மத்தியூஸும் போட்டித் தொடரின் நாயகர்களாக மத்தியூஸ் மற்றும் அன்டர்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

டெஸ்ட் தோல்வியினை அடுத்து முதல் முறையாக இங்கிலாந்து அணி டெஸ்ட் தர வரிசையில் 5ஆவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டது.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி 20/20, ஒரு நாள் மற்றும் டெஸ்ட் ஆகிய மூன்று தொடர்களையும் வெற்றி கொண்ட நிலையில் நாடு திரும்பவுள்ளது. (தே)

## இத்தாலி வீரரைக் கடித்த உருகுவேயின் சுவாரேஸ்

உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் இத்தாலியுடனான லீக் போட்டியின் போது உருகுவேயின் சுவாரேஸ் போட்டி விதிமுறைகளை மீறியமைக்காக அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

இத்தாலி உதைபந்தாட்ட அணியின் வீரர் ஜியோஜியோ சிலினியின் தோற்பட்டையில் கடித்து காயமேற்படுத்திய வீரர் லூயிஸ் சுவாரேஸுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக சுவாரேஸுக்கு நேற்று பிரேஸில் நேரப்படி மாலை 5 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் சம்பவம் இடம்பெற்ற போது மத்தியஸ்தர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விடயமானது மைதானத்தில் வீரர்களிடையே இடம்பெறும் சாதாரணமான விடயம் என லூயிஸ் சுவாரேஸ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்படுவாராயின் 2 வருட போட்டித்தடை விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (கு)

## யங்கம்பன்ஸ், ஞானகலா அதிரடியாக ஆடி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 26
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 10:0என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.
ஞானகலா விளையாட்டுக் கழக அணிக்கும் ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஞானகலா விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# வட மாகாணப் பாடசாலைகளின் தடகளப் போட்டி முடிவுகளில் சில

வலி. வடக்கு, ஜூன் 26
வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் வட மாகாணக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் தடகள விளையாட்டுப் போட்டிகளில் நடைபெற்று முடிந்த போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:-

**13 வயதுப் பிரிவு ஆண்கள்- நீளம் பாய்தல்**
முதலாம் இடம்-பு.பூவேந்திரன்- நெல்லியடி மத்திய கல்லூரி (4.52 மீற்றர்).2ஆம் இடம்- ஜே.பிரி அலென்-மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்,3 ஆம் இடம் -பிபாஸ்கரன்-மன்னார் கரிசல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

**15 வயதுப் பிரிவு ஆண்கள்- உயரம் பாய்தல்**
முதலாம் இடம்-கே.டிலக்சன்-கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் (1.72 மீற்றர்), 2ஆம் இடம்-எஸ். மதுசன்- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, 3ஆம் இடம்-கே.கபிலவன்-வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்.

**தட்டெறிதல்**
முதலாம் இடம்-எம் .அபிராம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 35.11 மீற்றர் (புதிய சாதனை), 2 ஆம் இடம் வி.ஆனந் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 34.84 மீற்றர் (புதிய சாதனை), 3ஆம் இடம் ஆர்.இசைவண்ணன்- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு ஆண்கள்- முப்பாய்ச்சல்**
முதலாம் இடம்-ரி.செந்துராஜன்- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (12.01 மீற்றர்), 2 ஆம் இடம்-எஸ்.சபீஸ்-யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி.3 ஆம் இடம் எஸ்.சஞ்சீவன்- பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.

**குண்டு போடுதல்**
முதலாம் இடம்-ஆர். சஜீபன்- மானிப்பாய் இந்துக் கல்லூரி (11.59 மீற்றர்), 2ஆம் இடம்- றேமியஸ் பெர்னாண்டோ- மன்னார் ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்,3ஆம் இடம் யு.சுஜீசாந்-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

**தட்டெறிதல்**
முதலாம் இடம்-வை.அபிதரன்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி. (42.46 மீற்றர்), 2ஆம் இடம்-யு.சுஜீசாந்-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி(42.39 மீற்றர்),3 ஆம் இடம்-ஜனார்த்தன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.


**19 வயதுப் பிரிவு ஆண்கள்-5000 மீற்றர் ஓட்டம்**
முதலாம் இடம்-பி.பிரசாந்- முல்லைத்தீவு கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை(16:57:8-புதியசாதனை). 2 ஆம் இடம் எஸ்.யூட்டிமோஸ்- வவுனியா இந்துக் கல்லூரி. 3 ஆம் இடம்-ஜே. ஜீசஸ் பெர்னாண்டோ-மன்னார் புனித வளனார் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன பாடசாலை.

**நீளம் பாய்தல்**
முதலாம் இடம்-எஸ். வெண்ணிலன் மார்க்-மன்னார் சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்(புதிய சாதனை - 6.83 மீற்றர்). 2 ஆம் இடம்- எம்.எப் றசான் முகமட்- மன்னார் முசலி மத்திய மகா வித்தியாலயம், 3ஆம் இடம் எம். முரளிதரன்- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**21 வயது ஆண்கள்-5000 மீற்றர் ஓட்டம்**
முதலாம் இடம்-ரி.அன்ரனி டெல்மன்-கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்(17:00:2) 2 ஆம் இடம் கே.லோகேஸ்வரன்-வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம்,3 ஆம் இடம்-ரி.தனுஜன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**நீளம் பாய்தல்**
முதலாம் இடம்-எஸ்.ஜஸ்மினன்- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (6.86 மீற்றர்), 2 ஆம் இடம் எ.ஸ்ரீ-முல்லைத்தீவு மகா வித்தியாலயம், 3ஆம் இடம்-எஸ். கௌதமன்- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

**கோலூன்றிப் பாய்தல்**
முதலாம் இடம்-எ.அன்ரனி பிரசாத்-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி (புதிய சாதனை- 3.75 மீற்றர்), 2 ஆம் இடம்- வி.லவணன்- அளவெட்டி அருணோதயக் கல்லூரி(புதிய சாதனை-3.65 மீற்றர்),
3 ஆம் இடம் பி.றிசோத் தெல்லிப்பழை மகாஜனக் கல் லூரி. (த-86)




வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் மாற்றுவலுவுள்ளோருக்கான போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. அவர்களுக்கான ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட போட்டியாளர்கள். (த - 21)

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 26
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது அண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம் பெற்ற வருகின்றன.
நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணிக்கும் சென். தோமஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைக் காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி 5:4என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் கலைஒளி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைக் காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா தாமோதரம்பிள்ளை

வரணி வடக்கைப் (தம்பான்) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா தாமோதரம்பிள்ளை நேற்று (25.06.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம், செல்வவிநாயகம், மங்கை யர்க்கரசி, சிவயோகம், சிவரூபராணி, சிவமணி (கனடா), கைலாய நாதன் (கனடா), சிவகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், இராசேஸ்வரி, சுசிலாவதி, சிவபாலசற்குணம் கந்தையாபிள்ளை காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் தெய்வேந்திரம்பிள்ளை (கனடா), பவானி (கனடா), நடராச பிள்ளை (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், இராசம்மாவின் அன்புத் தங்கையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடைக்குறிச்சி, வரணியில் அமைந்துள்ள அவரது மூத்த மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஐயங்கண்டி (வரணி வடக்கு) இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(49355) (10)

**தகவல் : குடும்பத்தினர்.**

## திக்கம் இளைஞர் வெற்றி

கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## யூனியன், உதயசூரியன் ஆட்டங்களில் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 26
ரொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் என்பன யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட் டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணிக்கும் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 10:0 என்ற கோல் கணக்கில்



வெற்றி பெற்றது.
உதயசூரியன் விளையாட்டுக் கழக அணிக்கும் ஈவினை கலை மகள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

# 9 சாதனைகள் முறியடிப்பு

வலி.வடக்கு. ஜூன் 26

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வட மாகாண கல்வி வலயங்களுக்கு இடையே யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் தடகளப் போட்டிகளில் சாதனைப் பட்டியல்கள் நீளத் தொடங்கியுள்ளன.

நேற்று முன்தினம் இரண்டாம் நாளான செவ்வாய்க்கிழமை ஒன்பது சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

15.வயதுப் பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் கடந்த காலச் சாதனையை முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களும் முறியடித்துள்ளனர்.

21 வயதுப் பெண்களுக்கான ஈட்டி எறிதலில் கடந்த காலச் சாதனையை முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களும் முறியடித்துள்ளனர்.

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதலில் கடந்த காலச் சாதனையை முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களும் முறியடித்துள்ளனர்.

21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் கடந்தகாலச்சாதனையை முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களும் முறியடித்துள்ளனர்.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தலில் முன்னைய சாதனையான 1.35 மீற்றரை கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை சேர்ந்த பி. பௌத்திரா 1.37 மீற்றர் உயரம் பாய்ந்து முறியடித்துப் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளதுடன் வர்ண விருதையும் பெறவுள்ளார்.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் முன்னைய சாதனையான 23.86 மீற்றர் என்ற தூரத்தை முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களான எஸ்.சங்கவி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பி.சானு-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யூ.கயாணி-வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் ஆகியோர், முறையே 26.07 மீற்றர், 26.02 மீற்றர், 25.39 மீற்றர் தூரம் எறிந்து முறியடித்துப் புதிய சாதனையை ஏற்படுத்தியதுடன் வர்ண விருதையும் பெறவுள்ளனர்.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் கடந்த காலச் சாதனையான 4.93 மீற்றர் என்ற சாதனையை முறியடித்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவியான எஸ். ஆராணி 4.98 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

21 வயதுப் பிரிவு பெண்களுக்கான 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் கடந்த காலச் சாதனையாக இருந்த 21:06:4 என்ற சாதனையை முறியடித்து வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவி ஆர்.சாலினி 20:43:88 என்ற புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளதுடன் வர்ண விருதையும் பெறவுள்ளார்.

21 வயதுப் பிரிவின்ருக்கான ஈடடி எறிதல் போட்டியில் கடந்த காலச் சாதனையான 29:32 மீற்றர் தூரம் என்ற சாதனையை முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களான வி.ரஜிதா-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எம்.சுபாசினி-வவுனியா மடுக்கன தேசிய பாடசாலை முறையே 34:51, 29:39 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளதுடன் வர்ண விருதையும் பெறவுள்ளார்கள்.

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் கடந்த காலச் சாதனையான 34:81 மீற்றர் என்ற சாதனையை முதல் இரண்டு இடங்களைப் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எம். அபிராம், பி.ஆனந் 35:11, 34:84 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளதுடன் அபிராம் வர்ண விருதையும் பெறவுள்ளார்.

19 வயதுப் பிரிவினருக்கான நீளம் பாய்தலில் கடந்த காலச் சாதனையான 6.71 மீற்றர் என்ற சாதனையை முறியடித்து எஸ்.வெண்ணிலன் மார்க்-மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலம் 6.83 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையை எற்படுத்தியதுடன் வர்ண விருதையும் பெறவுள்ளார்.

21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் கடந்த காலச் சாதனையான 3.56 மீற்றர் என்ற உயரத்தைத் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த எ.அன்ரனி பிரசாத், அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த வி.லவணன் முறையே 3.75, 3.65 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளதுடன் வர்ண விருதையும் பெறவுள்ளார்கள்.

(த-86)



## வென்றது எவறெஸ்ட்

யாழ்ப்பாணம், ஜூன் 26

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல். கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழாவின் போது ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தும் வீரர் இவர். (த - 21)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அராலி திருமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுமைதானத்தில் இடம்பெற்றுவருகின்றன. இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி வீண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடத்தும் உதைபந் தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி ஏ.எல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

ரொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் என்பன யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் 'பி' அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது. இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# திரேசன், அலன்ராஜ் அரைச் சதம் வென்றது யாழ். மத்திய கல்லூரி

வலி.வடக்கு. ஜூன் 26

திரேசன், அலன்ராஜ் ஆகியோர் பெற்ற அரைச் சதங்களினால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றியைப் பெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவுடன் 17 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்தப்படும் கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 116 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 08 இலக்குகளை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது.

திரேசன் 5 நான்குகள், 4 ஆறுகளுடன் 79 ஓட்டங்களையும், அலன்ராஜ் 6 நான்குகளுடன் 72 ஓட்டங்களையும், கார்த்தீபன் 28 ஓட்டங்களையும், டினோஜன், தனுசன் ஆகியோர் தலா 16 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 11 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த தேவகுமாரன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 28 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், டினோசன் 06 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 54 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கிசியந்தன் 50 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 34.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

டினோசன் 35 ஓட்டங்களையும், காருண்யன் 19 ஓட்டங்களையும், ஆரன்சன் 17 ஓட்டங்களையும், புகழினியன் 14 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச்சோந்த கார்த்தீபன் 05 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றத்துடன் 26 ஓட்டங்களுக்கு 04 இலக்குகளையும், கௌதமன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 31 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், தனுசன், திரேசன் முறையே 10,16 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள். (த-86)



# கோல் மழையால் ஜப்பானை வெளியேற்றிய கொலம்பியா

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் ஆட்டத்தில் கொலம்பி யாவும் ஜப்பானும் மோதின. இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் மைதானத்தில் களமிறங்கின.
ஆட்டத்தின் முதலாவது நிமிடத் திலேயே ஜப்பானின் ஹாசெபா பவுல் செய்தார். ஆட்டத்தின் 6 ஆவது நிமிடத்தில் கொலம்பியா வின் குவாரின் பவுல் செய்தார். ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் கொலம்பி யாவின் குவாட்ராடோ தனக்கு கிடைத்த பெனால்டி உதையைப் பயன்படுத்தி கோல் அடித்தார். ஆட்டத்தின் 45ஆவது நிமிடத்தில் ஜப்பானின் ஒகசாகி கோல் அடித்து அசத்தினார். இதன் மூலம் முதல் பாதியில் கொலாம்பியா இரு கோல் களும் ஜப்பான் ஒரு கோலும் அடித் திருந்தன.
பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியபோது 46ஆவது நிமி டத்தில் ஜப்பானின் அயோமா பவுல் செய்தார். ஆட்டத்தின் 55ஆவது நிமிடத்தில் கொலம்பியாவின் ஜக்சன் அருமையான கோல் ஒன்றை அடித்து அசத்தினார். ஆட்டத்தின் 63ஆவது நிமிடத்தில் கொலம்பியாவின் குவாரினுக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது.
மீண்டும் ஆட்டத்தின் 82ஆவது நிமிடத்தில் ஜக்சன் மறுபடியும் ஒரு கோல் அடித்தார். இறுதியாக 90ஆவது நிமிடத்தில் கொலம்பியா வின் ஜேம்ஸ் மீண்டும் ஒரு கோல் அடிக்க அந்த அணி 4-1 என்ற கோல் கணக்கில் ஜப்பானை தோற்கடித் தது. ஆட்டநாயகனாக கொலம்பியா வின் ஜக்சன் தேர்ந்தெடுக்கப் பட்டார். (த)

# இங்கிலாந்து-கோஸ்டரிக்கா சமநிலையானது ஆட்டம்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் ஆட்டத்தில் இங்கிலாந்து மற்றும் கோஸ்டரிக்கா அணிகள் மோதின. ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் கோஸ்டரிக்கா அணியின் கம்பேல் கோல் அடிக்கத் தவறினார். மீண்டும் 37ஆவது நிமிடத்தில் மீண்டும் கம்பேல் கோல் அடிக்க முயற்சி செய்து தோற்றுப்போனார். முதல் பாதி ஆட்டம் முடிந்த போது இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியபோது ஆட்டத்தின் 48ஆவது நிமிடத்தில் கோஸ்டரிக்காவின்



கம்போவா கோல் அடிக்கத் தவறினார். ஆட்டத்தின் 53ஆவது நிமிடத்தில் பார்க்லே பவுல் செய்தார்.
ஆட்டத்தின் 53ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் பார்க்லேயுக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. 90 நிமிடம் முடிந்தவுடன் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் போட்டி சமநிலை ஆனது. ஆட்டநாய கனான கோஸ்டரிக்காவின் கோல் காப்பாளர் நவாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். (த)

**PHYSICS**
A/L - 2015
By.M.கருணாநிதி B.sc (SPL)
வெப்பவியல்
சனி, ஞாயிறு 10.00 - 11.00 AM
புலங்கள்
சனி, ஞாயிறு 6.00 - 7.00 AM
ஆரம்பம் : 28/06.2014 சனி
SCIENCE CORNER
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
♦ கற்பவர்களிடம் அறியுங்கள், பிறருக்கும் கூறுங்கள்

**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல் தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், STANDARD PRONUNCIATION, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்.
பிரான்ஸ் செல்வோர் அனுமதிகளுக்கு முந்துங்கள்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி ➡ ஆலயம் ⮐ AF அல்லது ஆரியகுளம் ➡ நக்கா றோட் ➡ AF

**மிக குறைந்த விமான கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கொழும்பு – டுபாய் | – 19000 | O/W |
| கொழும்பு – சென்னை | – 21900 | RTN |
| கொழும்பு – திருச்சி | – 22400 | RTN |
| கொழும்பு – டோகா | – 26000 | O/W |
| கொழும்பு – மலேசியா | – 30000 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | – 30200 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | – 45500 | O/W |
| கொழும்பு – லண்டன் | – 44800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | – 83500 | RTN |
| கொழும்பு – அவுஸ்ரேலியா | – 98500 | RTN |
| கொழும்பு – கனடா | – 105700 | O/W |


வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
128, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

# கனவை கலைத்த உருகுவே கவலையில் இத்தாலி அணி

உருகுவேக்கு எதிரான ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் இத்தாலி தோல்வியைத் தழுவியுள்ளது.
ஆட்டத்தின் ஆரம்பம் முதலே இரு அணி வீரர்களுக்கும் இடையேயான உஷ்ணம் அதிகரித்தது. அதனால், எதிரணி வீரர்களுக்கு தடைகளை ஏற்படுத்தியவாறே ஆட்டம் 80 நிமிடம் வரை நகர்ந்து சென்றது.
ஆனால், 81ஆவது நிமிடத்தில் உருகுவேயின் அணித் தலைவர் டியாகோ கோடின் தலையால் முட்டி கோல் அடித்தார். இதனால், அடுத்த 14 நிமிடங்கள் தங்களது இதயத்தின் மீது கை வைத்தவாறே இத்தாலி ரசிகர்கள் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.
ஆனால், நேரத்தைக் கடத்திய உருகுவே இறுதியில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
டி பிரிவில் நடைபெற்ற இங்கிலாந்து, கோஸ்டரிக்கா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் சமநிலையில் முடிந் தது. லீக் சுற்றில் வெற்றியைப் பதிவு செய்யாமலே, நாடு திரும்புகிறது இங்கிலாந்து. (த)



# சிலிக்கு பயப்படும் ஸ்கொலாரி



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அடுத்த சுற்றில் முதலில் சிலி அணியை எதிர் கொள்வதன் பிரச் சினைகளை பிரேஸில் பயிற் சியாளர் அலசியுள்ளார்.
அடுத்த சுற்றில் எடுத்த எடுப்பில் சிலி அணியை எதிர் கொள்வது பற்றி பிரேஸில் பயிற்சியாளர் ஸ்கொலாரி கூறியதாவது:-
நான் சிலி அணிக்கு எதிராக இருமுறை விளையாடி யுள்ளேன். அவர்கள் எவ்வளவு கடினமான அணியினர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சிலர் நாங்கள் சிலியை எளிதில் வீழ்த்தி விடுவோம் என்று கருது கின்றனர். ஆனால் சிலி தரமான வீரர்களையுடைய அணி. எந்த அணியை எதிர்த்து விளையாட விருப்பம் என்று என்னைக் கேட்டால் நான் சிலி என்று நிச்சயம் கூறமாட்டேன்.
எங்கள் அணியின் ஆட்டத்தில் நாளுக்கு நாள் மெருகு ஏறி வருகிறது. ஆனால் சிலியை வீழ்த்த இன்னும் ஒரு படி முன்னேற்றம் தேவை. சில வேளை களில் மிகவும் நன்றாக விளையாட வேண்டும் என்று சில தவறுகளைச் செய்து விடுகிறோம், ஆனால் சிலிக்கு எதிராக தவறுகள் நிகழக் கூடாது.
ஆர்ஜென்ரீனா எப்படி லயனல் மெஸ்ஸியை நம்பியிருக் கிறதோ, அதேபோல் பிரேஸில் நெய்மரை நம்பியிருக்கிறது. நாங்கள் களத்தில் செய்யும் ஒவ்வொன் றிலும் நெய்மரின் பங்களிப்பு இருக்கிறது- என்றார். (த)

**SPOKEN ENGLISH**
உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளும் இரண்டு தொடக்கம் நான்கு வயதிற்குள்ளேயே தம் தாய்மொழியை பேசப்பழகுகின்றன. இரண்டு வருடத்தில் குழந்தை ஒரு மொழியைப் பேசப்பழகுகையில், உங்களால் ஏன் இன்றுவரை ஆங்கிலத்தைப் பேசப்பழகமுடியவில்லை?
குழந்தைகள் இலக்கணம் படித்துவிட்டு பேசத்தொடங்குவதில்லை! மாறாக மற்றவர்கள் பேசுவதை அவதானித்தே தாமும் அதுபோலப் பேசப்பழகுகின்றன. இதுபோன்ற உரையாடற்பயிற்சியின் மூலமே நாம் ஆங்கிலம் பேசப்பழக்கப்படுத்துவதால் அடிப்படை அறிவற்றவர்களாலும் கூட சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 28.06.2014 சனிக்கிழமை
1. காலை 08.00–10.00
2. காலை 10.00–12.00
3. பி.பகல் 01.00–03.00
4. மாலை 03.00–05.00
சான்றிதழ், புத்தகங்கள் மற்றும் வீடியோ DVD இலவசம்.
குறிப்பு : 3 மாத பயிற்சிநிறைவில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்கப்படும்.
SAAMSON Language School
97, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
☎ 077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.